கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



ஈழக்கவி
முருகபூபதி
இ.சு.முரளிதரன்
அ.யேசுராசா
இ.இராஜேஸ்கண்ணன்
தியத்தலாவ எச்.எவ்.ரிஸ்னா
வி.ஜீவகுமாரன்
கெகிறாவ ஸுலைஹா
ச.முருகானந்தன்
சந்திரா தனபாலசிங்கம்
சோ.ப.
சாந்திநேசக்கரம்
மஞ்சு மோகன்
வதிரி சி. ரவீந்திரன்
பாமினி
ம.பவதாரணி
சு.க.சிந்துதாசன்
சௌந்தரி
நிலாந்தினி சசிக்குமார்
சி.ரமேஷ்
த.ரிலக்சன்

115

சித்திரை - 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# POOBALASINGHAM BOOK DEPOT

**Importers, Exporters, Sellers & Publishers of Books>**

**Stationers and News Agent**

| நூலின் பெயர் | எழுதியவர் | வெளியீடு | விலை |
|---|---|---|---|
| 1. கோயில் மாடும் ஹோட்டல் பூனையும் மணிப்புலவர் மருதூர் - ஏ.மஜ | மணிப்புலவர் | மருதூர் வெளியீட்டுப் பணிமனை | 300/- |
| 2. மலையகம் - பல்பக்கப் பார்வை | சி.தனராஜ் | சிவலிங்கம் ஞாபகார்த்தகுழு | 1000/- |
| 3. நீரின் நிறம் | க.சட்டநாதன் | மறுபாதி வெளியீடு | 300/- |
| 4. வட்டுக்கோட்டை அரங்க மரபு | தில்லை நடேசன் | கருப்பு பிரதிகள் | 1125/- |
| 5. பொய்மையும் வாய்மையிடத்து | ஞா.பாலச்சந்திரன் | ஞானம் வெளியீடு | 300/- |
| 6. பூகோளவாதமும் புதிய தேசிய வாதமும் | மு.திருநாவுக்கரசு | | 1000/- |
| 7. வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவ வரை | சி.கா.செந்தில்வேல் | புதிய நீதி வெளியீட்டகம் | 300/- |
| 8. தமிழ்மொழியும் இலக்கியமும் Gr -06 | சிவகுமார் | பூபாலசிங்கம் புத்தகசாலை | 350/- |
| 9. A/L கணக்கீடு | சுதாகரன் | பூபாலசிங்கம் புத்தகசாலை | 500/- |
| 10. Gr-05 மாணவர்களுக்கான கற்றல் திறன்கள் | | பூபாலசிங்கம் புத்தகசாலை | 350/- |
| 11. சூனியத்தை நோக்கி | ஜீனைதா ஷெரிப் | பூபாலசிங்கம் புத்தகசாலை | 450/- |
| 12. நிர்வாண மனிதர்கள் | வி.ஜீவகுமாரன் | | 675/- |
| 13. புதையுண்டுபோன புராதன | திருச்செல்வம் | அருந்ததி பதிப்பகம் | 850/- |
| 14. குருக்கேத்திரன் போர் | வ.இன்பமோகன் | கிழக்கு பல்கலைக்கழகம் | 600/- |
| 15. மனமே மகிழ்ந்திடு | எஸ்.குருபாதம் | பூபாலசிங்கம் புத்தகசாலை | 700/- |

# பூபாலசிங்கம் புத்தகசாலை

**புத்தக விற்பனையாளர்கள், ஏற்றுமதி, இறக்குமதியாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள்**

**தலைமை :**

**இல. 202, செட்டியார் தெரு, கொழும்பு 11. இலங்கை.**

**தொலைபேசி: 2422321. தொலைநகல் :2337313 மின்னஞ்சல் :** pbdho@sltnet.lk

கிளைகள்:

340, செட்டியார் தெரு,
கொழும்பு - 11
தொ.பே:2395665

இல.309 A 2/3 காலி வீதி
கொழும்பு - 06
தொ.பே:4-515775, 2504266

இல.4A, ஆஸ்பத்திரி வீதி
பஸ்நிலையம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2018 - சித்திரை

# பொருளடக்கம்



**நேர்காணல்:**

சந்திரா தனபாலசிங்கம் - 33

**சிறுகதைகள்**

இ.இராஜேஸ்கண்ணன் - 15
தியத்தலாவ எச்.எவ்.ரிஸ்னா - 20
வி.ஜீவகுமாரன் - 30
கெகிறாவ ஸுலைஹா - 38
ச.முருகானந்தன் - 44

**கவிதைகள்**

சோ.ப - 17
சாந்திநேசக்கரம் - 23
மஞ்சு மோகன் - 23
வதிரி சி. ரவீந்திரன் - 24
பாமனி- 24
ம.பவதாரணி - 24
சு.க.சிந்துதாசன் - 25
சௌந்தரி - 25
நிலாந்தி சசிக்குமார் - 40

**நூல் விமர்சனம்**

சி. ரமேஸ் - 47

**அட்டைப்படம்**

த.ரிலக்சன்


அட்டைப்பட விளக்கம்:
27 வருடங்களாக முடக்கப்பட்டிருந்த
மயிலிட்டி விடுவிக்கப்பட்டதன் பின்னர்
அப்பிரதேசத்தில் பிரபலமான ஆலயங்களில்
ஒன்றான மயிலிட்டி வீரமாணிக்க தேவன்
துறை கண்ணகி அம்பாள் ஆலயத்தின்
கோபுரத்தோற்றம்

**கட்டுரைகள்**

**பேராசிரியர் சுவாமி விபுலாநந்தரும்
முத்தமிழும்**
ஈழக்கவி - 03


**அடிநிலை மக்களின் கல்விக்காக
அமெரிக்கா கார்லோனியாவிலும்
வடமராட்சி கரவெட்டியிலும்
தோன்றிய விடிவெள்ளிகள்**
முருகபூபதி - 26

D 002115



**எந்திரசாலிகளை (Robots) காதலித்த
ஐசாக் அசிமோவ்**
இ.சு.முரளிதரன் - 36

**அயல் : உ. ஏர்விழா**
அ.யேசுராசா - 41



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

**2018 சித்திரை இதழ் - 115**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 1500/=
வெளிநாடு - $ 60U.S
மணியோடர்
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K.Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY


# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

## எண்ணிய முடிதல் வேண்டும்

எந்த ஒரு கருமத்தையும் செய்யும்போது அதற்கென ஓர் இலக்கு உண்டு. இலக்கு நோக்கியே எந்தவொரு பயணமும் அமைய வேண்டும். எமது வாழ்விலும் இலக்கு நோக்கிய பயணத்தையே நாம் மேற்கொள்கிறோம்.

ஆனால், எமது வாழ்க்கையின் இலக்கு என்பது தெளிவாக வரையறுக்கப்பட்டதாக இருக்க வேண்டும். உயரிய இலக் கொன்றைத் தீர்மானித்துக் கொண்டு, அந்த இலக்கை எய்துவ தற்கான முயற்சிகளை மனத் திண்மையுடன் நாம் மேற்கொள்ள வேண்டும். இதனையே வள்ளுவரும்

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியராகப் பெறின்"

எனக் குறிப்பிட்டார். நாம் எடுத்துக் கொண்ட காரியத்தில் நாம் முயற்சி செய்தால் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் உறுதி பூண்டு முயற்சி செய்வோரே வெற்றியும் பெறுகின்றனர்.

ஆயினும், இன்றை மாணவர்களிடத்தும் பெற்றோர் களிடத்தும் "இலக்கை எய்த வேண்டும்" என்ற உறுதியும் நம்பிக்கையும் குறைவாக இருப்பதாகவே தோன்றுகின்றது. எதிர் பார்த்ததை அடைய முடியாதபோது, "இது ஆவது கிடைத்ததே" என்று திருப்தி கொள்கின்ற நிலைமை ஆரோக்கியமானதன்று. "உன்னால் முடியும் தம்பி" என்று எம் பிள்ளைகள் எல்லோரையும் ஊக்குவித்து, மனத்திண்மையை வளர்க்க வேண்டியது. எம் கடமை. அரசியலிலும் கூட, உயர் இலக்கொன்றை நிர்ணயித்துக் கொண்டாலும் சில குறிக்கோள்கள் நிறைவேறினால் போதும் என்ற நிலைமையே இன்று காணப்படுகிறது. இதன் காரணமாகவே அரசியல் தலைமை மீதும் எமக்கு நம்பிக்கை இல்லாமல் போய் விடுகிறது. ஆனால், "எண்ணிய முடிதல் வேண்டும்" என்று பாரதி கூறிய செய்தி எமக்கெல்லாம் எப்போது விளங்கப் போகிறது.

- க.பரணீதரன்

### ஜீவநதியின் பிரதி கிடைக்கும் இடங்கள்

யாழ்- பூபாலசிங்கம் புத்தகசாலை, புக்லப் - திருநெல்வேலி.
கொழும்பு வெள்ளவத்தை - பூபாலசிங்கம் புத்தகசாலை, செட்டித்தெரு
பூபாலசிங்கம், நல்லூர் பூபாலசிங்கம்
பரணி புத்தகக் கூடம் - நெல்லியடி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் முதல் தமிழ் பேராசிரியரான சுவாமி விபுலாநந்தர் தமிழ் பெரும் பங்களிப்புக்களின் ஒருவராக கணிப்புக்குள்ளாகி இருப்பவர். பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிடுவது போல, இவர் தமிழின் புகழை உலகுக்கும் உலகின் சிறப்புக்களை தமிழுக்கும் எடுத்துக் கூறியவராவர். ஈழத்துத் தமிழ் மக்களின் ஒருமைப்பாட்டைச் சுட்டுகின்ற சின்னமாகி எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஒரு சின்னமாக சுவாமி விபுலாநந்தர் விளங்குகின்றார். இவர் மட்டக்களப்புப் புலமை வரலாற்றில் இடம் பெறுகின்ற அளவுக்கு யாழ்ப்பாணத்துப் புலமை வரலாற்றிலும் இடம் பெறுகிறார். தன்னுடைய "யாழ் நூலை" இருந்து எழுதிய இடங்களில் ஒன்று மலையகத்திலுள்ள ஒரு தோட்டப்பகுதியாகும். தமிழ் பேசும் மக்களாகிய முஸ்லிம்களோடு அவர் நெருங்கிய உறவு கொண்டிருந்தார். உதாரணமாக ஏ.எம்.ஏ.அஸீஸோடு அவருக்கு நிறைந்த ஈடுபாடு இருந்தது. தன்னுடைய குழந்தைகள் இல்லத்திலே முஸ்லிம் மாணவர்களுக்கு இடம்கொடுத்திருந்தார். இதனால் ஈழத்துத் தமிழ் பேசும் மக்களுடைய ஒருமைப்பாட்டை எடுத்துக்காட்டுகின்ற மிகப்பெரிய சின்னமாக விபுலாநந்தர் திகழுகிறார். இது மாத்திரமல்ல இவையாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போல தமிழ்நாடு மட்டத்தில் சர்ச்சைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு தமிழறிஞராக விபுலாநந்தர் ஏற்றுக் கொள்ளப்பட்டார். அதனாலேதான் 1930களிற் தொடக்கப்படவிருந்த ஒரு புதிய பல்கலைக்கழகம் எங்கே அமைய வேண்டும் என்பது பற்றிய விசாரணைக் குழுவில் விபுலாநந்தர் இடம்பெற முடிந்தது. தமிழின் நவீனமயப்பாட்டிற்கு வேண்டியதாகக் கருதப்பட்ட கலைச்சொல்லாக்கக் குழுவிலே அவரால் சென்னையிலேயே கடமையாற்ற முடிந்தது. எனவே தமிழ் பேசும் மக்கள் சகலரினதும் பண்பாட்டு வாழ்வில் முக்கியமுள்ள ஒருவராக இந்த நூற்றாண்டில் தனது பெயரை பொறித்துக்கொண்டவர் (பார்க்க, "ஈழத்தின் தமிழிலக்கியச் சுடர்கள்"(ஈ.த.சு) 2010). சுவாமி விபுலாநந்தர் பன்முக திறமைகளின் மூலம் பழமையினதும் புதுமையினதும் சங்கமமாக பரிணமித்தவர்.

மட்டக்களப்பு காரைதீவில் 1892.03.27 அன்று, சாமித்தம்பி, கண்ணமையார் தம்பதியினருக்கு பிறந்தார். அவருக்கு வைக்கப்பட்ட பெயர் தம்பிப்பிள்ளை என்பதாகும். பின்னர் பெற்றோர் மயில்வாகனன் என்ற பெயரை இவருக்கு சூட்டினர் (சிறுவயதில் நோய்வாய்ப்படவே கதிர்காம முருகனின் பெயராகிய "மயில்வாகனன்" எனும் பெயரை பெற்றோர் சூட்டியதாக சொல்லப்படுகின்றது). பின்னர் "சுவாமி விபுலாநந்தா" என்ற துறவறப்பெயர் பெற்றார். மயில்வாகனன் ஆரம்பக் கல்வியை தந்தையாரின் வழிகாட்டலின் கீழ் பயில ஆரம்பித்தாலும், காரைதீவு வைத்திலிங்க தேசிகர், மெண்கோவை கந்தையா பண்டிதர், கயிலாயபிள்ளை முதலியோரிடமும் பயின்றார். 1904 ஆம் ஆண்டில் கல்முனை மெதடிஸ்த மிஷன் ஆங்கில பாடசாலையிலும், 1907ஆம் ஆண்டில் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியிலும் கல்வி கற்றார். கேம்பிரிட்ஜ் சீனியர் (Cambridge Senior) பரீட்சையில் சித்தியடைந்த அவர், புனித மைக்கல் கல்லூரியில் ஆசிரியராகச் சிலகாலம் பணி புரிந்தார். கொழும்பு அரசினர் ஆசிரிய

ஈழக்கவி

# பேராசிரியர் சுவாமி விபுலாநந்தரும் முத்தமிழும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சிக் கல்லூரியில் இரண்டாண்டுகள் பயிற்சி பெற்றார். அங்கு விரிவுரையாளராக இருந்த தென் கோவை கந்தையா பிள்ளையிடம் பண்டைய தமிழ் இலக்கியங்களைக் கற்றார். 1912ஆம் ஆண்டு பயிற்றப்பட்ட ஆசிரியர் என்ற சான்றிதழுடன் மீண்டும் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியில் ஆசிரியராக இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தார்.

1915ஆம் ஆண்டு கொழும்பு அரசினர் தொழிநுட்பக் கல்லூரியில் சேர்ந்து விஞ்ஞானம் பயின்று, 1916இல் விஞ்ஞானத்தில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றார். அத்துடன் மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய தேர்வில் தோற்றி பண்டிதர் பட்டத்தையும் பெற்றார். இலங்கையிலிருந்து இப்பட்டத்தை முதன்முதல் பெற்றவர் சுவாமி விபுலானந்தரே ஆவார். கொழும்பு அரசினர் தொழினுட்பக் கல்லூரியில் இரசாயன உதவி விரிவுரையாளராக பணியாற்றினார். அவரின் விரிவுரைகள் மாணவர் மத்தியில் பெரும் சிறப்பைத் தேடிக் கொடுத்தன. 1917ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலுள்ள புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் பௌதிகவியல் ஆசிரியராகச் சேர்ந்து பணியாற்றிய காலத்தில் தனது சொந்த முயற்சியில் கற்று, இலண்டன் பல்கலைக்கழகம் நடத்திய விஞ்ஞானமாணிச் பி.எஸ்.சி (B.Sc) தேர்வில் 1920ஆம் ஆண்டு சித்தியடைந்தார். மயில்வாகனனாரின் மொழிப் புலமையையும் ஆற்றலையும் அறிந்த மானிப்பாய் இந்துக் கல்லூரி முகாமையாளரும், திருப்புகழுக்கு உரை எழுதியவருமான வழக்கறிஞர் திருவிளங்கத்தாரின் வேண்டுகோளுக் கிணங்கி மானிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டார். இந்நிலையில் 1924 ஆம் ஆண்டு சென்னை சென்ற மயில்வாகனனார் அவ்வாண்டு சித்திரை மாதம் பௌர்ணமி நாளன்று துறவறம் பெற்றார். 1925ஆம் ஆண்டு இலங்கை திரும்பிய சுவாமி விபுலாநந்தர் இராமகிருஷ்ணமடம் சார்பில் தாம் பிறந்த காரைதீவில் பெண்களுக்கென சாராதா வித்தியாலயத்தையும் மட்டக்களப்புக்கு அருகேயுள்ள கல்லடி, உப்போடையில் சிவானந்த வித்தியாலயத்தையும் நிறுவினார்.

விபுலாநந்த அடிகளாரின் புலமையையும், ஆய்வுத் திறனையும் நன்குணர்ந்த சென்னைப் பல்கலைக் கழகத்தினர் சிதம்பரத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டிய தேவை பற்றி விதந்துரைக்க வேண்டுமெனக் கேட்டனர். சுவாமியுடைய விதந்துரையின் பின்னர், 1931இல் சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிறுவப் பட்டது. அப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர்த் தவிசினை ஏற்க அழைத்தனர். அண்ணாமலைப் பல்கலைக் கழக முதல் தமிழ்ப் பேராசிரியர் பதவியினை ஏற்று, 1933 ஆம் ஆண்டு வரை அங்கு பணிபுரிந்தார். 1943 ஆம் ஆண்டில், இலங்கையில் பல்கலைக்கழகம் இயங்கத் தொடங்க, விபுலாநந்தர் தமிழ்த் துறையின் முதலாவது தமிழ் பேராசிரியராக நியமிக்கப்படுகின்றார். அது அவரது முழுநேர ஆராய்ச்சியாக முகிழ்கின்றது. "இந்தப் பிந்திய கால கட்டத்திலேதான் அவர் இராமகிருஷ்ண மடத்தின் பிரதான நீரோட்டத்திலிருந்து விலகியிருந்தார் என்றே கூறவேண்டும். இராம கிருஷ்ண மடத்தின் முக்கியமான செயல் வீரர் என்ற நிலையிலிருந்து தமிழறிஞர் என்கிற நிலைக்கு வருகிறார்" (ஈ.த.க; 2010: 90).

தமிழறிஞர் விபுலாநந்தரின் ஆளுமைப் பரிமாணங்கள் பன்முகத்தளங்களில் விரிவுகொள்வதால் அவரை "முத்தமிழ் வித்தகர்" என்று விதந்துரைப்பர். முத்தமிழுக்கு அவர் பாரிய பங்களிப்பை நல்கியுள்ளார். "முத்தமிழ்" என்பதற்கான வியாக்கியானங்கள் தமிழில் தொன்மை காலம் முதலாக குறிக்கப்பட்டும் விளக்கப்பட்டும் வந்திருக்கின்றது. இந்த விளக்கங்கள் மொழியியல் அடிப்படையில் மிகை உணர்வை தோற்றுவித்தாலும், அறிதலில் சுவை பொதிந்துள்ளது. தமிழ்மொழிக்கு முத்தமிழ், செந்தமிழ், பைந்தமிழ், தேன்தமிழ் முதலான அடை மொழிகள் பல உண்டு. இம்மொழிகளுள் முத்தமிழ் என்பதன் விளக்கத்தை அறிவோம். இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் ஆகிய மூன்றையும் சேர்த்து முத்தமிழ் என்று குறிப்பிடுவர். இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றும் தமிழுக்கு உரியதாகையால் முத்தமிழ் எனப் பெயர் பெற்றது என உரைப்பர். இருப்பினும் அதன் உள்ளார்ந்த விளக்கம் அறிந்து இன்புறத்தக்கதாகும். ஆசிரியம் முதலான செய்யுளை இயற்றமிழ் என்றும், பண்ணோடு கூடிய பாடலை இசைத்தமிழ் என்றும், பாடி ஆடுதலை நாடகத்தமிழ் என்றும் குறிப்பர். அத்துடன், இயற்றமிழ் அறிவுக்கு விருந்தாகும். இசைத்தமிழ் அறிவுக்கும், செவிக்கும் விருந்தாகும். நாடகத்தமிழ் அறிவுக்கும், செவிக்கும், விழிக்கும் விருந்தாகும். முத்தமிழ் என்பதற்கு மேற்கூறிய விளக்கத்தைத் பேராசிரியர் அடிகளாசிரியர் பாடலாகவே இயற்றியுள்ளார்.

"இயலிசை நாடகம் எனும் பெயர் பெற்ற
மூன்று பகுப்பாய் முத்தமிழ் விளங்கும் –அவற்றுள்,
ஆசிரியம் முதலா நான்கு பாவினுள்
அறமுதற் பொருளை அமையப் பாவி
மோனை முதலாம் தொடையழகு தோன்ற
அணிபெறப் பாடுதல் இயற்றமிழ் ஆகும் - இஃது,
அறிவிற்கு விருந்தாய் அமையும் என்க
பாவினம் என்றும் பண்ணத்தி என்றும்
செந்துறை என்றும் செப்பும் பாட்டில்
அறமுதற் பொருளை அமையப் பொருத்திப்
பண்களை அமைத்துப் பாடுதல் தானே
இசைத்தமிழ் என்னும் இன்தமிழ் ஆகும்- இத்தமிழ்
அறிவிற்கும் செவிக்கும் விருந்தா கும்மே
நடித்தலுக் கேற்ற வெண்துறைப் பாட்டில்
அறமுத லாகிய பொருள்வகை அமைவரப்
பாடி ஆடுதல் நாடகத் தமிழாம் - இத்தமிழ்
அறிவிற்கும் செவிக்கும் விழிக்கும் விருந்தாம்
மூன்று தமிழ்க்கும் மெய்ப்பாடு வேண்டும்."

மேற்கூறிய பாடலுடன் "முகமும் விழியும் கருமணியும் போன்றது முத்தமிழ்க் கூறுகள்" என்றும் அடிகளாசிரியர் குறிப்பு எழுதியுள்ளார். "தெரிமாண்டமிழ் மும்மைத் தென்னம் பொருப்பான்" என்பது பரிபாடல். பரிமேலழகர் "மும்மை" என்பது எண்ணின்கண் நின்றது என்கின்றார். முத்தமிழ்க்கும் இலக்கணம் கூறும் மூவுறுப்பு அடங்கிய பிண்டமே அகத்தியம் எனப் பண்டைத் தமிழ் உரையாசிரியர்கள் எழுதி வைத்துள்ளனர்.

சிலப்பதிகாரம் முத்தமிழ் இலக்கணத்திற்கு இலக்கியமாக விளங்குகிறது என அடியார்க்கு நல்லார் உரைவழியே அறியமுடிகின்றது. "சங்கத்தமிழ் மூன்றும் தா" என ஔவையார் வேண்டியதையும் குறிப்பிடலாம். "மூலயோய் தீர்க்கும் முதல்வன் கண்டாய்; முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்" என்று திருநாவுக்கரசர் பாடியுள்ளார். திருக்கச்சூர்க் கல்வெட்டு ஒன்று (M.E.R. 377 of 1906) முத்தமிழாசிரியர் பெருநம்பி என்பவரைப் பற்றிப் பேசுகின்றது. இயல் (இயற்றமிழ்), இசை (இசைத்தமிழ்), நாடகம் (நாடகத்தமிழ்) ஆகிய மூன்றும் தமிழ் மொழியின் இணையான கூறுகள் என்பதை "முத்தமிழ்" என்ற கருத்துக் கோட்பாடு வெளிப்படுத்தி நிற்கின்றது. பேராசிரியர் கா.சிவத்தம்பி "பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம்" என்ற ஆய்வுநூலின் இறுதியில் "முத்தமிழ்" பற்றிய தன்னுடைய ஆய்வுக் கண்ணோட்டத்தை தமிழ் இலக்கிய வரலாற்று நிலை நின்று நோக்கியுள்ளார் (பார்க்க, "பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம்"; 2005: 410-412). எமது தேடல் முத்தமிழுக்கு பேராசிரியர் விபுலாநந்தர் ஆற்றிய பங்களிப்பை ஆராய்வதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

இயல் என்பது எழுதப்படுவதும் பேசப்படுவதுமாகிய தமிழை குறிக்கின்றது. இயற்றமிழானது சொற்களாலானது. இயற்றமிழ் அறிவு நிலை அல்லது அறிவாற்றலின் இயக்கம் எனலாம். விபுலாநந்தர் பன்மொழித்தேர்ச்சி பெற்றிருந்தார். அவருக்கு தமிழ், ஆங்கிலம், லத்தீன், கிரேக்கம், வங்காளம், பாளி, சிங்களம், அரபு முதலான மொழிகள் தெரிந்திருந்தன. இப்பன்மொழி அறிவு அவருக்கு நூல்களை அவற்றின் மூலத்திலேயே படித்தறியும் வாய்ப்பினைக் கொடுத்திருக் கலாம். பன்மொழி அறிவு பரந்துபட்ட பார்வையினையும் இவருக்குக் கொடுத்தது. "சுவாமி விபுலாநந்தர் மரபுவழிக் கல்வியும் நவீன கல்வியும் கற்றுத் தேர்ந்தவர்". மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர்; அதேவேளை லண்டன் பல்கலைக் கழக விஞ்ஞானப் பட்டதாரி. பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஆழ்ந்த ஞானம் உடையவர். அதேபோல் முன் நவீன (pre-modern) ஆங்கில இலக்கியத்திலும் மேலை நாகரிக வரலாற்றிலும் ஆழ்ந்த பயிற்சி உடையவர். இத்தகைய ஒரு அரிய சேர்க்கை அவர் காலத்து மரபுவழித் தமிழ் அறிஞர் பலரிடம் காணப்படாத ஒரு அம்சமாகும். அதனாலேதான், விபுலாநந்தர் அவர்களைத் தாண்டி நவீன யுகத்தின் வாசற்படியிலும் கால்வைக்க முடிந்தது. அதற்கு வரவேற்பு கூற முடிந்தது" (எம்.ஏ.நுஃமான்; "மொழியும் இலக்கியமும்"; 2007: 170). விபுலாநந்தர் காலத்தில் வாழ்ந்த தமிழறிஞர்கள் ஒன்றில் மரபு வழி வந்த தமிழறிஞர்களாக இருந்தனர். அன்றேல் சைவ சித்தாந்தக் கூட்டுக்குள் நின்று கொண்டு தமிழை அளந்தனர். அன்றேல் நவீன நோக்கற்ற வராயிருந்தனர். பெரும்பாலும் தமிழ் வளர்த்தல் என்பது இவர்களுக்கு பழைய இலக்கண இலக்கிய மரபைப் பேணுதல் அல்லது அதன் வழி வளர்த்தல் என்பதாகவே இருந்தது. விபுலாநந்தர் இவர்களினின்று வேறுபடுகின்றார். ஆங்கிலக் கல்வி அவருக்கு ஆங்கிலக் கலை இலக்கிய ஆராய்வு உலகை அறிமுகம் செய்தது. வடமொழிப் புலமை அவருக்கு வடமொழிக் கலை இலக்கிய உலகைக் காட்டியது. வேதாந்த நெறி அனைத்தையும் பேதா பேதம் காட்டாது உள்வாங்கும் திறனையும், குணத்தையும் வழங்கியது. விஞ்ஞான அறிவு புறநிலை நின்று ஆராயும் பண்பை அவருக்குத் தந்தது. இவற்றால் தன்கால மரபு வழித் தமிழறிஞர்களிடமிருந்து விபுலாநந்தர் வேறுபடுகின்றார். அவரது சமூக, கலை, இலக்கிய நோக்கினை இவ் ஆறு பின்னணிகளும் நிர்ணயம் செய்வதனைக் காணலாம். இந்த அடித்தளத் தில் எழுந்த அவரது சிந்தனைகள் அகண்ட உலக நோக்கையும், அந்த உலகப் பரப்பில் தமிழையும் ஒன்றாகக் காணும் தன்மையை யும், தமிழ் சமூகத்தின் தனித்துவத்தையும் உலக சமூகத்தில் இணைத்து தேடும் பிரக்ஞையை தோற்றுவித்தது. இத் தன்மைகளால் விபுலாநந்தரின் எழுத்தாக்கங்கள் வீச்சானவையாக அமைந்தன.

1.1

"வெள்ளை நிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு
வாய்த்த மலரெதுவோ?
வெள்ளை நிறப் பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது"

விபுலாநந்தரின் ஆக்கப்படைப்புக்களை நோக்க முற்படுகையில், மனவாசல்முன் முதலில் கையசைத்து நிற்பது இந்த அற்புதமான கவிதை ஆகும். சுவாமி விபுலாநந்தரின் கல்லறை சமாதியிலும், (1947 ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 19ஆம் நாள் சனிக்கிழமை இரவு சுவாமி விபுலாநந்தர் அமரத்துவம் அடைந்தார். சுவாமி அவர்களின் பூதவுடல், அவர் உருவாக்கிய மட்டக்களப்பு சிவானந்த வித்தி யாலயத்தின் முன்னாலுள்ள மரத்தின் கீழ் அமைக்கப்பட்ட கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது.) இந்த உயிர்த்துடிப்பு மிக்க கவிதை வரிகளே பொறிக்கப்பட்டுள்ளன. விபுலாநந்தர் ஒரு சிறந்த கவிஞர். அவர் இயற்றிய கவிதைகள் பல "விபுலா நந்தக் கவிமலர்" என்னும் தொகுதியில் இடம் பெற்றுள்ளன. "ஈசனுவக்கும் மலர்" என்பதே முதற் கவிதையாக அச்சிடப் பட்டுள்ளது. படிமம்,அகவுருவங்கள், குறியீடுகள், நிறைந்த இக்கவிதையில் அவரது அருள் நிறைந்த உள்ளமும் தவ நிலையும் வெளிப்படுகின்றன. இதில் எளிமையின் அழகை தரிசிக்க முடிகின்றது. பாரதியின் புதுமரபையும் காணமுடி கின்றது. "இப்பாடலில் பழுத்த மதஞானமும் செழுமையான கவித்திறனும் இணைந்து நிற்கின்றன" என்று பேராசிரியர் கா.சிவத்தம்பி (ஈ.த.சு; 2010: 68) கூறுகின்றார்.

அடிகளாரின் "கங்கையில் விடுத்த ஓலை", "நீரர மகளிர்" போன்றவை சிறப்பான, கருத்தாழம் மிக்க கவிதைகளாக உள்ளன. "நீரர மகளிர், கங்கையில் விடுத்த ஓலை" போன்ற கவிதைளில் காணப்படும் ஆங்கில மனோரதியக் (Romantic) கவிதைகளின் செல்வாக்கு அவரது கவிதைக்கு ஒரு பதிய வனப்பையும் கம்பீரத்தையும் கொடுத்திருப்பதை மறுக்க முடியாது" என பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் (2007: 173, 174) மதிப்பிட்டுள்ளார். நெருக்கமானவர் இறக்க நேரும் போது, இறந்தவருக்கு இரங்கிப் பாடிய கையறுநிலைப் பாடல்களை சங்க இலக்கியங்களில் காணமுடிகின்றது. அதற்கமைய அடிகளாரின் "கங்கையில் விடுத்த ஓலை" புதுவகையில், புதுமெருகு பெற்றுத் திகழ்கின்றது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அடிகளார் பேராசிரியராக இருக்கை யில், அங்கு தமிழ்த்துறை விரிவுரையாளராக இருந்த புலவர் கந்தசாமி இறந்த செய்தி கேட்ட துயரத்தால் உருவானதே இக்கவிதையாகும். இது முற்று முழுதாகக் கையறு நிலைப் பாடலாக இல்லாவிடினும் அதன் சாயலில் எழுந்த தூதிலக்கிய மாக துலங்குகிறது. "கையறுநிலை உணர்வையும், தூது இலக்கிய சார்பையும் கொண்டதாக விளங்கும் அப்படைப்பு, காலமாகிவிட்ட தமது நண்பருக்கு எழுதிய கடிதமாக அமைந்துள்ளது. அடிகளார் கங்கையையே தமது கடிதத்தை விடுப்பதற்கு ஏற்ற ஊடகமாகக் கற்பனையில் தேர்ந்து கொண்டார். இப்புதுமைப் படைப்பில் கந்தசுவாமிப் புலவரின் சிறந்த பண்புகளை நினைவு கூர்ந்துள்ளதோடு, நிலையாமை யின் இயல்பையும் விளக்கி, இறுதியில், காலமான தன் நண்பருக்கான ஓலையினைக் கங்கையில் தூதாக விடுத்தமை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். கங்கையில் விடுத்த ஓலையின் பல பகுதிகள் சுவையாக உள்ளன. கவிஞருக்கும், வெண்மதிக்கும் இடையிலான கற்பனை உரையாடல்கள், பாரதியின் அழகுத் தெய்வம் என்ற கவிதையை நினைவூட்டுகின்றன. கங்கையில் விடுத்த ஓலையின் பிற்பகுதியின் அமைந்துள்ள தாழிசைகள், சிலப்பதிகாரத்தை நினைவூட்டுகின்றன" (கலாநிதி துரை. மனோகரன்; "தமிழ் இலக்கியம் பார்வையும் பதிவும்"; 2003: 99). "சுருங்கக் கூறின்,பழுத்த தமிழ்ப் புலமையும், முதிர்ந்த மெய்யி யல் தெளிவும், நட்பின் உயர்வும் ஒருங்கே மிளிரும் வண்ணம் "கங்கையில் விடுத்த ஓலை" என்னும் இத்தூது இலக்கி யத்தைப் படைத்துள்ளார் சுவாமி விபுலானந்தர் எனலாம்" என்று முனைவர் இரா. மோகன் கூறுகின்றார் (இணையம்).

"நீரர மகளிர்" மட்டக்களப்பு வாவியிலுள்ள பாடும் மீன் களைப் பற்றியதாக அமைந்துள்ளது. மட்டக்களப்பு வாவியி லிருந்து எழுகின்ற இன்னிசையால், மட்டக்களப்பை "மீன் பாடும் தேனாடு" என குறிப்பிடுவர். இப்படியான ஓசைகள் அமெரிக்காவிலுள்ள கலிபோர்ணியாக் கடற்கரையிலும், பம்பாய் துறைமுகத்தை அடுத்த பகுதியிலும், சிலி நாட்டின் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசத்து கடற்கரைப் பகுதியிலும் கேட்க முடிவதாக ஆய்வு கள் கூறுகின்றன. மட்டக்களப்பு வாவியிலுள்ள மீன்களின் இன்னிசைப்பாடல் ஏற்படுத்திய உணர்வை மையப் படுத்தி யாக இக்கவிதை அமைந்துள்ளது. இடைவரையில் பெண்ணின் உடலும், பிற்பாகம் மீனின் உடலும் கொண்ட கற்பனை வடிவங்களே நீரர மகளிர் ஆகும். மட்டக்களப்பு வாவியிலிருந்து ஏழு வகையான ஓசைகள் எழுவதாக கூறப்படுகின்றது. அந்த ஏழு ஓசைகளையும் ஏழு நீரர மகளிராகக் கற்பனை செய்து இக்கவிதையை ஆக்கியுள்ளார். அதாவது ஏழு சுரங்களை ஏழு மகளிராக கொண்டுள்ளார். நீரர மகளிர்,கங்கையில் விடுத்த ஓலை, ஆறுமுக நாவலர் பற்றி எழுதிய கவிதை போன்றவற்றில் செவ்வியல் பாங்கான உயர் நடையே பயன்படுத்தப்பட்டுள்ளது.

பாரதியார் ஒரு எளிமையான கவிதை அணுகுமுறையை பயன்படுத்தியவர். இதனைப் "புதிய சொல், புதிய பொருள், புதிய சுவை கொண்ட நவ கவிதை" என பாரதியார் பிரகடனம் செய்தார். விபுலாநந்த அடிகள் பாரதி புகழை இலங்கையி லும், தமிழ் நாட்டிலும் பரப்பி, பாரதியினது கவித்துவ ஆளுமையை மெச்சி, அவனது தனித்துவத்தை ஆய்வு பூர்வ மாக வெளிப்படுத்தியவர். "பாரதியை ஒரு மகாகவியாகப், புதுமைக்கவியாக, மக்கள் அறிந்திருக்க வேண்டிய கவியாக ஏற்றுக் கொண்டதன் மூலம் தமிழில் ஏற்பட்டுள்ள ஒரு யுக மாற்றத்தினை விபுலாநந்தர் உணர்ந்திருந்தார்" (ஈ.த.சு; 2010: 78). ஆயினும் அடிகளாரின் கவிதைகளில் பாரதியின் செல் வாக்கை மிகவும் அரிதாகவே தரிசிக்க முடிகின்றது. விபுலா நந்தரின் "கணேசதோத்திர பஞ்சகம்", மாணிக்க பிள்ளையார் இரட்டைமணிமாலை", "குமரவேள் நவமணி மாலை" ஆகி யவை இடைகாலப் புலவர் ஒருவரையே இனங்காட்டு கின்றன. பின்வரும்வெண்பா இதற்கு உதாரணமாகும்(2007:173).

**குருவே பொதியம்வாழ் கும்ப முனிவர்க்**
**கருளாற் றமிழளித்த வையா - கிரிபதகை**
**ஆறுதலை சூடிமைந்தா வாறுதலையுற்றவர்**
**ஆறுதலை யெற்கு மளி.**

அவரது கவிதைகள் தமிழின் செய்யுள் இலக்கண மரபைப் போற்றுவனவாகவும், யாப்புப் பிரயோக அமைப்பு இறுக்கம் கொண்டவையாகவும் இருந்தன. சுருக்கமாகச் சொன்னால் நவீன காலத்துக்கு முற்பட்டவையென்று கருதப்படுகின்ற யாப்புக்களிலே மிகுந்த சிரத்தையோடு செய்யுள் யாத்த ஒருவர். அவ்வாறான ஒருவர் தமிழின் மிக நவீன மான கவிஞனை இனங்காணுகின்றார். அவனை அந்த நவீனத்துவத்துக்காகப் போற்றுகின்றார். இந்த இருகிளைப் பாடு (Dichotomy) சுவாமியினுடைய வாழ்க்கையின் ஜீவஸ்வர மாகத் தொழிற்படுகின்றது என்று கருதுகிறேன்" இவ்வாறு பேராசிரியர் கா.சிவத்தம்பி (ஈ.த.சு; 2010: 79) எழுதுகின்றார். பாரதியாரின் கவிதையோட்டத்திலும் அடிகளாரது கவிதை ஓட்டத்திலும் நடை வேறுபாடு பாரியதாக காணப்படுகின்றது. பாரதி கவிதைகளில் எளிமை கவித்துவ அழகியலாக ஒளிர, இவரது கவிதைகளில் ஒரு செந்நெறி இறுக்கம் (Classical Rigidity) தமிழின் சிறப்பாக துளிர்த்துள்ளது.

பாரம்பரிய யாப்புப் பயிற்சியும், தேர்ச்சியும் படைத்த அடிகளார், தமிழ்ப் பாரம்பரிய ஈடுபாட்டினதும் அதுபற்றிய சிரத்தையினதும் சின்னமாக செய்யுளிற்றலைக் கொண்டார். பல்வேறு பாட்டியல் வடிவங்களையும், யாப்பமைதிகளையும் பரிசோதித்தார். இத்தன்மைகளை பேராசிரியர் க.கணபதிப் பிள்ளையும் கொண்டிருந்ததாக பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிடுகின்றார்.

*1.2*

**"ஆங்கி லத்துக் கவிதை பலப்பல**
**அருமை யாகத் தமிழ்செய்து தந்தனன்;**
**நாங்கள் மொண்டு பருகி மகிழவும்**
**நன்று நன்றென உண்டு புகழவும்,**
**தீங்க னிச்சுவை கொண்டவை தானுமே**
**தீட்டினான்: தெய்வ யாழினை ஆய்ந்ததால்**
**ஓங்கி னானின் உயர்வைப் பருகுவோம்!**
**உண்மை யோடவன் நூலும் பயிலுவோம்"**

இவ்வாறு மஹாகவி (து.உருத்திரமூர்த்தி) அடிளாரின் மொழிபெயர்ப்பு பணிபற்றி மெச்சிப் பாடியுள்ளார். விபுலா நந்தரின் பன்மொழி ஆளுமை அவரை பல்துறை சார்ந்த மொழி பெயர்ப்புக்களை உருவாக்கும் உந்துதலை அளித்திருக் கின்றது. மொழிபெயர்ப்பு என்பது "ஒரு ஊடகத்தில் கூறப்பட்ட விஷயத்தை இன்னுமொரு ஊடகத்துக்கு மாற்றுவது எனலாம். இவ்வாறு மாற்றும்போது குறியீட்டு முறை அனைத்தும் முற்றாக மாறுகின்றது. சொல்லப்பட்ட விஷயப் பொருள் மட்டுமே எஞ்சி இருக்கின்றது; 2007: 23). மொழியியலாளர் மொழிபெயர்ப்புக்களை ஆறு வகையாக பாகுபடுத்துவர். அவையாவன,

1. சொல்லுக்கச் சொல் பெயர்த்தல்
2. விரிவான மொழிபெயர்ப்பு
3. முழுமையான அல்லது சரியான மொழிபெயர்ப்பு
4. முந்துநூற் செய்திகளைச் சுருக்கமாக மொழி பெயர்த்தல்
5. தழுவல் மொழிபெயர்ப்பு
6. மொழியாக்கம்

இவற்றில் விபுலாநந்தரின் மொழிபெயர்ப்புகள் "தழுவல் மொழிபெயர்ப்பு" வகையை சார்ந்ததாகும். இவ்வகையான மொழிபெயர்ப்புகளில் பெயர்ப்பாளரின் புலமைத்துவம் மேலெழுந்து நிற்கும். இரு மொழிகளுக்கடையில் காணப்படு கின்ற பண்பாட்டு வேறுபாடுகளை இவ்வகை பெயர்ப்புக்கள் சமன் செய்துவிட முயற்சிக்கின்றன. "மூலத்தைத் தேவைக் கேற்ப மாற்றக் கூடிய வாய்ப்பும், மூலநூலின் கருத்தினை மட்டும் பெற்றுக்கொண்டு ஏனைய நிகழ்வுகள், கதை மாந்தர்கள், நிகழ்ச்சி மாற்றங்கள் மொழிபெயர்ப்பாளர் தன் எண்ணப்படி மாற்றிக் கொள்ளும் வாய்ப்பும் இவ்வகை மொழிபெயர்ப்புகளில் நிறைய உண்டு. மேற்குறிப்பிட்ட மொழிபெயர்ப்புப் பண்புகள் யாவும் விபுலாநந்த அடி களாருடைய மொழிபெயர்ப்புக்களிலே நாம் காணக்கூடியன வாயுள்ளன" என்று பேராசிரியர் அ.சண்முகதாஸ் "இலங்கைப் பேராசிரியர்களின் தமிழியற் பணிகள்" (1998: 8) என்ற நூலில் குறித்துள்ளார். மொழிபெயர்ப்பு பற்றி விபுலாநந்தர் பின்வரு மாறு எடுத்துரைக்கின்றார்:

**"ஒரு மொழியிலுள்ள நூலினை மற்றொரு மொழியிற் பெயர்த்து எழுதுமிடத்து முதனூற் பொருள், நடை, இயைபு முதலியவற்றை மாறுபடவிடாது மொழிபெயர்ப்பு நூலினுள்ளுங் காட்டுதல் வேண்டும். முதனூல் செய்யுள் நடையினதாயின் மொழி பெயர்ப்பு நூலுஞ் செய்யுள் நடையினதாகித் தக்க யாப்பினாற் பொருத்தமுற்று நிற்க வேண்டும்."**

அவரது மொழிபெயர்ப்பு அணுகுமுறை இதுவாக இருந்தாலும், தமிழ் மொழியினது மரபினையும், பண்பாட்டு மையங்களையும் வெளிப்படுத்தும் வகையிலேயே அவரது தமிழ் பெயர்ப்புகள் அமையப்பெற்றுள்ளன. இரவீந்திரநாத் தாகூர் எழுதிய கவிதைகளை "பூஞ்சோலைக் காவலன்" என்னும் பெயரில் ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த் துள்ளார். மில்ற்றனின் "சுவர்க்க நீக்கம்" (Paradise Lost) என்னும் நெடும் பாடலின் பகுதிகளையும் தான் சொந்தமாகக் கவி புனைவது போல் தமிழில் பெயர்த்துள்ளார். எடுத்துக்காட்டாக, மில்ற்றனின் ஆங்கில கவிவரிகளையும், அதனை அடிகளார் தமிழில் பெயர்த்துள்ள முறைமையினையும் அவதானிப்போம்.

"My fairest my espoused, my latest found
Heavens lest, best gift. My ever - new delight
Awake, the morning shines,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

How nature paints her colours, how the bee
Sits on the bloom extracting liquid sweet"
- Milton's 'Paradise Lost'

"என்னாருயிர்த்துணையே! ஈசன் எனக்களித்த செல்வநிதியே!
செழுந்துயில்நீத் தேயெழுவாய் புத்தமிழ்தே! புலரிப்
பொழுதினிலே வாச மலர்க்கொடியில் வண்டினங்கள் தேன்
அருந்தும் வித்தையினைக் காண்போம் வழியில் நீத்
தேயெழுவாய்
வண்ணவண்ணப் பூக்கள் மலர்ந்தன காண்"

ஷேக்ஸ்பியரின் படைப்புக்களில் அதீத பற்றுதல் கொண்ட அடிகளார், அவரது அதிக பாடல்களை தமிழில் பெயர்த்திருக்கின்றார். சுவாமி விவேகானந்தர் சம்பாசணைகள், விவேகானந்த ஞானதீபம், கருமயோகம், ஞானயோகம், நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை என்பன சுவாமி விபுலானந்தரின் மொழிபெயர்ப்பு நூல்களாகும்.

*1.3*

"தேன் மது சொரியும் இலக்கியத்தின்
திகழுஞ் சுவைக்கோ ருரைப்பகுதித்
திரட்டா நமுரைநடைச் சிலம்பதிலே
திருவடி பொழிவதன் சுவைகண்டேன்
மான்கள் மருளும் மதர் விழி வாழ்
மட்டக்களப்பின் திருமகனை
மற்றும் நேரிற் கண்டிடாத
மருளிற் காலம் மடிய நின்றேன்
வான்மழை எனவவர் வருவார் ஓர் கால்
வந்தித் திடுவேன் எனவிருந்து
வள்ள லமரராய் ஆன பின்னே
வாய்த்ததி தருணம் வலிந்துருட்டே"

இப்பாடல் வரிகள் ஈழத்துப் பூராடனார் "நான் கண்ட விபுலாநந்த அடிகளார்" என்ற தலைப்பின் கீழ் பாடியதாகும். பேராசிரியர் விபுலாநந்தர் இலக்கியம், சமயம், மொழியியல், கல்வி, கலை, பண்பாடு, விஞ்ஞானம் முதலியன சார்ந்த எண்ணிறைந்த நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவை அவருடைய அறிவாழத்தையும், புலமைப் பன்முகப்பாட்டையும் எடுத்துக் கூறுகின்றன. மதங்க சூளாமணி, கணேச தோத்திரப் பஞ்சகம், குமர வேணவ மணிமாலை, நடராஜ வடிவம் என்பன அடிகளாரின் பிர்தான நூல்களாகக் காணப்படுகின்றன. மேலும் விவேகானந்த ஞானதீபம், சம்பாசனைகள் *(1924)*, கருமயோகம் *(1934)*, ஞான யோகம் *(1934)*, நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை *(1941)*, விவேகானந்தரின் பிரசங்கம் *(1934)* மேலும் அறிவியல் சம்பந்தமான எந்திரவியல் *(1933)*, கலைச்சொல்லாக்க மாநாட்டுத் தலைமையுரை *(1936)*, கலைச் சொற்கள் வேதிநூல் *(1938)*, மின்சார சாத்தி வரலாறு, விஞ்ஞான தீபம் *(1922)*, விஞ்ஞான தீபம்- மொழிபெயர்ப்பு முறை *(1922)* போன்ற நூல்களையும் வெளியிட்டுள்ளார். விபுலாநந்தர் தமிழில் எழுதிய கட்டுரைகளை பின்வருமாறு தொகுத்துக் காட்டலாம்.

1. விஞ்ஞான தீபம் : செந்தமிழ் தொகுதி *- 20*, பக்கம் *413 - 440* (சித்திரை - வைகாசி *- 1922*);செந்தமிழ் தொகுதி *- 21*, பக்கம் *1 - 10, 61 - 68* (கார்த்திகை *- 1922*);செந்தமிழ் தொகுதி *- 22*, பக்கம் *209 - 222* (கார்த்திகை *- 1923*).

2. பூஞ்சோலைக்காவலன் : வங்க நாட்டுக்கவி ரவீந்திர நாத் தாகூர் அவர்கள் இயற்றிய 'கார்டனர்' என்னும் ஆங்கிலப் பக்கங்களின் தமிழ் மொழிப் பெயர்ப்பு. செந்தமிழ் தொகுதி - *20*,பக்கம் *301-307* (சித்திரை - வைகாசி *- 1922*); செந்தமிழ் தொகுதி *- 22*, பக்கம் *69-77*. (கார்த்திகை *- 1923*).

3. மேற்றிசைச் செல்வம் : செந்தமிழ் தொகுதி *- 20* பக்கம் *381-390, 469-474* (சித்திரை - வைகாசி *1922*); செந்தமிழ் தொகுதி *- 21*, பக்கம் *185 - 192* (ஆணி *1923*); செந்தமிழ்தொகுதி *- 22*,பக்கம் *121 - 130*.

4. விஞ்ஞான தீபம் : செந்தமிழ் தொகுதி *- 20*, பக்கம் *413 - 440* (சித்திரை - வைகாசி *- 1922*);செந்தமிழ் தொகுதி *- 21*, பக்கம் *1 - 10, 61 - 68* (கார்த்திகை *- 1922*);செந்தமிழ் தொகுதி *- 22*, பக்கம் *209 - 222* (கார்த்திகை *- 1923*).

5. பொருணூற் சிறப்பு : செந்தமிழ் தொகுதி *- 21* பக்கம் *123 - 130, 560 - 564* (சித்திரை - வைகாசி *- 1922*).

6. யவன புரத்துக் கலைச்செல்வம் : செந்தமிழ் தொகுதி *- 21*, பக்கம் *501 - 507* (புரட்டாதி *- 1923*).

7. சூரிய சந்ரோற்பத்தி : செந்தமிழ் தொகுதி *- 21*, பக்கம் *245 - 251* (ஆணி *- 1923*).

8. மலைகடலுற்பத்தி : செந்தமிழ் தொகுதி *- 21*, பக்கம் *349 - 356* (ஆணி *- 1923*).

9. மதங்கசூளாமணி : செந்தமிழ் தொகுதி *- 22*, பக்கம் *321 - 344, 361 - 368, 401 - 422, 467 - 489 (1924)*; செந்தமிழ் தொகுதி *- 23*, பக்கம் *1 - 24, 73 - 86, 121 - 130, 161 - 172, 201 - 206 (1925)*.

10. ஐயமும் அழகும் : செந்தமிழ் தொகுதி *- 38*, பக்கம் *29 - 34* (மார்கழி *- 1940 - 1941*).

11. வண்ணமும் வடிவும் : செந்தமிழ் தொகுதி *- 38*, பக்கம் *49 - 56* (மார்கழி *- 1940 - 1941*).

12. நிலவும் பொழிலும் : செந்தமிழ் தொகுதி *- 38*, பக்கம் *113 - 120 (1940 - 1941)*.

13. மலையும் கடலும் : செந்தமிழ் தொகுதி *- 38*, பக்கம் *169 - 176 (1940 - 1941)*.

14. கவியும் சால்பும் : செந்தமிழ் தொகுதி *- 38*, பக்கம் *177 - 184 (1940 - 1941)*.

15. நாடும் நகரும் : செந்தமிழ் தொகுதி *- 38*, பக்கம் *193 - 200* (பங்குனி *- 1942*).

16. சங்கீத மகரந்தம் : செந்தமிழ் தொகுதி *- 38*, பக்கம் *337 - 344 (1942)*.

17. எண்ணலளவை : செந்தமிழ் தொகுதி *- 38*, பக்கம் *473 - 482 (1924)*.

18. இசைக்கிரமம் : செந்தமிழ் தொகுதி *- 38*, பக்கம் *401 - 410 (1941 - 1942)*; செந்தமிழ் தொகுதி *- 39*, பக்கம் *57 - 68* (மார்கழி *- 1941 - 1942*) பக்கம் *509 - 521* (புரட்டாசி *1942 - 1943*); செந்தமிழ் தொகுதி *- 40*, பக்கம் *33 - 46* (மார்கழி *1942 - 1943*).

19. உலக புராணம் : செந்தமிழ் தொகுதி *- 39*, பக்கம் *19 - 31* (மார்கழி *1941 - 1942*).

20. வங்கியம் : செந்தமிழ் தொகுதி *- 39*, பக்கம் *373 - 376 (1942)*.

21. மதுரை இயற்றமிழ் மகாநாட்டுத் தலைவர் பேருரை : செந்தமிழ் தொகுதி *- 39*,பக்கம் *465 - 480* (ஆவணி *- 1942*).

22. சங்கீத பாரிஜாதம் : செந்தமிழ் தொகுதி *- 39*, பக்கம் *525 - 536 (1942)*.

23. தில்லி மாநகர்த் திருவமர்மார்பன் திருக்கோயிற் காட்சி : செந்தமிழ் தொகுதி *- 40*, பக்கம் *1 - 8* (கார்த்திகை *1942*).

24. நட்டபாடைப் பண்ணின் எட்டுக்கட்டளைகள் : செந்தமிழ் தொகுதி *- 41*, பக்கம் *9 - 14 (1943)*.

25. தென்னாட்டில் ஊற்றெடுத்த அன்புப் பெருக்கு வடநாட்டில் பரவிய வன்முறை : செந்தமிழ் தொகுதி *- 40*, பக்கம் *73 80*; செந்தமிழ் தொகுதி *- 41*, பக்கம் *41 - 46* (மார்கழி *1943 - 1944*).

26. பாரிஜாதவீணை : செந்தமிழ் தொகுதி *- 42*, பக்கம் *1 - 4* (கார்த்திகை *1944*).

27. இமயம் சேர்ந்த காக்கை : தமிழ்ப்பொழில் *- 16*ம் துணர், பக்கம் *367 - 375* (இக்கட்டுரை உரைநடை விருந்து என்னும் நூலிலும் வெளிவந்தது. பக்கம் *85 - 91*, *4*ம் பதிப்பு *1955*).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. உள்ளம் கவர்கள்வன் : தமிழ்ப்பொழில் – 16ம் துணர், பக்கம் 335 – 341.

29. திருக்குறள் முதலதிகாரமும் திருச்சிரபுரத்துத் திருப்பதிகாரமும் – தமிழ்ப் பொழில் 16ம் துணர், பக்கம் 207 – 213.

30. பண்ணும் திறனும் : தமிழ்ப்பொழில் – 16ம் துணர், பக்கம் 391 – 448

31. லகர வெழுத்து : தமிழ்ப்பொழில் – 16ம் துணர், பக்கம் 189 – 195

32. உணவு : தமிழ்ப்பொழில் – 17ம் துணர், பக்கம் 9 – 13

33. குழலும் யாழும் : தமிழ்ப்பொழில் – 17ம் துணர், பக்கம் 26 – 30, 35 – 43

34. கண்ணகியார் வழக்குரை : தமிழ்ப்பொழில் – 17ம் துணர், பக்கம் 59 – 61

35. எண்ணும் இசையும் : தமிழ்ப்பொழில் – 17ம் துணர், பக்கம் 67 – 71, 95 – 107,127 – 130, 158 – 160

36. பாலைத்திரிபு : தமிழ்ப்பொழில் – 17ம் துணர், பக்கம் 246 – 249, 278 – 281, 306 – 309,338 – 341,தமிழ்ப்பொழில் 18ம் துணர், பக்கம் 5 – 12

37. சுருதி வீணை : தமிழ்ப்பொழில் – 18ம் துணர், பக்கம் 41 – 48, 81 – 87

38. இயலிசை நாடகம் : தமிழ்ப்பொழில் – 18ம் துணர், பக்கம் 160 – 170

39. பேரையூர் அம்பாள் குளம் பொய்யாத விநாயகர் திருவடி பரவிய தேவபாணி : தமிழ்ப்பொழில் – 22ம் துணர், பக்கம் 314 – 315 (சித்திரை – 1946).

40. சோழ மண்டலத்தமிழும் ஈழமண்டலத்தமிழும் : கலைமகள், பக்கம் 82 – 88 (1941)

41. தமிழில் எழுத்துக் குறை : கலைமகள்

42. தமிழ்க்கலைச் சொல்லாக்க மகாநாடு தலைமையுரை : செந்தமிழ்ச்செல்வி – 15ம் சிலம்பு, பக்கம் 99 – 102, 149 – 155 (1936–37) (1936ம் ஆண்டு செப்டம்பர் பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் பேசியது).

43. மானசவாவி : திரு. பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களின் 60வது ஆண்டு நிறைவு விழா மணிமலரில் வெளியிடுவதற்காக எழுதப்பட்டது.

44. பயனுள்ள கல்வி : செந்தமிழ்ச்செல்வி – 12ம் சிலம்பு, பக்கம் 410 – 413 (1933–34) (வித்தியாசமாசாரப் பத்திரிகை – பக்கம் 195–202 மார்ச் 1934).

45. ஆங்கிலவாணி : (ஆங்கில நாட்டின் கலைச் செல்வத்தை விளக்குவது) பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார் அவர்களின் 60ம் ஆண்டு நிறைவு விழா வெளியீடாகிய மணிமலரில் வெளிவந்தது.

கவியும் சால்பும், இலக்கியச் சுவை, ஐயமும் அழகும், வண்ணமும் வடிவமும், நிலவும் பொழிலும், நாகரிக வரலாறு, எகிப்திய நாகரிகம், யவனபுரத்துக் கலைச் செல்வம், மேற்றிசைச் செல்வம், மலையும் கடலும், நாடும் நகரும் முதலான கலை, இலக்கியச் சார்பு கட்டுரைகள் இரசனை முறையிலும் கலையின் வரலாற்று அடிப்படையிலும் அமைந்திருக்கின்றன. "யவனபுரத்துக் கலைச் செல்வம்" போன்ற கட்டுரைகள் அவரது ஒப்பாய்வுத் திறனை வெளிச்சப்படுத்துகின்றன. "யவனபுரத்துக் கலைச் செல்வம்" என்னும் கட்டுரையில் அடிகளார் கிரேக்க மொழி இலக்கியங்களிலே காணப்படும் சில பண்புகளை வடமொழியுடனும் தமிழ் மொழியுடனும் ஒப்பு நோக்கி ஆராய்ந்துள்ளார். இக்கட்டுரையானது அடிகளாரின் ஒப்பியலாய்வின் திறனையும் முனைப்பையும் வெளிப்படுத்துவதாக உள்ளது. ஈழத்திலே ஒப்பியல் ஆய்வுக்கு விபுலாநந்தர் முன்னோடியாக விளங்கினார். எனவேதான் பேராசிரியர் சிவத்தம்பி, "தமிழில் ஒப்பியல் இலக்கிய ஆய்வுக்கு நிச்சயமாக அவர் ஆரம்ப புருஷர்களில் ஒருவர்" (ஈ.த.சு.; 2010: 77) என்று கணித்துள்ளார். ஒப்பியல் ஆய்வுக்கு அவசியமான அணுகுமுறைகளை மொழிபெயர்ப்புகள் ஊடாகவும், கட்டுரைகள் வாயிலாகவும் வெளிக்கொணர்ந்தார். பாரதியாரின் தேசிய பாடல்களை பிரான்ஸ் நாட்டுத் தேசிய பாடலுடனும், பக்கிம்சந்திரரின் "வந்தே மாதரம்" பாடலுடனும் ஒப்பாய்வு செய்துள்ளார். பிறமொழி இலக்கியங்களில் கொண்ட அதீத ஈடுபாடே அவரை ஒப்பியல் ஆய்வுக்குள் இட்டுச் சென்றதெனலாம்.

ஓவியம், சிற்பம், கட்டிடக்கலைகள் பற்றிய அறிவும் இரசனை உணர்வும் அடிகளாருக்கு இருந்திருக்கின்றது. வண்ணமும் வடிவும், ஐயமும் அழகும் என்ற கட்டுரைகள் இதற்குச் சான்றுகளாகின்றன. ஓவியத்தை இரசித்தல் பற்றி அவர் பின்வருமாறு கூறுகிறார்: **"நவிலும் தோறும் இனிமை பயக்கும் நூல் நயம் போலவும் பயிலுந்தோறும் இனிமை பயக்கும் பண்புடையாளர் தொடர்பு போலவும் பார்க்குந் தோறும் இனிமை பயக்கும் பண்புடையாளர் தொடர்பு போல வும் பார்க்குந்தோறும் அறிவுடையோனுக்கு உவகையளிக்கும் ஓவியமே அழகிய ஓவியம்"**

**"வெறும் காட்சியாக மாத்திரம் ஓவியத்தை இரசிக்க முடியுமா? காட்சிக்குப் பின்னாலுள்ள ஓவியனின் உள்ளத்தைக் காண முயல வேண்டுமென்பது ஓவிய ரசிப்பின் இன்றையக் கொள்கையாகும். இதுவே இந்திய மரபின் ரசக் கொள்கையும் ஆகும். ஐயமும் அழகும் என்ற வியாசத்தில் வரும் காட்சியில் ஐயம் மிக்கது ஐயமே. உண்மைப் பொருளை உணர்த்தும் என்ற கூற்றில் கலைரசிப்பின் நவீன நோக்குகள் விபுலாநந்தரில் தொனிப்பதைக் காண முடிகிறது. சித்தன்ன வாசல், தஞ்சைப் பெரிய கோயில், சிகிரியாக் குகை, அமராவதி ஆகிய இடங்களிற் காணப்படும் சிற்பம், ஓவியம் பற்றி அடி களார் குறித்துச் செல்வது அவரது சிற்ப, ஓவிய ஈடுபாட்டிற்கு உதாரணங்கள் ஆகும். இவ்வகைச் சிற்ப, ஓவியங்களையும், அவற்றை ரசிக்கும் முறையினையும் தமிழ் மக்களுக்கு ஊட்டுதலும் அடிகளாரின் கலை நோக்கினுள் அடங்கும்"** ("கலாநிதி சி.மௌனகுரு;"சுவாமி விபுலாநந்தர் காலமும் கருத்தும்"; 1993).

ஓவியங்கள் பற்றி விபுலாநந்தர் உரைக்கின்ற கருத்துக்களோடு, அதனை பேராசிரியர் சி.சிவசாமி ("வரலாறும் ஆளுமைகளும்;" 2016: 355, 356) பின்வருமாறு தெளிவுபடுத்துகின்றார்: "தென்னாட்டுச் சித்திர வன்மையைக் காட்டும் பழைய சித்திரங்கள் சித்தன்ன வாசலிலும், தஞ்சைப் பெருங்கோயிலிலும்,ஈழ நாட்டுச் சிகிரியாக் குகையிலும், வட நாட்டு அஜந்தாக் குகைகளிலும் உள்ளன. இவற்றைக் கூர்ந்து ஆராயின் பழந்தமிழ் நாட்டு அணிகலன், உடை, கூந்தலமைப்பு என்று அன்றைய ஆடவரும், மகளிரும், அறங் கூற வையவைத்தும், விளையாட்டிடங்களிலும் வாழ்மனையிலும், வேறிடத்தும் எவ்வெச் செய்திகளைக் கொண்டிருந்தார்கள் என்பதும் தெளிவாகும். மண்ணீட்டாளர், கண்ணுள் வினைஞர் ஆகிய இரு பாலரையும் ஓவியர் என்றும், வண்ணம், வடிவு என வேறுபடுத்தாது, அனைத்தினையும் ஓவியம் என்பதும் ஒரு கலை" எனச் சுவாமிகள் கூறியிருப்பவை நன்கு கவனிப்பாலன. மேலும் தொடர்ந்து கூறுகையில், சுவர்சுதையிலே புனைந்ததும் வெண் கலவைக் கல்லிலே செதுக்கியதும், கருங்கல்லினைப் பொளிந்தும் வெளிப்படுத்திய உருவத்தை அறிவுடையோர் நோக்கும் போது, ஓவியனுடைய கைவன்மையை வியப்ப தோடமையாதது, ஓவியன் உள்ளத்து உள்ளியது இதுவெனக் கண்டு வியத்தல் வேண்டும். ஓவியனது உள்ளக்கருத்தே ஓவியத்துக்கு உயிர் போன்றது. நவிலுந் தோறும் இனிமை பயக்கும் நூல் நயம் போலவும், பயலுந்தோறும் இனிமை பயக்கும் பண்புடையாளர் தொடர்பு போலவும், பார்க்குந் தோறும் அறிவுடையோர்க்கு உவகையளிக்கும் ஓவியமே அழகிய ஓவியமாகும், என அவர் குறிப்பிட்டிருப்பனவும் ஈண்டு உற்று நோக்கற்பாலன. ஓவியம் அதனை வரைந்தவனதும், பார்ப்பவனதும் உள்ளத்தைக் கவர வேண்டும். அப்போதுதான் அது உயர் ரசக் கலைப் படைப்பாக கருதப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சோழ மண்டலத் தமிழும் ஈழ மண்டலத்தமிழும்" என்னும் கட்டுரை இவரது மொழியியல் ஆய்வுகளில் முக்கிய மானது. மட்டக்களப்பு வழக்கு மொழி, யாழ்ப்பாணத்து வழக்கு மொழியிலின்றும் வேறுபட்டது என்பதனை நிறுவிச்செல்கிறார். இக்கட்டுரையில், "மட்டக்களப்பு நான் பிறந்த நாடு,ஈழத்தின் கிழக்குப் பாகத்திலுள்ளது. அந்நாட்டு வழக்கு மொழி யாழ்ப்பாணத்து வழக்கு மொழியிலின்றும் வேறுபட்டது" என்று கூறுகின்றார். "இக்குறிப்பு செக்கோஸ்லாவாக்கிய நாட்டைச் சேர்ந்த தமிழறிஞர் கமில் ஸ்வலப்பில் என்பவரை மட்டக்களப்புப் பேச்சு வழக்கை ஆராய ஊக்கப்படுத்தியது. இதுபற்றி அவர் எழுதிய கட்டுரைக்கு மகுடவாசகமாக மேற்காட்டப்பட்ட சுவாமியின் குறிப்புரையை எடுத்தாண்டுள்ளார்" (1998: 16). இலங்கையிற் பேசப்படும் வழக்குத்தமிழில் அவர் கொண்டிருந்த ஈடு பாட்டினை இக்கட்டுரை மூலம் அறியலாம். பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் நாநாடகத்தை மையமாகக் கொண்டு ஈழத்துத் வழக்குத் தமிழ் ஆராயப்படுகிறது. தமிழ் மொழி ஒலியியல் பற்றி ஆராய்கிறது. மட்டக்களப்பு, யாழ்ப்பாண வழக்கு மொழி பற்றிய ஆராய்ச்சி நாநாடக நூலில் வரும் கொடுந்தமிழ் வழக்கு அறநூல் , பொருநூல், இன்பநூல் வீட்டு நூல் என்பன செந்தமிழில் ஆக்கப்பட வேண்டியதன் அவசியம் என்பவற்றை "சோழ மண்டலத்துத் தமிழும் ஈழ மண்டலத்துத் தமிழும்" எனும் கட்டுரையின் வாயிலாக தமிழ்மொழியின் ஒழிபியல் பற்றி ஆராய்வதாக உள்ளது.

நவீன இலக்கியம் சார்ந்த கட்டுரைக்கு "பாரதியார் கவி நயம்" உரத்த உதாரணமாகின்றது. "பாரதி பாடல்"என்ற கட்டுரையை விவேகானந்தன் (1962 ஆனி, புரட்டாதி, ஐப்பசி) இதழ்களிலே எழுதினார். இதில் பாரதியின் கவித்திறனையும் புதுமை சார்ந்த அணுகுமுறையினையும் அலசியுள்ளார்.

விபுலானந்தர் தமிழ் இலக்கிய வரலாறு பற்றிய கட்டுரைகளையும் எழுதியுள்ளார். The origin and Growth of Tamil Literatureசங்ககாலத்து தெய்வ வழிபாடு, தொல்காப்பியமும் சைவமதமும், யாழ்ப்பாணத்துத் தமிழ்ப்புலவர் சரித்திரம் போன்ற கட்டுரைகள் அத்தகைய வரிசையில் குறிப்பிடத் தக்கவை. உதாரணமாக தமிழ் இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் (The origin and Growth of Tamil Literature) என்ற கட்டுரை தமிழ் மக்களின் வரலாற்றுத் தொடக்கத்தைப் பற்றிக் கூறுவதுடன் அவர்களின் உலகப் பரம்பல், பண்பாடு அக்காலத்தில் ஏற்பட்ட கடல்கோள் ஆகியவை பற்றிய செய்திகளைத் தந்து, தமிழ் இலக்கிய வரலாற்றை ஆராய முனைகின்றது.

தமிழர்பண்பாட்டில் கலைமகளாகிய சரஸ்வதியை வாணி என அழைப்பர். அதனை ஆதாரமாகக் கொண்டு ஆங்கில இலக்கியங்களுக்கு "ஆங்கிலவாணி" என நாமமிட்டு ஆங்கிலக் கவிஞர்களாகிய ஷேக்ஸ்பியர், மில்ற்றன், கீட்ஸ், ஷெல்லி, தெனிசன் முதலான ஆங்கிலப் புலவர்களை அறிமுகம் செய்து, அவர்களது படைப்புக்களை திறனாய்வு செய்துள்ளார். மேலும்,ஆங்கில இலக்கியங் களின் வரலாற்றில் தனித்துவமாக பிரகாசிக்கும் புலவர்களை ஒரு விமர்சன, ஒப்பியல் அணுகுமுறையுடன் குவிமையப் படுத்தியுள்ளார். பின்வரும் பகுதி இதற்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது:

"கி.பி. 1340 முதல் 1400 வரையும் வாழ்ந்த சாசர் (Chaucer) என்னும் கவியை ஆங்கிலக் கவிதைவானின் உதய தாரகையென இலக்கிய வரன்முறை ஆசிரியர் கூறுவார். இவர் முதலிலே தோன்றிய காரணத்தினாலே பெருமை யுற்றனரேயன்றிக் கவித்திறமையி னால் அல்ல. பிராஞ்சிய செய்யுள் மரபினைப் பின்பற்றிப் புது யாப்புமுறைகளை வழங்கினார். கந்தர்பெரி எனப் பெயரிய ஆலயத்திற்கு யாத்திரை புரிந்த யாத்திரிகர்கள், வழியிலே ஒரு சத்திரத்தில் இறங்கி நிற்கும் போது தத்தமது யநுபவத்திலே கண்டறிந்த சரித்திரம் ஒவ்வொன்றைக் கூறுவதாக அமைத்துக் கந்தர்பெரிக் கதைகள் என்னும் காப்பியத்தையும் சில சிறு நூல்களையும் சாசர் வகுத்தார். சாசர்காலத்திலிருந்த ஒரு நூற்றைம்பது ஆண்டுகளுக்குப் பின் வாழ்ந்த ஸ்பென்சர் (கி.பி. 1552-1599) என்னும் மகாகவி கவிஞர்க்குள் கவிஞர் எனப் போற்றப்பட்டார். இவரியற்றிய அரமடந்தையார் இராணி (Fairy Queen) என்னும் பெருங்காப்பியம் கவிநயம் நிறைந்தது, கற்பனையிலும் செஞ்சொல்லாட்சியிலும் நமது சீவகசிந்தாமணியை நிகர்த்தது".

இக்கட்டுரையில் ஷேக்ஸ்பியரை வித்தியாசமான முன் னோட்டத்துடன் அறிமுகம் செய்கின்றார். (சோக்கிரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்டோட்டில் போன்ற மெய்யிலாளர்களை சோக்கிரதீஸ், பிளேத்தோ, அர்ஸ்தாத்தில் என எழுதியது போல, ஷேக்ஸ்பியரை செகசிற்பியார் என்றே எழுதியிருக் கின்றார்.)

"எலிசபெத் இராணி காலத்திலே, அமெரிக்காக் கண்டத்துப் பொருட்செல்வமும் பழைய யவன புரத்துக் கலைச் செல்வமும் ஆங்கிலநாட்டுக்குரியவாயின. ஸ்பென்சர் என்னும் மகாகவி "அரமடந்தையர் இராணி" என்னும் பெருங்காப்பியத்தோடமையாது அழகு பொருந்திய சிறு காப்பியங்கள் பலவற்றையும் செய்தார். "ஆயன் நாட்குறிப்பு" என்பது அவற்றுள் ஒன்று. இது இயற்கை வனப்பினைக் கூறுவது. பலவகையிலும் ஆங்கில நாடு பொலிவுற்ற இக்காலத்திலே தான் செகசிற்பியார் என்னும் சிறந்த நாடகக் கவி தோற்றினார். இவருடைய கவி வனப்பினை மதங்க சூளாமணி என்னும் நூலிலே சற்று விரிவாகக் கூறியிருக்கின்றாம். யூலியஸ் சீசர் என்னும் நாடகத்தின் ஒரு பகுதியின் மொழிபெயர்ப்பை ஈங்குத் தருகின்றோம்".

ஜூலியஸ் சீசர் (யூலியஸ் சீசர்) என்ற நாடகத்தின் பாட்டிடையிட்ட ஒரு உரைப்பகுதி இக்கட்டுரையில் பின்வருமாறு அமைந்துள்ளது.

"யூலியசீசரின் மனைவி கல்பூர்ணியா தீக்கனாக் கண்டு அச்சமுறெழுந்து புறத்தே நிகழ்கின்ற உற்பாதங்களினால் உள்ளம் அவலித்துத் துயிலெழுந்திருந்து காலைப்பொழுது வந்ததும் கணவனது முன்னிலையை அடைந்து

பேரிரவில் நடந்ததெல்லாம் பீழையினை விளக்கப்
பேதலிக்கும் உளச் சிறியேன் பேசுகின்ற மொழிகள்
ஆருயிர்க்குத் தலைவ! நினதருட் செவியில் வீழ்க.
அகத்திடையின் நிருந்திடுக. அவைபுகுத வொழிக.
எனக்குறையிரந்து வேண்டி நின்றாள்.
அதனைக் கேட்ட சீசர் புன்னகை புரிந்து.

அஞ்சினர்க்குச் சதமரணம். அஞ்சாத நெஞ்சத் (து)
ஆடவர்(க்) ஒரு மரணம். அவனிமிசைப் பிறந்தோர்
துஞ்சுவர்என் றறிந்தும் சாதலுக்கு நடுங்கும்
துன்மதிமூ டரைக் கண்டாற் புன்னகை செய் பவன்யான்.

இன்னலும் யானும் பிறந்த தொருதினத்தில் அறிவாய்
இளம் சிங்கக் குருளைகள் யாம்; யான் மூத்தோன் எனது
பின் வருவது இன்னல் எனப் பகை மன்னர் அறிவார்
பேதுறல் பெண்ணணங்கே யான் போய் வருதல் வேண்டும்.

எனக் கூறினார்".

"ஆங்கில வாணி" கட்டுரையில் குறிப்பிட்டது போல, ஷேக்ஸ்பியரின் நாடகங்களை அடிப்படையாகக் கொண்டு பல திறனாய்வுக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார். இக்கட்டுரைகள்,"மதங்க சூளாமணி" என்ற தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. "ஆங்கில வாணி" கட்டுரையில் ஆங்கில இலக்கியங்களையும் அறிமுகஞ் செய்து அவ்விலக்கியங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலிருந்து சில சுவையான செய்யுட் பகுதிகளைத் தமிழிலே செய்யுளாக மொழிபெயர்த்து யாத்து ஆங்கில இலக்கியங் களை அறியாதவர்கள் ஆங்கில இலக்கிய நயத்தைச் சுவைக்க செய்துள்ளார். இக்கட்டுரை ஒப்பியற் கல்வித் துறைக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது.

விபுலாநந்தரின் ஆங்கில உரைநடைப் போக்குக்கும் அவர் கையாளும் தமிழ்உரைப் போக்குக்கும் உள்ள வேறுபாட்டை பேராசிரியர் கா.சிவத்தம்பி (ஈ.த.சு; 2010: 79) பிரக்ஞைப் பூர்வமாக சுட்டிக்காட்டியுள்ளார். "Ancient Thoughts of Modern Man" என்ற நூலை வாசித்துப் பார்த்தால் அதில் காணப்படுகின்ற மிகச் சரளமான ஆங்கில நடை எம்மைக் கவரும். அந்த நடை புதுமைப்பித்தன் சொல்வது போன்று, "கருத்தை எடுத்துச் சொல்வதற்காகப் பாய்ந்து செல்லுகின்ற ஒரு நடையாகும்". அப்படியான ஒரு ஆங்கில நடை அவருக்குக் கைவந்திருக்கின்றது. அவர் "பிரபுத்த பாரத", "வேதாந்த கேசரி"ப் பத்திரிகைகளுக்கு எழுதுகிற பொழுது அந்த நடையைக் கையாளுகிறார். ஆனால் அதே விபுலாநந்தர் தமிழில் "விபுலாநந்த அமுதம்" என்ற நூலிலே தொகுக்கப்பட்ட கட்டுரைகளைத்தவிர மற்றக் கட்டுரை களிலே மிகவும் செந்நெறிப்பட்ட தொல்சீர்த்தன்மை வாய்ந்த ஓர் உரைநடை மரபைப் போற்றுகின்றார். "விபுலாநந்த அமுதம்" நூலில் இடம்பெற்றுள்ள 39 சிறுகட்டுரை களும் மக்களுக்கு ஆன்ம நெறியைப் போதிக்கும் பாணியிலேயே எழுதப்பட்டுள்ளன. எனவேதான், இந்நூல் விபுலாநந்தரின் நூல்களில் விதிவிலக்காக, இலகு தமிழில் அமைந்துள்ளது.

மொழியியல் அறிஞர் எம்.ஏ.நுஃமான் கூறுகின்ற சில அடிப்படையான கருத்துக்களும் அவதானத்திற்குரியன (2007). 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து, சுவாமி விபுலாநந்தர் பிறப்பதற்கு 16 ஆண்டுகளுக்கு முன் மறைந்த ஆறுமுக நாவலர், எல்லாத் தரத்தினரும் படித்து உணர வேண்டும் என்ற நோக்கில் நவீன உரைநடையை பயன்படுத்தியவர். ஓரிரண்டு வருடத்து நூற்பழக்கம் உடையோரும் படித்துணரத் தக்கவகையில் எளிமையாக எழுத வேண்டும் என்ற பாரதியின் கொள்கையும் இதனை ஒத்ததே. ஆயினும் சுவாமி விபுலாநந்தரின் பெரும்பாலான எழுத்துக்கள் சாதாரண மக்களை - குறைந்த படிப்பறிவு உடையவர்களை - மனங்கொண்டு எழுதப்பட்டவையல்ல என்பது தெளிவு. பதிலாக உயர்ந்த தமிழ்ப்புலமையுடையாரை மனங்கொண்டு எழுதப்பட்டவை. எனினும். சுவாமி விபுலாநந்தரே தனது உரைநடை விகற்பத்தை உணர்ந்திருந்தார் என்று தெரிகின்றது. "விஞ்ஞான தீபம்" கட்டுரையில் பின்வரும் குறிப்புக் காணப்படுகின்றது. "நூலின் உள்ளம் தமிழ்நூல் வடநூல் முடிவுகள் பலவற்றை யாராய்ந்து கொண்டு போவேனாதலால் இந்நூலின் முதற் பிரிவாகிய உற்பத்தி விளக்கம் உயர் நடையினதாகி பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு பயன்படாததாகும். தத்துவ விளக்கமும் (Physics), பதார்த்த விளக்கமும் (Chemistry) எளிய நடையினவாய்க் கல்லூரிப் பிரவேசப் பரீட்க்ஷ(மெற்றிக் குலேஷன்)க்கு வாசிக்கும் ஆறாவது வகுப்பு மாணவர்களுக்கு உபயோகமானவையாம்" ("விபுலாநந்த செல்வம்" பக். 50). ஆயினும் அவர்குறிப்பிடும் எளிய நடையில் அமைந்த இரண்டாவது பகுதியை விபுலாநந்தர் எழுதி முடிக்கவில்லை.

ஒருவகை இலகு செந்தமிழ் நடையினைப் பெரிதும் கையாண்ட உ.வே. சாமிநாதஐயர் போன்ற அவர்காலத்து உயர்ந்த மரபு வழித் தமிழ்ப் புலமையாளர்களைவிட உயர்வான ஒரு செந்தமிழ் நடையினை சுவாமி விபுலாநந்தர் விரும்பிப் பயன்படுத்தியுள்ளார். மேலை இலக்கியத்திலும் நவீன விஞ்ஞானத்திலும் ஆழ்ந்த ஞானம் உடைய சுவாமி விபுலாநந்தர், மறுமலர்ச்சித் தமிழின் முன்னோடியான பாரதியின் புகழ் பரப்பிய சுவாமி விபுலாநந்தர், தன் காலத்தில் பெருவழக்கில் இருந்த இலகு தமிழையும், தன்காலத்துப் பிற தமிழ்ப் புலமையாளர் பெரிதும் பயன்படுத்திய இலகு செந்தமிழையும் மேவிய ஓர் உயர் செந்தமிழ் நடையை ஏன் பெரிதும் விரும்பிப் பயன்படுத்தினார் என்ற கேள்வி நம்முள் எழுகின்றது. அவர்ஆராய்ந்த பொருள் மட்டும் இதற்குக் காரணம் என்று கூறிவிட முடியாது. இதனை சுவாமி விபுலாநந்தரின் தனிப்பட்ட ஆளுமைக் கூறாகவே நாம் கொள்ளவேண்டும்.

செந்தமிழையே தன் ஆய்வுகளில் பயன்படுத்திய விபுலாநந்தர், வழக்குத்தமிழை இழிந்த தமிழ் என்று ஒதுக்கிட முற்படவில்லை. மொழியியல் சொல்வதுபோல் பேச்சு மொழியே உயிருள்ள மொழி என்பதை அவர் உணர்ந்தே இருந்தார். இதனை பேராசிரியர் க.கணபதிப்பிள்ளைக்கு அவரெழுதிய கடிதம் நிரூபிக்கின்றது.

"நானாடகமும்,காதலியாற்றுப் படையும் கிடைத்தன. முற்றும் படித்து மகிழ்வுற்றேன். பொருளோ பொருள் எனப் பெயரிய மற்றொரு நாடகம் அரங்கேறியதாக ஈழகேசரியிற் படித்தேன். மட்டக்களப்பு வழக்கு மொழியினையும் ஓரிரண்டு நாடகங்களிலே படம்பிடித்து வைப்பது நன்று".

பேச்சு மொழியில் அமைந்த பேராசிரியர் க.கணபதிப் பிள்ளையின் நாடகங்களில் ஈர்ப்பு கொண்டவராக விபுலா நந்தர் இருந்திருக்கிறார். ஆனால் அவரது ஆக்கங்களில் ஓர் உயர் செந்தமிழ் நடையையே ஆர்வத்துடன் பயன்படுத்தி யிருக்கிறார். இதற்கு அடிப்படைக் காரணம் என்ன? பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் (2007:178) சொல்வது போல, தமிழகத்துத் தமிழ்ப் புலமையாளர் மத்தியில் ஈழத்துத் தமிழ்ப் புலமையின் மேன்மையை நிலைநாட்டும் நோக்கம் அவர் அடிமனதில் இருந்திருக்கக் கூடுமோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது. இது ஆராய்வுக் குரியதே.

"சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள்" என்று மூன்று தொகுப்பு நூல்கள் 1997 ஆம் ஆண்டு இலங்கையில் வெளி வந்துள்ளன. இவற்றில் விபுலாநந்தரின் நூற்றி இருபத்தேழு (127) தமிழ் மொழி, ஆங்கில மொழிக் கட்டுரைகள் இடம் பெறுகின்றன. அவரது ஆக்கங்கள் முழுவதும் தொகுக்கப் பட்டு விட்டன என்று சொல்ல முடியாவிட்டாலும், அனேக மானவை தொகுக்கப்பட்டு விட்டன என்று தொகுப்பாசிரியர் உரையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

## 2

**"ஈழமுதற்பனி இமயம் வரைக்கொடி கட்டும் இசைத்தமிழன்**
**இந்திய வாணியை ஆங்கிலபீடத் தேற்றிய புதுமையினோன்**
**தோழமை கொள்வட மொழிமயமாகிய தொன்மை யிசைத்தமிழைத்**
**தூயதனித்தமிழ் வடிவிற் றோற்றிய தந்தையெனுந் துணையான்**
**சூழமுதத் தமிழ் வாணர்மதிக்கொரு சோதிச் செஞ்சுடரோன்**
**சுவாமிசிவானந் தக்கடலாகிய படிமைத் தோற்றத்தோன்"**

என்று பாடினார் விபுலாநந்த அடிகளாரின் மாணவர்களில் ஒருவரான புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை. விபுலாநந்தர் ஜனிக்கின்ற வருடத்திலே உ.வே.சாமிநாதஐயர் சிலப்பதி காரத்தினை முதன் முதலாக அச்சில் வெளிக்கொணர்ந்தார். முத்தமிழையும் முத்தாய்ப்பாய் உள்வாங்கி வைத்திருக்கும் சிலப்பதிகாரத்திலே சிறுவயது முதலே விபுலாநந்தருக்கு அதிக பற்றுதல் இருந்திருக்கிறது. இதனை நன்கு கற்றுத் தெளிந்தார். குறிப்பாக அதிலுள்ள அரங்கேற்றுக்காதை, ஆய்ச்சியர் குரவை முதலியவற்றிலுள்ள இசை, நடன நுணுக்கங்களைத் தமது விஞ்ஞான அறிவு கொண்டும் ஆய்வு நுட்பத்துடனும் அவதானித்தார். இவற்றைவிட ஏனைய பழந்தமிழ் இலக்கிய நூல்களிலுள்ள இசை, நடனம் பற்றிய குறிப்புகளையும் திரட்டி குறிப்பாகப் பழந்தமிழரின் இசையான பண் இசை, யாழ், குழல் முதலிய இசைக்கருவிகள் பற்றி ஆய்வுப் பேருரைகள் நிகழ்த்தினார். கட்டுரைகள் எழுதினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இயல்பாகவே அடிகளாருக்கு கலைகளிலிவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. எடுத்துக்காட்டாக,"ஒரு நாட்டின் மக்களுடைய மனோநிலையும், கலையுணர்ச்சியும், நாகரிகமும், சங்கீதம், சித்திரம், சிற்பமிவையாலேயே தெளிவுபடும்" எனவும் "உண்மையை உணர்த்துவனவும், அழகினிமையை அவாவி நிற்பனவும் நன்மையே உறுதியெனத் துணிவிப்பனவுமாகக் கலைகள் ஒவ்வொரு திறத்தையும் மேவி நிற்பன. இவை உண்மை, அழகு, நன்மை எனும் மூன்றினையும் தந்து சித்தம் முழுவதிலும் ஒருங்கு பற்றும் ஆற்றல் வாய்ந்தன" எனவும் கூறியிருப்பனவற்றால் தெளிவாகும்; (2016: 338). கவிதை எழுதுகின்ற ஆற்றலுடன் விபுலாநந்தருக்கு இசைப் பாடல்கள் ஆக்கும் திறனும் இருந்திருக்கின்றது. "நீரர மகளிர்" என்ற பாடல் இதனை நிரூபிக்கின்றது. கவித்துவ கற்பனையும் இசைக்குரிய நயமும் ஒருங்கே இப்பாடலில் பதிகையாகியுள்ளன. ஏழு நீரர மகளிர் அழகுருவாக ஆடல் பாடல்களில் திளைப்பது, ஏழு சுரங்களாகவே எழுகின்றன. இராகங்களை படிமமாக்குகின்ற மரபு இந்திய இசையில் காணப்படுகின்றது. அடிகளார் இந்த மரபை அடியொற்றியே இப்பாடலைப் படைத்திருக்கின்றார். எடுத்துக்காட்டாக பின்வரும் பகுதியினைக் குறிப்பிடலாம்:

"நீதி - சாச - ரீ நீல வானிலே
நீசரி - காக - மா நிலவு வீசவே
மாம - பாப - தா மாலை வேளையே
மபத - நீநி - சா மலைவு தீருவோம்
சாச - ரீரி - சால நாடியே
சரிக - மாம - பா சலதி நீருளே
பாப - தாத - நீ பாலை பாடியே
பதநி - சாச - ரீ பலரோடாடுவோம்"

ஆக,ஆரம்பகாலம் முதலே அடிகளாரின் ஆத்மா இசையோடு பயணித்திருக்கின்றது.

விபுலாநந்தர் தமிழ் நாட்டில் வாழ்ந்த காலம் தமிழிசை இயக்கம் வேகம் பெற்ற காலமாகும். 1941 ஆம் ஆண்டில் உருவான தமிழிசை இயக்கம் இவரின் பழந்தமிழிசை ஆய்வுக்கு ஓர் உந்துகோலாக அமைந்தது. 1920ல் அண்ணாமலையில் அண்ணாமலைச் செட்டியார் இசைக் கல்லூரியை நிறுவியதிலிருந்து இவ்வியக்கம் வேகம் பெறுகிறது. இதற்கு முன்னரேயே தமிழரின் இசை ஆராய்ச்சி ஆரம்பமாகி விட்டது 1907 ல் "கர்ணாமிர்த சாகரத்திரட்டு" எனும் நூலையும் 1917ல் "கர்ணாமிர்த சாகரம்" எனும் நூலை யும் ஆபிரகாம் பண்டிதர் வெளியிடுகிறார். இந்த பின்னணி யிலே தான் விபுலாநந்தரின் இசை ஆர்வமும் உருவாயிற்று. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரிய ராக இருக்கின்ற காலத்தில் (1931–33) அப்பல்கலைக் கழகத்தில் இருந்த இசைக் கல்லூரியை மேற்பார்வை செய் கின்ற பொறுப்பும் இவரிடமே இருந்தது. இது அவரது இசை பற்றிய தேடலுக்கு இன்னும் உற்சாகத்தை ஊட்டிற்று. அந்த இசைக்கல்லூரியின் இசை பயிற்றுவிப்பாளராக இருந்த சங்கீத வித்துவான் க.பொன்னையாபிள்ளை என்பவரிடம் கர்நாடக இசையமைதி பற்றி தெளிவாக தெரிந்து கொண்டார். க.பொன்னையாபிள்ளையின் தொடர்பு அவரது இசை ஆய்வுத் தேடலை அகலப்படுத்திற்று. 1934இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வுச் சொற்பொழி வாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தில், பழந்தமிழ் இசை, ஓவியம், கலை பற்றி உரையாற்றினார். இந்த உரையில் யாழ் பற்றிய செய்திகளைச் சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் முதலான வற்றினை சான்றுகளாகக் கொண்டு விளக்கியதுடன், ஓவிய வடிவிலும் யாழ்களின் பல்வேறு உருவங்களை புலப்படுத்தினார்.

"யாழ்நூலை" உருவாக்கும் முன்னரேயே அடிகளார் இசை பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தமையை அவரது இசை பற்றிய கட்டுரைகள் உணர்த்துகின்றன. 1940 லிருந்து அவரது முழு நோக்கும் இசையின் பால் திரும்பி இருக்கவேண்டும். வங்கியம் (1942) சங்கீத பாரிஜாதகம் (1942) நட்டபாடைப் பண்ணின் எட்டுக் கட்டளைகள் (1942) பாரிஜாத வீணை (1944) நீரரமகளிர் இன்னிசைப்பாடல், பண்ணும் திறனும் சூழலும் யாழும், எண்ணும் இசையும், பாலைத்திரிபு, சுருதிவீணை, இயலிசை நாடகம் போன்ற அவரது கட்டுரைகளும் பாடல்களும் அவர் இசைபற்றிச் சிந்தித்தமைக்கு உதாரணங்களாகும். இத்தகைய நீண்ட கால தேடலும் ஆய்வுக் கண்ணோட்டங்களுமே "யாழ் நூல்" என்ற இசை பற்றிய உயர்ந்த படைப்பை வெளிக்கொணர்ந்தது என்பது வெள்ளிடைமலை! "யாழ்நூலி"ல் விபுலாநந்தர் பௌதிக விஞ்ஞானத்தையும் தமிழறிவையும் இணைத்த ஒரு ஆய்வுமுறையை பின்பற்றியுள்ளார். இந்த ஆய்வினை எழுதுவதற்குச் சுவாமிகள் சங்க நூல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, தொல்காப்பியம், சைவத்திருமுறைகள், பெருங்கதை, சீவக சிந்தாமணி முதலிய தமிழ் நூல்களையும் நாட்டிய சாஸ்திரம், சங்கீதரத்னாகரம், சங்கீத மகரந்தம், சங்கீத பாரிஜாதம், சதுர் தண்டீபிரகாசிகா முதலிய வடமொழி நூல்களையும், குடுமியாமலைக்கல்வெட்டு முதலிய தொல்லியல் சின்னங்களையும், வரலாற்று ரீதியிலும், ஒப்பியல் ரீதியிலும், விஞ்ஞான ரீதியிலும் ஆராய்ந்து பழந் தமிழர் மத்தியிலே நிலவி வழக்கற்றுப்போன ஆறு வகை யாழ் களின் அமைப்புக்களை மீண்டும் உருவாக்கி, "யாழ்நூலா"க ஆக்கியுள்ளார். தேவார இசைத்திரட்டும் இசை நாடக சூத்திரங்களும் புறவுறுப்பாக அமைந்த "யாழ்நூல்" பாயிரவியல் முதலாக ஒழிபியலீறாக ஏழு இயல்களை உடையது. சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையில் யாழாசிரியன் அமைதி கூறும் இருபத்தைந்து அடிகளுக்கு இயைந்ததொரு விரிவுரையாக இந்நூல் அமைந்துள்ளது. வழக்கொழிந்து போன இசைநூல் இலக்கணத்தையும் முளரியாழ், ஆயிர நரம்பு யாழ் போன்ற வழக்கொழிந்த யாழ்களையும் "யாழ்நூல்" கூறுவதாகவுள்ளது. தேவாரப் பதிகங்கள் முழுமைக்கும் யாப்பமைதி, கட்டளையமதி, சுவையமதி என்பவற்றைத் தந்து ஆயிரம் ஆண்டுகளாக மறைந்து கிடந்த கலைச்செல்வத்தை மீண்டும் நாம் பெறுவதற்கு'யாழ்நூல்" உதவுவதாகவுள்ளது. "யாழ்நூலி"ன் இரண்டாம் அதிகாரமாகிய யாழ் உறுப்பியற் பகுதியில் வில்யாழ் அமைப்பு, இசைக்கூட்டு முறை என்பவற்றை ஆராய்வதாக உள்ளது.

"யாழிலே இவர் மிகக் கூடுதலான கவனத்தைச் செலுத்தித் தமது இசை ஆய்வுகளின் ஆழத்திற்கும், அகலத்திற்கும், மகுடமாய் மிளிரத்தக்க வகையில் "யாழ்நூல்" எனும் பேராய்வு நூலினை இயற்றினார். பல ஆண்டுகளாக மறைந்து இலக்கியத்தில் மட்டும் நினைவு கூரப்பட்டு வந்த யாழ் பற்றிய இந்நூல், பல ஆண்டுகளாக சுவாமிகள் செய்து வந்த ஆய்வுகளின் விளைவாகும். "மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்து கொண்டு இனத்திற் சேர்த்தியுணர்த்தல் வேண்டும்" என்னும் தொல்காப்பியர் கூற்றே தமது ஆய்வின் குறிக் கோளாக இலங்கி வந்ததென அவர் கூறியுள்ளார். இளங்கோ வடிகள் சிலப்பதிகாரத்தி லுள்ள அரங்கேற்ற காதையில் யாழாசிரியனமைதி கூறும் 25 அடிகளுக்கு இயைந்ததொரு விரிவுரையாக இந்நூல் எடுத்துக் கொள்ளப்பட்டதென விபுலாநந்தரே குறிப்பிட்டுள்ளார்" (2016: 345).

யாழ் இசையின் அழகியல் சிறப்பு பற்றி அடிகளார் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "இசையின்பத்தை அள்ளித் தருவதும், மனிதனைக் கவஉந்து செவிக்கின்பம் பயப்பது மாகிய யாழினிசை செவியினைப் பீற்றுவதற்கு நல்லது. இசையை அநுபவிக்கும் உள்ளம் நெகிழ்துருகும் தன்மை யடைகின்றது. கல்லெனவுள்ள நெஞ்சமும் கரைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழானது ஆளுடைய பிள்ளையார் காலத்தில் தெய்வமீதமர்ந்த பொற்பலகை மீதேறி அன்பருள்ளத்தை உருக்கி அருட்கவியாயிற்று. கொங்குவேளிரும், திருத்தக்க தேவரும் நூலெழுதிய காலத்தில் அரசிளங் குமரிகளின் கையிலேறி அவர் மனம் விரும்பிய காதலரை அவருக்கு அளிக்கும் அருங்கவியாயிற்று. இத்தகைய யாழிசை மாணவருள்ளத்தைப் பண்படவைக்கும் தன்மையது".

சுவாமி விபுலாநந்தர் பதினைந்து ஆண்டு காலம் ஆராய்ந்து கண்டுணர்ந்த "யாழ்நூலி"னைக் கரந்தை தமிழ்ச் சங்கத்தின் ஆதரவுடன் திருக்கொள்ளம் பூதூர்த் திருக்கோயிலில் நாளும் செந்தமிழ் இசைபரப்பிய ஞானசம்பந்தனின் சந்நிதானத்தில் இசை விற்பன்னர்கள் வியக்க, கற்றோரும், மற்றோரும் பாராட்ட தேவாரப்பண்களை தாமே அமைத்து, 1947 ஆம் ஆண்டு ஆனித் திங்களில் அரங்கேற்றினார். "யாழ் நூலி"ன் மூலமாக அடிகளார் பண்டைத் தமிழ் இசை மரபை மீட்டெடுத்துள்ளார். " "யாழ்நூல்" பற்றிப் பல அறிஞர்கள் போற்றி புகழ்ந்துள்ளனர். எனினும் முறையான மதிப்பீடு ஒன்றினை யாரும் இதுவரை செய்ய முயன்றாரில்லை. அடிகளார் மீது மற்றோர் கொண்டு இருந்த மதிப்பும், பத்தியும் புற நிலையான ஆய்வுக்குத் தடையாக அமைந்திருக்கலாம். அல்லது இசை ஆய்வு ஒரு துறையாக இன்னும் தமிழரிடை வளராமையும் ஒரு காரணமாயிருக்கலாம்" என்பது பேராசிரியர் சி.மௌனகுருவின் அபிப்பிராயமாகும் ("சுவாமி விபுலாநந்தர் காலமும் கருத்தும்";1993).

" "யாழ் நூல்" ஒரு மிகவும் சிக்கலான ஒரு பாடம் (difficult text). அதனை முதல் தடவை வாசித்து விளங்கி விட்டேன். அல்லது அதனை நன்றாக விளங்கிக் கொண்டுவிட்டேன் என்று யாராவது சொன்னால் அதனை உடனடியாக நாங்கள் நம்புவதில் சற்றுத் தயக்கம் காட்டவேண்டும். ஏனென்றால் அது கணிதத்தின் அடிப்படையில் கருக்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு. ஆற்றுகையின் அடிப்படையில் தோன்றியது அல்ல" என்பது கா.சிவத்தம்பியின் (ஈ.த.இ.; 2010: 94) கணிப்பாகும். பேராசிரியர் எம்.ஏ.நுஃமானும் (2007: 171, 172) இதே மாதிரியான ஒரு மொழிதலை முன்வைத்துள்ளார்: "இசை, பௌதிகம், கணிதம், பழந்தமிழ் இலக்கியம் ஆகியவற்றில் பரிச்சயம் இல்லாத ஒருவர் இந்நூலைப் படித்துப் பூரணமாகப் புரிந்துகொள்ள முடியாது. இன்று "யாழ்நூலை"ப் பாராட்டுவோரும் அதனைப் படித்துப் புரிந்துகொண்டவர்கள் என்று கூறமுடியாது. துறைசார்ந்த கலைச் சொற்கள் இரண்டாவது காரணமாகும். இது பொருளோடு தொடர்புடையது. தத்துவம், பௌதீகம், மொழியியல் போன்ற துறைகள் சார்ந்த நூல்களைப் படித்துப் புரிந்துகொள்வதற்கு அத்துறைகள் சார்ந்த கலைச் சொற்கள் பற்றிய அறிவு நமக்கு அவசியமாகும். "யாழ்நூலை"ப் படிக்கும் போது உழை, உளி, விளரி, தாரம், குரல், துத்தம், கைக்கிளை போன்ற பண்டைய இசைத்துறைக் கலைச் சொற்கள் நமக்கு இடைஞ்சல் தருகின்றன".

தொன்மைத் தமிழ் இசைக் கருவிகளையும் இசையையும் வெளிக் கொணர்வதும், தமிழிசை வரலாற்றை விளக்குவதும், இசை ஆராய்ச்சிக்கு இன்றியமையாத கணக்கு முறைகளைக் கணிதம் மூலம் விளக்குவதும் "யாழ் நூலி"ன் நோக்கங்களாக உள்ளன. தொன்மை இசைக் கருவியான யாழை மீளுருவாக்கம் செய்தமை அடிகளாரது பெரும்சாதனையே என்பதில் ஐயமில்லை.

3

"அங்கணுல கனைத்தினையும்
ஆடவரங்க மெனலாகு மவனி வாழும்
மங்கையரை யாடவரை நடம்புரியு
மக்களென மதித்தல் வேண்டும்
இங்கிவர்தாம் பலகோல மெய்திநின்ற
நாடகத்தி னியல்பு கூறிற்
பொங்குமாங்க மேழாகிப் போக்குவர
விருக்கையொடு பொருந்து மன்றே"

இக்கவிவரிகள் விபுலாநந்தரின் "மதங்கசூளாமணி" நூலின் முகவுரையில் உள்ளது. "உலகனைத்தும் ஒரு நாடக மேடையாமெனவும், ஆடவரும் பெண்டிரும் அந் நாடக மேடையினுட் புகுந்து நடிக்கின்ற கூத்தருங்கூத்தியருமாவ ரெனவுங்கூறிய ஒர் ஆங்கிலக் கவிவாணர் (ஷேக்ஸ்பியர்) உளர். சிறந்த நாடகக்கவியாகிய இப்பெருந்தகையார் உலக வாழ்க்கையனைத்தையுமே ஒருநாடகமாகக் கற்பித்து அதனை மதலைப் பருவம், பாலப் பருவம், யௌவனப் பருவம்,வீரப்பருவம், நீதிப்பருவம், வயோதிகப்பருவம், இறுதிப்பருவம் என ஏழங்கமாக்கிக்கூறியது சாலவுஞ் சிறப்புடைத்து. அக்கூற்று வருமாறு" என்று முத்தமிழ் வித்தகர்"மதங்கசூளாமணி"யின் முகவுரையில் குறிப்பிட்டு, ஷேக்ஸ்பியரின் அந்த பாடல்களை தமிழில் பெயர்த்துத் தந்துள்ளார்.

பேராசிரியர்விபுலாநந்தர் நாடக ஆராச்சியாளராகவே செயற்பட்டிருக்கின்றார். நாடக நூல்களை அல்ல, நாடக ஆய்வு நூலையே அவர் எழுதியிருக்கின்றார். "விபுலாநந்தர் கூத்து (நாடக) தமிழில் இறைவாப் புகழ் படைத்த நூல்கள் பல உருவாக்கினார்" என்ற அவதானிப்பு பிழையானதாகும். "மதங்க சூளாமணி" இவருடைய நாடகம் பற்றிய ஆய்வு நூலாகும். 1924 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் 23வது ஆண்டுவிழா பாண்டித்துரைத் தேவரின் மாளிகையில் இடம்பெற்ற போது, விபுலாநந்தர் நிகழ்த்திய உரையே விரிவாக, செந்தமிழ், இதழில் 1924 ஜுலை முதல் தொடர் கட்டுரையாக வெளியிடப்பட்டு வந்தது. அச்சங்கத்தினராலேயே "மதங்க சூளாமணி" என்ற இந்நூல் 1926 ஆம் ஆண்டில் அச்சில் வெளியிடப்பட்டது. இரண்டாம் பதிப்பு அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தில் பதிப்பிக்கப் பட்டு, இலங்கை, பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் 19, 1987இல் வெளியிடப்பட்டது.

இந்நூல் பற்றிய பேராசிரியர் கா.சிவத்தம்பியின் கருத்து குறித்துக்காட்டத்தக்கது: "சுவாமி விபுலாநந்தர் 1926இல் நாடக இலக்கணம் பற்றி வெளியிட்ட நூலான மதங்க சூளாமணி, கி.பி.10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சமஸ்கிருத நூலான தசரூபகத்திற் குறிப்பிட்ட வாறு நாடகவியற் கோட்பாடுகளைத் தருவதுடன், ஷேக்ஸ்பியர் நாடகங் களின் சில பகுதிகளை மொழிபெயர்த்துத் தமிழ் மரபுக்கேற்றவாறு பாத்திரங்களுக்குப் பொருந்துமாறு இந்தியப் பெயர்களைத் தருகின்றது. அந்நூலின் முடிவுரையில் தொலைந்துபோன பண்டைய நாடகவியல் நூல்களையும், உரையாசிரியரால் குறிப்பிடப்பட்ட விடயங்களையும் விவாதித்துள்ளார். யாழ் நூலின் முடிவுரையிற்கூட நாடக மரபு பற்றிய விளக்கங்களைக் கொடுக்கக்கூடிய சில தகவல்களைத் திரட்டியுள்ளா ரெனினும் அது தொடர்ச்சியான வரலாறாக இல்லை" ("பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம்"; 2005: 8).

இந்நூல் உறுப்பியல், எடுத்துக்காட்டியல், ஒழிபியல் என்னும் மூன்று இயல்களைக் கொண்டமைந்துள்ளது. இதுபற்றி விபுலாநந்தர் பின்வருமாறு எழுதுகின்றார்: "நாடகவழக்கினை யாராயப்புகுந்த இவ்வாராய்ச்சியை உறுப்பியல், எடுத்துக்காட்டியல், ஒழிபியல் என மூன்று இயலாக வகுத்துக் கொள்வோம். முன்னின்ற உறுப்பியலுள் நாடகவுறுப்புக்கள் இவையென ஆராய்ந்துணர்வாம். எடுத்துக்காட்டியலினுள், செகசிற்பியார் இயற்றிய நாடகங்கள் பன்னிரண்டினைச் சந்தியும் சுவையும் நோக்கியாராய்வாம். ஒழிபியலுள் எஞ்சிய நாடகவிலக்கண முடிபுகளை இயன்றவரை யாராந்துணர்வாம்".

முதலாவது இயலில் தமிழ் இலக்கண இலக்கியங்கள் கூறும் நாடகத் தமிழ் பற்றிய கருத்துக்கள் கொடுக்கப் பட்டுள்ளன. சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரையினால் பெறப்பட்ட அறிந்து போன நாடகத்தமிழ் நூல் சூத்திரங்கள் சிலவற்றை ஆதாரமாகக் கொண்டு தமிழ் நாடக இலக்கியத்தை உரைக்கின்றார். இவ்வியலில் நாடக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்புக்கள், நாடகத்திற்குரிய கட்டுக்கோப்பு நாடகத்திற்கான பாத்திரங்கள், நாடகம் தரும் சுவை என்பன பற்றி இந்திய ரசக்கோட்பாட்டின் அடியாக எடுத்துக் கூறப்படுகிறது.

இரண்டாவது இயலில் ஆங்கில நாடக ஆசிரியரான ஷேக்ஸ்பியரின் பன்னிரெண்டு நாடகங்களின் சிறப்பியல்புகள் விளக்கப்பட்டுள்ளன. 12 நாடகங்களும் உறுப்பியலிற் கூறப்பட்ட தமிழ் நாடக இலக்கணங்களுக்கு அமைய ஆராயப்படுகின்றன. நாடகத்தின் அமைப்பை முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் என விளக்கி அந்த அமைப்பு இந்த நாடகங்களில் எவ்வாறு காணப்படுகிறது என்பதனையும். அத்தோடு நாடகம் தரும் வீரம், அச்சம், இளிவரல், அற்புதம், இன்பம், அவலம், நகை, உருத்திரம், நடுவு நிலையாகிய ஒன்பது சுவைகளையும் குறிப்பிட்டு, அச்சுவைகளை இந்நாடகங்கள் எவ்வாறு தருகின்றன என்பதனையும் துலக்குகிறார். இதற்காக அவர் 12 நாடகங்களையும் முழுமையாக தமிழில் பெயர்க்கவில்லை. "விபுலாநந்தர் கேஷ்க்ஸ்பிரியரின் நாடகங்களை மொழி பெயர்த்தார்; என்று சொல்வது உண்மையல்ல. இந்நாடகங்களை அறிமுகம் செய்யும் போது தமது ஆராய்வுக்குத் தேவையான பகுதிகளை மாத்திரமே அவர் மொழி பெயர்த்திருக்கின்றார். இப்பன்னிரண்டு நாடகங்களில் சிலவற்றின் அமைப்பை விஸ்தாரமாகக் காட்டிச் செல்லும் அவர் சிலவற்றின் கதைகளை மாத்திரமே குறிப்பிட்டுள்ளார். சேக்ஸ்பியரை மாத்திரம் அறிமுகப்படுத்தாது கிரேக்க நாடகங்களையம் ஆட்டுப்பாடலிலிருந்து அது தோன்றியமையையும் இணைந்து ஆட்டுப்பாடலைத் தமிழரின் பண்டைய வேலனாட்டத்துடன் ஒப்பிடுதல் பின்னோக்கிப் பார்க்கையில் நாடக ஆராய்ச்சியில் அவர் கொண்டிருந்த தூரப் பார்வையினைப் புலப்படுத்துகிறது.

மூன்றாம் இயலில் நாடகம் பற்றிப் பலராலும் கூறப்பட்ட கருத்துக்கள் தரப்பட்டுள்ளன. ஒழிபியல், தனஞ்ஜயர் வடமொழியில் இயற்றிய நாடக இலக்கண நூலான தசரூபகத்தின் முடிபுகளைத் தொகுத்துக் கூறுகிறது. தனஞ்ஜயர் பரத நூல், நாட்டிய சாஸ்திரத்தில் பொதிந்து கிடந்த அரிய இலக்கணங்களை எல்லாம் ஆராய்ந்து தொகுத்துச் செய்ததே தசரூபகம். இதனால் வடமொழி நாடக இலக்கணங்களை ஒழிபியலில் அறிமுகம் செய்ய முயற்சிக்கிறார் எனலாம். இதனைவிட தொல்காப்பியச் சூத்திர உரையினின்று எடுக்கப்பட்ட நாடகத்திற்குரிய அபிநயம் பற்றிய சூத்திரங்களுடன் நடித்தல், நாடகத்திற்கு பாட்டு வகுத்தல், ஆட்டம் அமைத்தல், அரங்கின் அமைதி பற்றிய செய்திகளும் தரப்பட்டுள்ளன.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடக மரபு தமிழ் அரங்கியலுக்கு வந்துவிட்டது. படித்த மத்தியதர வகுப்பினர் ஐரோப்பிய நாடகங்களை நேரடியாகவும் தழுவலக் கூடாகவும் அறிமுகப்படுத்தினர். அடிகளாருக்கு முன்னர் 1880இல் ஷேக்ஸ்பியரின் "ரெம்பஸ்ட்" என்ற நாடகத்தை "காற்றுமழை" என்னும் பெயரில் விசுவநாதன் பிள்ளை மொழி பெயர்த்திருக்கின்றார். அடிகளார் தமிழில் நாடகம் தனித்துவமாக பொலிவுற வேண்டும் என்ற விருப்பில் ஷேக்ஸ்பியரை தமிழ் மரபுக்கேற்றவாறு அறிமுகம் செய்வதுடன், வடமொழி நாடக மரபையும் அறிமுகப்படுத்தி தமிழ் நாடக மரபை ஆய்வுக்கு உட்படுத்துகின்றார். தமிழ் நாடகவெளி உலக நாடக நுட்பங்களை உள்வாங்கி வளர்தல் வேண்டுமென்பதே அவரது ஆசையாக பரிணமித்திருக்கின்றது.




விபுலாநந்தர் வாழ்ந்த காலத்தில் ஐரோப்பிய நாடக மரபுக்கு இயைய நாடகங்களை மேடையிடுவோரில் பம்மல் சம்பந்த முதலியார் முக்கியமானவராகத் திகழ்ந்தார். வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், கலாவதி, மானவிஜயம் என்னும் நாடகங்களை எழுதியதுடன் "நாடகவியல்" என்றதொரு நாடக இலக்கண நூலையும் எழுதினார். இதே காலகட்டத்தில் இலங்கையிலும் தமிழ் நாடகதுறையில் படித்த மத்திய தரவர்க்கத்தினரின் பங்களிப்பு ஆரம்பமாகி விடுகிறது. 1913ல் கொழும்பில் லங்கா சுபோதசபை ஸ்தாபிக்கப்பட்டது. இதன் முக்கியஸ்தர், கலையரசு சொர்ணலிங்கமாவார். பம்மல் சம்பந்த முதலியார் நாடகங்களை இவர் மேடையேற்றினார். அவற்றில் பல ஷேக்ஸ்பியரின் நாடகங்களின் தழுவல்களாகும். 1914ல் யாழ்ப்பாணத்தில் சரஸ்வதி சபையும் 1920ல் மட்டக்களப்பில் சுகிர்த விலாச சபையும் ஆரம்பிக்கப்பட்டன. மட்டக்களப்புச் சுகிர்த விலாசசபை வித்துவான் சரவண முத்தன் விபுலானந்தரின் நெருங்கிய நண்பர். ஐரோப்பிய நாடகங்களும், சிறப்பாக ஷேக்ஸ்பியரின் நாடகங்களும் வட மொழி நாடகங்களும் தமிழுக்கு அறிமுகமான ஒரு பின்னணியில் மத்திய தரவர்க்கத்தவர்களும் கற்றோரும் இப்பணியில் ஈடுபட்டனர். குறிப்பாக இந்நாடகங்கள் தமிழ் நாட்டில் பம்மல் சம்பந்த முதலியார் போன்றோராலும்,ஈழத்தில் அவரது ஏகலைவச் சீடரான கலையரசு சொர்ணலிங்கம் போன்றோராலும் மேடை ஏற்றப்பட்ட காலத்திலே தான் விபுலாநந்தர் "மதங்க சூளாமணி" எழுதுகிறார். விபுலாநந்தர் தாம் வாழ்ந்த காலத்தில் நடைபெற்ற நாடகம் பற்றிய தமது நோக்கினை "மதங்க சூளாமணி"யின் முகவுரையிற் முன்மொழிந்துள்ளார். "கல்வியறிவில்லாதார் கண்ட கண்டவாறு நாடகங்களை அமைக்க முற்பட்டு நாடகத்துக்கே ஓர் இழிந்த பெயரையுண்டாக்கி விட்டனர்." என்று கூறும் அவர், அக்காலத்தில் நாடகம் எழுதிய, நாடகமாடிய பலரைப் போலி நாடகக் கவிகள் என்கிறார். போலி நாடகக் கவிகளால் நாட்டுக்கு விளைகின்ற கேடு போலிவைத்தியனால் நாட்டிற்கு விளைகின்ற கேட்டினைப் பார்க்கப் பல்லாயிரம் மடங்கு பெரிது என்று கூறுகின்ற அவர், நாடகத்தை வெறுத்தொதுக்காது அதனை ஆராய்ந்து நல்ல நாடகங்களை அமைப்பது கற்றோரின் கடமை என்கிறார். மேலும் "புதுநாடகமமைப்பதற்கு முற்படும் கவிஞருக்கு முறையறிந்தமைப்பதற்கு உதவியாகிய கருவி நூலும் இல்லை" என்கிறார். மோசமான நாடகங்களை தவிர்த்து, தரமான நாடகங்களை உருவாக வேண்டும் என்ற அவரது குறிக்கோளே "மதங்க சூளாமணி"யாக ஒளிர்ந்துள்ளது. "மதங்க சூளாமணி" அவரது ஆரம்ப காலப்படைப்புகளில் ஒன்று. அதனை வழுக்களைந்து புதுக்கியமைக்க வேண்டும் என்று அவரே நூலின் முகவுரையில் எழுதியிருக்கிறார்:

"வடமொழியாசிரியராகிய தனஞ்சயனாரும் ஆங்கில மகாகவி யாகிய செகசிற்பியாரும் செவ்விதினுரைத்த நுண்பொருண்முடிவுகளை நிரைபடவகுத்து முறைபெறக் கூறுவதற்கு முயன்றோனாயினும். ஆங்கம் முயற்சிக்கு வேண்டிய ஒய்வு ஏற்படாமையினால் இந்நூல் இவ்வுருவத்தில் முடிவுபெறநேரிட்டது. மேனாளில் ஒய்வு ஏற்படுமாயின் வழுக்களைந்து புதுக்கி, விரிவுறவெழுதி யுலகுக்களித்தல் என்கடனாகும். தசரூபத்தைத் தனிநூலாகத் தரல்வேண்டுமென்றும், செகசிற்பியாரது நாடகங்களை விரிவுற மொழிபெயர்த்து வெளியிடல் வேண்டுமென்றும், இந்நூல் இளமாணவரும் எளிதினுணர்ந்து கொள்ளத்தக்க நடையில் முடியவேண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மென்றும், நண்பர் பலர் கூறிய ஊக்கவுரைகள் என்னுள்ளத்திற் பதிந்து கிடக்கின்றன. காலம் வாய்ப்பின் இயன்றவை புரியப்பின்னில்லேன்."**

ஆக, விபுலாநந்தரின் கணிப்பின்படி "மதங்க சூளாமணி" ஒரு வெற்றிகரமான நூலாக அமையவில்லை.

ஷேக்ஸ்பியர் நாடகங்களைத் தமிழ்படுத்துகையில் தமிழ்மொழி மரபுக்கு இயைய வேற்றுபடுத்தி வெளிப்படுத்துகின்றார். இதனை பின்வரும் அவரது வார்த்தைகள் நிதர்ஷனப்படுத்துகின்றன: "கவிச்சுவை நிறைந்த பாகங்களை இயன்றவரை செய்யுளுருவ மாக மொழிபெயர்த்துத் தருவாம். வேண்டியவிடத்துச் செகசிற்பியார் வழங்கிய ஊர்ப் பெயர், மக்கட்பெயர், தெய்வப்பெயரென்றின்னவற்றைத் தமிழ்மொழிமரபுக்கியைய, வேற்றுமைப் படுத்தி வழங்குவாம்". Macbeth – பகபதி, Lear ஆகலவர்மன், Juliet – சுசிலை,Romeo – இரம்மியன் என்ற அடிப்படையில் ஆங்கில பெயர்களை, மேனாட்டு பாரம்பரியத்துக்குள் அதாவது அந்த சமூகங்களின் விழுமியங்களுக்குள் நிற்கின்ற பெயர்களை தமிழ்படுத்த முனைந்திருக்கின்றார். இது எத்தகைய வகையில் பொருந்துகின்றது என்பது வலுவிழந்த ஒரு நிலையையே தோற்றுவிக்கின்றது. ஏனெனில் அந்த நாடகத்தின் பாடு பொருள் அந்த சமூக பண்பாட்டுக்கு இயைய பின்னப்பட்டதாகும். பெயர்கள் தமிழ்படுத்தப்படுவதால் அது எத்தகைய தாக்கத்தையும் ஏற்படுத்தப்போவதில்லை. இதனால் ஒரு அந்நியத்தனமே உணர்வுக்குள் தொற்றுகின்றது.

உறுப்பியலில் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரையினால் பெறப்பட்ட அழிந்து போன நாடகத்தமிழ் நூல் சூத்திரங்கள் சிலவற்றை ஆதாரமாகக் கொண்டு தமிழ் நாடக இலக்கியத்தை முன்வைக்கின்றார். அடியார்க்கு நல்லார் உரையில் குறிக்கப்படுகின்ற தனஞ்ஜயர் கருத்தியல்களை உள்வாங்கி, தன்னுடைய ஆராய்ச்சிக்கு வலுசேர்க்க முற்படுகின்றார். தனஞ்ஜயர் பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு கவிஞர். அவரால் எழுதப்பட்ட "தசரூபகம்" என்ற நூல் முழுமையாக கூத்தியல் (நாடகம்) இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்நூல் நாடகத்தின் அமைப்பை முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் என்ற ஐந்து சந்திகளாக வகுத்துள்ளது. அடிகளார் இந்த அடிப்படையில் ஷேக்ஸ்பியரின் Lovers Labours Lost, King Lear, Romeo Juliet, Timon of Athens, The Tempest, Macbeth, Merchant of Venice, Julias Ceaser, Titus Andronics, As you like it, The Winters Tale Twelfth night போன்ற நாடகங்களை ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார். மேலும், நாடகம் தரும் வீரம்,அச்சம் இளிவரல், அற்புதம், இன்பம், அவலம், நகை, உருத்திரம், நடுவுநிலையாகிய ஒன்பது சுவைகளையும் தந்து அச்சுவைகளை இந்நாடகங்கள் எவ்வாறு தருகின்றன என்பதனையும் துலக்குகிறார். அங்கம், காட்சி என்பன ஷேக்ஸ்பியரின் நாடகங்களிலும் காணப்படுகின்றன என்ற எடுகோளின் அடிப்படையில் ஆய்வினை முன்மொழிந்துள்ளார். இந்த ஆய்வுக்கண்ணோட்டம் விமர்சனத்திற்குரியது.

இந்திய நாடக ஆற்றுகை மரபில் இருக்கின்ற "ரஸ" (மெய்ப்பாடு) கோட்பாட்டின் அடிப்படையிலும் ஷேக்ஸ்பியர் நாடகங்களை ஆராய்கின்றார். மேனாட்டு இலக்கியங்கள் நாடகங்களிற் சித்தரிக்கப்படும் உணர்ச்சிகளை ஒன்றுக் கொன்றாய் ஒப்பிடும் பொழுது ரசங்களை இனங்காணலாமே தவிர ரசங்களின் அடிப்படையில் அவற்றைப் பார்த்தல் முடியாது. ஷேக்ஸ்பியர் நாடகப்பதிப்புக்கள் திறஜெடி (Tragedy – துன்பியல்), கொமெடி (Comedy – இன்பியல்) வரலாறுகள் எனவரும் முறைமையிலேயே அவரது நாடகங்களை வகுக்கின்றன. ஷேக்ஸ்பியர் நாடகங்களில் மேலோங்கி நிற்கும் உணர்ச்சி நிலை கொண்டே கொமெடி, திறஜெடி பகுப்பு வருகிறது. திறஜெடி என்றும் நாடக வகை நீண்ட வரலாற்றைக் கொண்டது. மனிதனின் வாழ்க்கை, இருப்புப் பற்றிய "காத்திரமான கவிதை" எனும் கிரேக்க கால நிலையிலிருந்து அது ஷேக்ஸ்பியர் காலத்துக்கு வரும் பொழுது தனது அழுத்தத்திலே சில மாற்றங்களைக் காண்கின்றது. ஷேக்ஸ்பியரின் திறஜெடிகளினூடே காணப்படும் பொதுப்பண்பு யாது என்பது பற்றி ஷேக்ஸ்பியர் ஆராய்ச்சியாளரிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. பிறாட்லி (Bradley) என்பார். திறஜெடி என்பது நல்லவற்றை இழப்பதிலுள்ள சோகம் (Tragedy is the waste of good) என்பார். அது வெறுமனே துன்பியல் என்பதல்ல, அந்தத் துன்ப முடிவினுள் ஒரு நல்லதன் இழப்புக் காணப்பட வேண்டும். அதேபோன்று கொமெடி என்பதனையும் வெறுமனே இன்பியல் என்றோ அன்றேல் விபுலாநந்தர் கூறுவது போன்று சில ரசங்களின் அடிப்படையிலோ பார்த்துவிடக் கூடாது. இவ்வகை நாடகங்களில் சமூகத்தின் இலட்சிய எடுகோள்களும் நடைமுறைகளும் முரணுறக் காட்டப்படுகின்றன. சிரிப்பிலும் பார்க்கச் சிரிப்புக்கிடமாக்கப்படுவது முக்கியம். இதற்கு ஒரு எடுகோள் அவசியம். இயற்கை விதிகள் அங்கு தலைகீழாகக் காட்டப்படும் (பார்க்க,ஈ.த.சு.; 2010: 92). கொமெடி, திறஜெடி பற்றிய அடிகளாரின் கருத்துக்கள், தமிழ் நாடகங்கள் பற்றிய அவர் கருத்துக்கள், இந்திய நாடக மரபின் இலக்கணம் கொண்டு ஐரோப்பிய நாடகங்களை ஆராய முயன்றமை முதலியன ஆராய்விற்குரியன.

**"தமிழ் நாடகம் எழுதுவது நடிப்பதை விடத் தமிழ் நாடக ஆராய்ச்சியே அவரது பிரதான நோக்குப் போலும். இன்று பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் ஒரு பாடமாகப் பயிற்றுவிக்கப்படுகிறது. ஐரோப்பிய நாடகமரபு, ஆசிய நாடக மரபு பற்றி மாணாக்கர் பயில்கின்றனர். இந்நிலையில் இற்றைக்கு 70 வருடங்களுக்கு முன்னரே இது பற்றி சிந்தித்த விபுலாநந்தர் தூர நோக்குடைய மேதையாகக் காட்சியளிப்ப துடன், அவர் காலத்தில் நாடகத்துறையில் ஈடுபட்டவர்களிட மிருந்து நாடக ஆராய்ச்சியாளர் என்ற வகையில் வேறுபட்டும் காணப்படுகிறார்"** என்று பேராசிரியர் சி.மௌனகுரு (1993) குறிப்பிடுகின்றார்.

தமிழில் நாடகம் உயர்வடைய வேண்டும் என்ற உந்தலினால் விபுலாநந்தர் சேக்ஸ்பியரை சரியானபடி அறிமுகம் செய்வதுடன் வடமொழி நாடகமரபையும் அறிமுகம் செய்து அதற்கொப்ப தமிழ் நாடகமரபையும் ஆராய்கிறார். ஒருவகையில் தமிழர்மத்தியில் நாடகமரபு ஒன்றிருந்தது என்பதை – அதன் தனித்துவத்தைக் காட்டுவதும் அவர் நோக்கமாக இருந்திருக்கலாம். ஆனால் அத்தனித்துவம் வெறும் தனித்துவமாயில்லாது உலகின் வளர்ச்சியினை உள்வாங்கி வளரும் தனித்துவமாக இருக்கவேண்டும் என்பதே அவர் அவா போலும். தமிழ்த் தனித்துவம் – உலகளாவிய சிந்தனை என்ற இரு முரண்களையும் இணைத்து ஒன்றிலிருந்து ஒன்று பெற்று, சமரசம் கண்டு வளர வேண்டும் என்ற ஆத்மார்த்த எண்ணமும் இங்கு பளிச்சிடுகிறது.

தொகுத்து நோக்கும் போது கீழைத்தேய சிந்தனை மரபில் இயல், இசை. நாடகம் என்ற முத்தமிழின் ஆய்வுகள், சிந்தனைகள் என்பவற்றில் மிகவும் ஆளுமை பொருந்தியவராக சுவாமி விபுலாநந்தர் திகழ்ந்துள்ளார். முத்தமிழை மேலைத்தேய ஆக்கங்களோடு ஒப்பாய்வு செய்து, புதிய திசைகளை திறந்திட முனைந்திருக்கிறார். இலங்கையிலும், இந்தியாவிலும் தமிழியல் சிந்தனைக்கு புதிய பரிமாணங்களோடு தன்னை அர்ப்பணித்த இயக்கமாக அவர் இருந்திருக்கிறார். பேராசிரியர்விபுலாநந்தர் அவர்களது கருத்துக்கள் பல மேலைத்தேய சிந்தனையாளர்களது கருத்துக்களுடன் இசைவாக உள்ளதை அவதானிக்க முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிக்கடன்

கோமயம் கரைத்த மஞ்சள் நீரில் காலைக் கழுவி, தலைக்கு மேலாய் பட்டும் படாமலும் நீரை விசிறித் தெளித்து, வாயிலின் குறுக்கே கிடத்தியபடி போடப் பட்டிருந்த உலக்கையைக் கடந்து கொண்டு கொள்ளிவைத்த மகனைத் தொடர்ந்து ஒருவர்பின் ஒருவராக உறவுக்காரர் களும் வீட்டு வளவினுள் நுழைந்தனர்.

கால்களுக்குள் தலைபுதைத்துக் கிடந்த இராமன் தலையை அண்ணார்த்திப் பார்த்தான். ஈனக்குரலால் மெல்ல அழுதான். மீண்டும் தலையை கால்களுக்குள் புதைத்து முனகலுடன் ஓய்ந்தான்.

கொள்ளிவைத்த மகனைக் கண்டதும் ஒரு சில பெண்கள் சிணுங்கியவாறு அவனைக் கட்டியணைத்துக் கொண்டனர். அவர்களை மெதுவாக விலக்கிக்கொண்டு நழுவியபடி வீட்டின் பின்னே அமைந்த குளியலறை நோக்கிச் சென்றான் அவன்.


அயல் வீட்டுப் பெண்கள் சிலர் சேர்ந்து நீரூற்றி வீட்டைக் கழுவிக்கொண்டிருந்தனர். சில பெண்கள் வீட்டின் வெளிப்புறத்தில் இருந்தபடி அதனை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். அவர்கள் முகத்தில் கவலை தோய்ந்த ஒப்பனை தெரிந்தது.

வீட்டு முற்றத்தில் அங்குமிங்கும் ஒழுங்கற்றுப் பரப்பப்பட்டுக்கிடந்த பிளாஸ்டிக் கதிரைகளில் களைத்துப்போன சலிப்பு மிஞ்ச உறவுக்காரர்களும் வேறு சில புதிய முகங்களும் அமர்ந்திருந்தனர். அவர்கள் தம்முள் நோக்கம் எதுவுமின்றி பேசிக்கொண்டிருந்தனர்.

"இந்தப் பகுதியிலை இதைப்போலை ஒரு செத்தவீட்டை இது வரைக்கும் நாங்கள் பார்க்கயில்லை. அந்தமாதிரித்தான் செய்திட்டாங்கள். நினைச்சுத்தான் செய்திருக்கிறாங்கள் பொடியள். பிள்ளையளைவிட பேரப்பிள்ளையள் மனிசனிலை அளவுக்கு மிஞ்சின பாசம். யாருக்கும் வெளிநாட்டுப் பேரப்பிள்ளையள் உப்பிடி அழுது கலங்குங்களே?.... மக்கள் மருமக்கள் மட்டுமில்லை பேரப்பிள்ளையளும்... மனிசன் குடுத்து வைச்சவர்தான்"

"அந்தரச் செல்லையன்" குரலை உயர்த்தி புகழ்பாடினான். பேச்சுக்கிடையே செத்த சிவபுண்ணியத் தாரின் வெளிநாட்டிலிருந்து வந்திருந்த இரண்டாவது மகனை ஓரக்கண்ணால் பார்த்து அவன் தன் பேச்சை கவனித்துக் கொண்டிருக்கிறானா என்பதையும் உறுதிப் படுத்திக் கொண்டான்.

செத்தவீட்டுச் செலவுக்கென கேட்கிற பணத்தை



இ.இராஜேஸ்கண்ணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையமகன்தான் அள்ளி விசுறுகிறான் என்பதை அந்தரச் செல்லையன் அறியாமலில்லை.

செல்லையா அந்தரச் செல்லையனானதே செத்தவீட்டு அலுவல்களால் தான். ஊரில் யாருடைய செத்தவீட்டிலும் செல்லையன் அலுவல்காரனாக வந்துவிடுவான். செத்தவீட்டன்று கிரியைச் சாமான்கள் வாங்குவது தொட்டு அந்தியேட்டி வரையுள்ள முக்கியமான வேலைகளெல்லாம் அவனது பிரசன்னமின்றி நடக்காது. செத்தவீடு, காடாற்றுதல், எட்டுச் செலவு, அந்தியேட்டி எல்லாவற்றுக்குமான கிரியைகளை தானே செய்யுமளவுக்கு அனுபவஸ்தன். எல்லாம் அவன் விதித்தபடிதான் நடக்கும். செத்தவீட்டில் பிணத்தைத் தூக்கியபின் இடஞ்சுழியாக சுற்றுவதா? வலஞ்சுழியாக சுற்றுவதா? என்ற முடியாத விவாதம் தொடக்கம் பல விவாதங்களுக்கு அறுதியான பதில் அவனுடையதே. செத்தவீட்டில் குறிக்கப்பட்ட நேரத்தில் பிணத்தை தூக்கிவிடுவதில் தான் தன் அலுவலின் பெருமை தங்கியுள்ளது என்பதில் விடாப் பிடியாக நிற்பான். அதற்கான அவனது அவசரத்துக்கு கிரியை செய்யவரும் "ஐயா"கூட கட்டுப்பட்டே ஆகவேண்டும். இதுவே செல்லையன் அவசரச் செல்லையனான தோம்பு.

"உண்மையிலை பெரியவன் பெரியவன்தான். புண்ணியத்தாரைக் கிடத்தின பேழைப்பெட்டியின்ரை பவிசென்ன... ஒரு தம்பி நினைச்சுப் பார்க்கேலாது. பவுணாலை செய்த பெட்டிமாதிரியெல்லே கிடந்துது. புண்ணியத்தாருக்கு கட்டின பட்டுவேட்டி மட்டும் பத்தாயிரம் பெறும். கிழவன் தன்ரை வாழ்நாளிலை அப்பிடி உடுத்திருக்குமோ தெரியாது. ஊரவங்கள் எல்லாரையும் மூக்கிலை விரலை வைக்கச் செய்திட்டாங்கள் பொடியள்."

அவசரச் செல்லையன் பொதுப்படையாகச் சொன்னபடியிருந்தான். அவன் சொல்லச் சொல்ல புண்ணியத்தாரின் இளையவனின் முகத்தில் ஒருவித பெருமிதம் வெளிப்பட்டுத் தொங்கிநின்றது.

"அண்ணை... செல்லையா அண்ணை... சுடலையிலை எரிக்கிறாக்களை கவனிச்சனீங்களே?... எல்லாம் சரியாச் சொல்லியிருக்கிறியள்தானே... இந்தாங்கோ அண்ணை இதை வையுங்கோ பிறகு போகேக்கை அவையளை வடிவாக் கவனியுங்கோ.... பிறகு குறை சொல்லக்கூடாது... என்னண்ணை"...

புண்ணியத்தாரின் இளையமகன் செல்லையனின் கையை இழுத்து பச்சைநிறத் தாள்களைத் திணித்தான். பவ்வியமாக வாங்கி சட்டைப் பையில் பத்திரப்படுத்திக்கொண்டான். சுற்றியிருந்தவர்கள் தான் பணத்தை விசுறுவதை கவனிக்கிறார்களா என்று பார்த்துக்கொண்டான் இளையவன்.

பணத்தை வாங்கி சட்டைப்பையில் பவ்வியமாய் திணிக்கும்போதே குழைந்துநின்றான் செல்லையன். வெற்றிலைத் தட்டத்தை எடுத்துக்கொண்டு மீண்டும் வந்திருந்தவர்களின் மத்தியில் அமர்ந்து கொண்டான். பேச்சுத்துணைக்கு தனக்கு வாய்த்த தோழன் நடராசனை இழுத்துக் கொண்டான். நடராசன் செல்லையனின் வால். சபை சந்தியில் நடராசனை விட்டால் செல்லையன்ரை கதைக்கு ஆமாப்போட வேறு யார் இருக்கினம்? இருவரும் வெற்றிலைசாறு நுதம்ப பேசிக் கொண்டார்கள்.

அவர்கள் அமரத் தெரிவுசெய்த இடத்துக்கருகே படுத்துக்கிடந்த இராமன் மீண்டும் மெதுவாகத் தலையை நிமிர்த்திப் பார்த்தான். அவனது கண்களால் வடிந்திருந்த நீர் கருங்கோடாய் காய்ந்திருந்தது. சற்று நலிந்திருந்தான். மேலும் பதற்றமானான்.

"நட்ராயா... இஞ்சை கேளன்... தம்பியவை தங்கடை பவரைக் காட்டிப் போட்டாங்கள். சும்மா எல்லாரும் பிடிக்கிற மாதிரி பறை மேளத்தைப் பிடிக்கேல்லை. பாண்ட்கோஷ்டி!.. சும்மா விளாசித்தள்ளிப் போட்டெல்லே போறாங்கள். சந்தியிலை அவங்கள் வைச்ச சமாவைப் பற்றிக் கதைக்காத ஆக்களில்லை யடா. சீனவெடி பதினையாயிரத்துக்கெல்லே வாங்கினது. பொடியள் தரவளியளுக்கு கொண்டாட்டந்தான். கொழுத்தித் தள்ளினாங்கள் பொடியள். சுடலையிலை உடைச்ச சோடாச் சுமை கண்டனி தானே.... கேஸ் கேசா இறக்கினாங்கள். வந்தவை மிஞ்ச மிஞ்சக் குடிச்சினம். திருவிழா மாதிரித்தான். புண்ணியத் தாற்றை பொடியள் மனமாத்தான் செய்யிறாங்கள்".....

சட்டைப்பையை தட்டி வாங்கின காசு பத்திரமாக இருப்பதை உறுதிப்படுத்திக் கொண்டான் செல்லையன்.

"கேளன்.. நடா... மூண்டுநாளா பிரேதம் வீட்டிலை கிடந்துது. மூத்தவன் சுவிஸ். இளையவன் லண்டன். ரண்டுபேரும் உடனை வெளிக்கிட்டு வந்திட்டாங்கள். பிள்ளையளுக்கும் அங்கை பள்ளிக்கூடங்கள் லீவெண்டதாலை எல்லாரும் வந்திட்டுதுகள். பேரப்பிள்ளையளை கடைசிவரைக்கும் புண்ணியத்தார் நேரிலை காணப் புண்ணியம் செய்யேல்லை. எண்டாலும் அதுகள் எல்லாம் பிரேதம் எண்டுகூட பாக்காமல் நேற்று முழுக்க பேரனோடை செல்பிப் படங்கள் எடுத்துக் கொண்டிருந்ததுகள். பேரனிலை சரியான பாசம். பாவம் புண்ணியத் தாருக்குத்தான் குடுப்பினை இல்லாமல் போச்சுது."

இராமன் மீண்டும் அழத்தொடங்கினான். ஈனக்குரல் நீள ஒலித்தது. அவனால் புண்ணியத்தாரின் இழப்பைத் தாங்கிக்கொள்ள முடியவில்லைப் போல...

புண்ணியத்தாரின் மூத்தவன் குளித்து முடித்து வந்துசேர்ந்தான்.

"ராமா அங்கை போ. பின்னாலை போய் படு. ஆக்களுக்கை என்ன படுக்கை"....

இராமன் மெல்ல எழுந்து வீட்டின் பின்புறம் போனான். அவன் வெகுவாகத் தளர்ந்திருந்தான். இந்த நான்கு நாட்களும் சரிவரச் சாப்பிட்டிருக்கமாட்டான் போல... நடையில் சோர்வு தெரிந்தது.

தங்கள் கைத்தொலைபேசியினுள் புதைந்திருந்த புண்ணியத்தாரின் பேரப்பிள்ளைகள் நால்வரும் இராமனைக் கண்டதும் தங்கள் மகிழ்வை வெளிப் படுத்த முனைந்து அவனை அருகில் அழைத்தனர். அவனோ அவர்களை இலட்சியம் செய்யாது நடந்தான்.

"செல்லையா அண்ணை என்னமாதிரி... நாளைக்கு ஒத்தைவிழ அஞ்சாம் நாள். காடாத்த வேணும். எல்லாத்தையும் பாத்துச் செய்யுங்கோ. போகேக்கை காசைத்தாறன். மறக்காமல் கேளுங்கோ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் நிக்கிறியள் எண்டுதான் நம்பியிருக்கிறம். எங்களாலை என்னத்தைச் செய்யேலும்... பாத்துச் செய்யுங்கோ காசைப் பற்றி யோசிக்க வேண்டாம். கூச்சப்படாமல் கேளுங்கோ"...

புண்ணியத்தாரின் மூத்தமகன் செல்லையனுக்கு தலைப்பாக்கட்டினான்.

"தம்பி... ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ... எல்லாம் சிறப்பா நடக்கும். நட்ராயனையும் கொஞ்சம் கவனிச்சு விடுங்கோ... அவன்தான் எனக்குத்துணை. ரண்டுபேரும் சேர்ந்து எல்லாஞ் செய்வம். அந்தியேட்டி வரைக்கும் எல்லாம் சரிவர நடக்கும் தம்பி... எப்பிடியும் உங்கடை மரியாதை முக்கியம். தகப்பனின்ரை சிலவுகளை பிள்ளையள் எப்பிடிப் பாத்தாங்கள் எண்டு எல்லாரும் பேசுறமாதிரிச் செய்துவிடுவம். சரிதானே... என்ன செய்யவேணுமெண்டு மட்டும் சொல்லுங்கோ"....

அவசரச் செல்லையன் கிடைத்த மயிர் இடைவெளியில் மாளிகை கட்ட முனைந்தான்.

"அண்ணை... நாளைக்கு காடாத்தை முடிச்சுக்கொண்டு சிலவுக்கு நல்ல ஆடு ஒண்டைப் பாருங்கோ... சபை முடிஞ்சாலும் இரவு வாறவைக்கு கறியிருக்க வேணும். வந்து சாப்பிட்டவை ஒரு வரியத்துக்கு மறக்கக்கூடாது. மற்ற அயிற்றங்களும் தேவைப்படும். எங்கடை சினேகிதங்கள் கொஞ்சம் வரும். ஊர்ப் பொடியளும் நல்லா உதவிசெய்தவங்கள். அவங்களும் சந்தோசப்பட வேணும். நண்டு, கணவாய் அயிற்றங்களும் தாராளமாயிருக்கவேணும். அந்தி யேட்டி வரைக்கும் எல்லாரும் நிக்கேலாது. நான் கொள்ளி வைச்சதாலை நிண்டு செய்வன். மற்றவை நிக்கிறது கஸ்டம். லீவு முடிஞ்சிடும். பிள்ளையளுக்கும் பள்ளிக்கூடங்கள். அதாலை எட்டுச் சிலவை நல்லாச் செய்யவேணும். எல்லாம் உங்கள் ரண்டுபேரின்ரை கையிலையும்தான்... பார்த்துச் செய்யுங்கோ எல்லாம் கவனிக்கலாம்... எங்கடை செல்லை யாண்ணைக்கு இல்லாததே"...

செல்லையன் புழுகத்தின் உச்சிக்குச் சென்றுவிட்டான். புளகாங்கிதம் அவனுக்கு.

இராமன் பின்னேயிருந்து முனகி அழும் சத்தம் மீண்டும் கேட்கின்றது. புண்ணியத்தார் அந்த பலாமரத்தின் கீழிருந்து பொச்சு அடித்துத் தும்பெடுக்கும் இடத்தைப் பார்த்தபடி அவன் குரலெடுத்து அழுகின்றான். குழப்பத்தோடு அங்குமிங்கும் நடந்தலைகின்றான்.

"தங்கச்சி... ராமன் அழுறான் என்னெண்டு பார். சாப்பாடும் அப்பிடியும் இப்பிடியுந்தானே... நாலுநாளா அவனுந் தன்ரைபாடு. நாங்களும் கவனிக்கயில்லை.... ஒருக்கா பாரணை பிள்ளை"... மூத்தவன் யாருக்கோ சொல்கிறான்.

இராமனின் அழுகை ஓய்ந்தபாடில்லை.

புண்ணியத்தார் தும்படிக்கும் இடத்தைச் சுற்றிச் சுற்றி நடக்கின்றான். அந்த இடத்தில் படுத்து உழக்குகின்றான். புரளுகின்றான். உச்ச ஸ்தாயியில் அழுகின்றான்.

இளையவனின் மகள் தான் சாப்பிடுவதற்காக வைத்திருந்த கேக் துண்டுகளில் ஒன்றை தட்டில்வைத்து இராமனுக்குக் கொடுத்தாள். அவன் அவளது உபசரிப்பை உதாசீனப்படுத்தினான். பிடிவாதமாகச் சாப்பிடாதிருந்தான்.

புண்ணியத்தார் அவனை வளர்த்த விதம் அப்படி. புண்ணியத்தாரின் வாழ்வோடு இராமன் இணைந்திருந்தான்.

"பிள்ளையள்... அவன் உதெல்லாம் சாப்பிடமாட்டான். உங்கடை பேரனார் வளர்த்த வளர்ப்பு அது. அவன் அயல் வீட்டிலைகூடச் சாப்பிடான். மனிசன் இருக்குமட்டும் தன்ரை சொந்தப் பிள்ளை மாதிரியெல்லே வளர்த்தவர். அவனும் அப்பிடித்தான். அவற்ரை சொல்லுக்கு கட்டுப்பட்டு நிற்பான்" நான்தான் மெதுவாக வாய் திறந்தேன்.

புண்ணியத்தார் எழுதுவினைஞர் கடமையிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் வீட்டிலை தனிச்சுப் போனார். அவருக்கு இரண்டு ஆண்பிள்ளைகள்தானே. அவர்களும் வெளிநாட்டிலை குடும்பங்களோடை நிரந்தரமாக வாழ்க்கையை அமைத்துக்கொண்டார் கள். தந்தையாருக்கு மாதம் ஒருமுறை கைச்செலவுக்கு காசனுப்பிவைப்பார்கள். ஓய்வுபெற்ற கையோடு தங்களுடன் வந்துவிடுமாறு கேட்டிருந்தும் புண்ணியத்தார் அடியோடு மறுத்துவிட்டார். தன்னுடைய ஓய்வூதியப் பணத்திலேயே தன்வாழ்வைப் பார்த்துக் கொண்டார். பிள்ளைகள் அனுப்பிவைக்கும் பணத்தை சேமித்து ஊரிலுள்ள கோயில், சனசமூக நிலையங் களுக்கு அவசியமான செலவுகளுக்கு கொடுத்து உதவு வார். யாராவது வந்து திரும்புகின்ற தருணங்களில் பிள்ளைகளுக்கு உள்ளூர் உணவுப்பொருள்களை வாங்கி பாசத்தோடு சேர்த்துப் பொதிசெய்து அனுப்பிவைப்பார்.

தனித்துப்போன அவரின் ஓய்வு வாழ்வில் அவருக்குத் துணை இராமன். அவனுக்குத் துணை அவர்.

புண்ணியத்தார் இராமனை கவனித்தவிதம் ஒரு பிள்ளையை வளர்த்தது போலத்தான். வாரத்தில் இரண்டு நாட்கள் குளிப்பாட்டுவார். துடைத்து பௌடர் போட்டுவிடுவார். மடியில் படுக்கவைத்து, மயிர்வகிர்ந்து உண்ணிபிய்த்து, சிரட்டையில் தணல் எடுத்துப் போட்டுச் சுடுவார். சனிக்கிழமைதோறும் எலும்பில்லாத தனித்தசையான இறைச்சிவாங்கி காய்ச்சி வைப்பார். மரத்தினால் சிறியதொரு இழுவை வண்டி செய்து இராமனின் கழுத்தில் பொருத்தி தெருவில் இழுத்தோடவைத்து சிறுவர்களுக்கு விளையாட்டுக் காண்பிப்பார். இடையிடையே வைத்தியசாலைக்குக் கொண்டுசென்று ஊசிபோட்டு வருவார்.

இப்போது இராமன் ஓர் ஓரமாகப் படுத்துக் கிடக்கிறான். அவனிடத்தில் இருந்த பதற்றம் குறைந்திருந்தது. கண்களில் குடிகொண்டிருந்த ஏக்கம் இன்னும் தெளிவாய்த் தெரிந்தது. அவனுக்கு முன்னே வைக்கப்பட்டிருந்த சாப்பாடு அப்படியே கிடந்தது.

புண்ணியத்தாரின் பேரப்பிள்ளைகள் ஏதோவொரு வேற்றுமொழியைப் பேசிக் குரலெழுப்பிச் சிரித்தபடியிருந்தனர். வந்திருந்த புதிய முகங்கள் அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தனர். அவர்கள் வாழ்ந்துவரும் நாட்டில் பாடசாலை விடுமுறை என்பதால் பேரனாரின் உடலையேனும் காணும் பாக்கியம் அவர்களுக்குக் கிடைத்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயல்வீட்டுக்காரன் என்பதால் புண்ணியத்தாரின் பிள்ளைகள் என்னுடன் நல்ல வாரப்பாடு. புண்ணியத்தாருடன் தொலைபேசியில் பேசும் போது என்னுடனும் இரண்டொரு தடவைகள் பேசியிருந்தனர். என்னில் ஒருவித மதிப்பும் வைத்திருந் தனர். தந்தையாரின் மனசை மாற்றி தங்களுடன் அனுப்பிவைக்க உதவுமாறும் கேட்டிருந்தனர். நானும் புண்ணியத்தாரோடு பேசிப்பார்த்திருந்தேன். அந்தத் தருணங்களில் பிள்ளைகளின் பிரிவினால் தான்படும் வேதனையை வெளிப்படுத்துவார். ஆனால், சொந்த மண்ணில் வாழ்வதிலுள்ள சுகத்தை விட்டுவிட முடியாது என்பார்.

புண்ணியத்தாரின் இளையவன் மாமா என விழித்தபடி என்னருகே அமர்ந்தான். நான் அவனோடு புண்ணியத்தாரின் நிவைுகளை மீட்டேன்.

புண்ணியத்தார் தனது கிளாக்கர் சம்பளத்தில் அவர்களை படிக்கவைத்தது. கல்வீடு கட்டியது. கடன் பட்டுத் தோட்டக்காணி ஒன்றை வாங்கி விவசாயம் செய்தது. சிக்கனமாய் வாழ்ந்து சேமித்த பணத்தை வைத்து உள்நாட்டில் பிரச்சினைகள் வலுத்து விட்ட காலத்தில் பிள்ளைகளைப் பாதுகாக்க வெளிநாடுகளுக்கு அனுப்பிவைத்தது. இப்படிப் பேச்சுக்கள் தொடர்ந்தன. அவனது கண்களில் வியப்பு விரவிக்கிடந்தது.

இப்போதும் இராமன் பதற்றத்துடனேயே இருக்கிறான். முன்னரிலும் சோர்ந்திருந்தான்.

“ராமன் புண்ணியத்தாருக்கு எவ்வளவு துணையா இருந்தவன். அவற்றை காலையே சுத்திக்கொண்டிருப்பான். புண்ணியத்தார் வீட்டிலை தும்படித்து சின்னளவிலை தும்புத்தடி செய்து வியாபாரம் செய்யிறவர். ஊர்க்கடையளிலை குடுத்து காசுவாங்கித் தன்ரை பென்சன் காசைச் சிலவழிக்காமல் சீவியம் நடத்தினவர் மனிசன். தனியாட்கள் குடுக்கிற ஓடருக்கு விளக்குமாறு, தும்புத்தடி செய்து கொடுக்கிறவர். நாங்கள்கூட அவரிட்டை ஓடர் குடுத்துத்தான் வாங்கிறனாங்கள். அவர் அந்த வேலையளைச் செய்யிற நேரங்களிலை இராமன்தான் அவருக்கு உதவி. அவர் தும்படித்துக்கொண்டிருக்க தண்ணியோடுற பத்தலிலை ஊறப் போடுற பொச்சு மட்டையளை ராமன்தான் வாயாலை கவ்வி எடுத்துவந்து கொடுப்பான். மதியச் சாப்பாட்டுக்கு ஒருமணி நேரத்துக்கு முன்னம் புண்ணியத்தார் வாடிக்கையாக செட்டியண்ணனிட்டை ஒண்டரைப் போத்தல் அடிப்பார். ரேஸ்ருக்காகக் கொண்டுபோற ரண்டு மீன்பொரியல் துண்டில் ஒன்றை ராமனுக்கு கொடுப்பார். திரும்பிவந்து சாப்பிட்ட பிறகு ஒரு குட்டித்தூக்கம் போடுவார். அவற்றை காலடியிலையே ராமனும் படுத்துறங்குவான். ஒருக்கால் புண்ணியத்தார் அப்பிடித்தான் செட்டியண்ணனிட்டை போட்டு வந்து வெளிவிறாந்தையிலை படுத்திருக்கிறார். அவர் உறங்கிப்போனார். தலைமாட்டிலை ஒரு வலுத்த விசப்பாம்பு. ராமன் இல்லையெண்டால் மனிசன் அண்டைக்கே முடிஞ்சிருப்பார். ராமன் எகிறிப் பாய்ஞ்சு தலையிலை ஒரு கால் வாலிலை ஒருகால் பிடிச்சபடி சத்தம்போடத்தான் செட்டியின்ரை சாமான் தந்த கீறிலை கிடந்த மனிசன் எழும்பி



அயலிலை என்னையும் கூப்பிட்டார். நாங்கள் பாம்பை அடிக்கும் வரைக்கும் ராமன் தன்ரை காலை எடுக்கேல்லை யெண்டால் பாரன். பாம்பை அடிச்சபிறகு ராமன் செய்ததை நினைச்சால் இப்பவும் எனக்கு கண்ணாலை தண்ணிவரும். பாம்பை அடிச்சதுதான் தாமதம் ஓடிவந்து புண்ணியத்தாரின்ரை காலை, கையை, உடம்பை எல்லாம் சந்தோசத்தோடை நக்கிக் கொண்டிருந்தான். அப்பதான் பார்த்தன் ராமன்ரை கண்ணிலையிருந்து கண்ணீர் வந்து கிடந்ததை. அண்டைக்கு புண்ணியத்தாருக்கு உயிர்குடுத்தவன் ராமன்தான்.”

நான் இதை புண்ணியத்தாரின் இளைய மகனுக்குச் சொல்லி முடிக்கும்போது அவனது கண் களில் மெல்லியதாய் ஒரு நீர்த்திசு படர்ந்தது. முகத்தில் ஏதோவொரு கழிவிரக்கத்தின் படர்வு தெரிந்தது.

அவன் மெல்ல எழுந்தான். இராமன் இப்போதும் புண்ணியத்தார் தும்படிக்கும் இடத்திலேயே படுத்திருந்தான். அவன் படுத்திருந்த இடம் நோக்கிச் சென்றான். இராமனுக்கு அருகில் முழங்கால் குத்தி அமர்ந்தான். இராமனது பிடரி மயிரைத் தடவிக்கொடுத்தான். தலையிலிருந்து முதுகுத்தண்டு வழியாக இராமனது உடல் நீளத்துக்கும் தடவிக்கொடுத்தான். இராமனின் கண்களிலிருந்து வழிந்திருந்த நீர் கன்ன மயிரைக் கறுப்பாக்கியிருந்தது.

அவன் துணுக்குற்றான். இராமனது உடலை அழுத்தித் தொட்டுப்பார்க்கின்றான். இராமனது உடல் குளிர்ந்துபோய்க் கிடந்தது. இராமனைத் தூக்கி தன் மடியில் படுக்கவைக்கின்றான். இராமன் மூச்சின்றிக் கிடந்தான்.

பந்தலில் போடப்பட்டிருந்த கதிரைகளில் அமர்ந்திருந்த அனைவரது பார்வையும் புண்ணியத்தாரின் இளையவன்மீது பதிந்தது.

இராமனை வாரி அணைத்தான்.

மெல்லியதாக அவனது மிடற்றில் எழுந்த விக்கல் படிப்படியாய் அழுகையாய் பெருகியது.

இருந்தவர்களெல்லாம் இளையவனையும் இராமனையும் சூழ்ந்துகொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை என்னும் தூசி

தூசி கிளம்பும் அச்சிறிய பட்டினத்தில்
நீண்ட மாலைப் பொழுதுகளில்
புராதன புவனேஸ்வரி கோயிற் படியில் விழும்
மாமர, பலா மர நிழல்கள்
சாணத்தின் மணத்தையும் விளாம்பழ வாசனையையும்
ஈரலிப்பான காற்று ஏந்தி வருகையில்
நான் கனவு காணத் தொடங்கிய காலத்தைத்
திரும்பிப் பார்க்கின்றேன்

என் தேவை என்ன என்பது
தெளிவாகத் தெரிந்தது
என்னைச் சூழ நான் கண்ட அனைத்துக்கும் மாறாக
ஆசையின் வரையறையை
அமைதியாக மீறும் முனைப்பின்
வலியை உணர்ந்தேன்

அவ்வுந்தல்
என்னைப் போலவே யதார்த்தமானது
எதிரொலி அற்ற போதும்
அனுகி முனு முனுக்கும்
ஆதரவற்ற சுடர் அது
வாணாள் முழுதும் என்னைப் போட்டுலுப்பப் போகும்
அமைதியான பைத்தியம் அது

அந்நீண்ட மாலைப்பொழுதுகளின்
தூங்கி வழியும் கையொழுங்கைகளில்
காற்று கனக்க, தொண்டை வறள
எங்கு போவதென அறியாது நான் அலைந்த போதும்
என் அறிவின் நுனி கூராகவே இருந்தது

ஆண்டாண்டு காலமாக
வெற்று மனிதக் கூட்டங்களையும்
வெறித்த பார்வைகளையும் சந்தித்தபடி
தெருக்களில் அலைந்து கொண்டு
அகத்தையும் புறத்தையும் மறுதலிக்க நிர்ப்பந்திக்கும்
சட்டத்திற்கு அமைந்தவனாய்
ஏதும் செய்யாது
காலத்தை வீணாக்கி விட்டேன்

ஆயினும்
சிலவேளைகளில்
கோடைக் காற்றில்
ஆசைக் கூத்தாய்
புழுதி சுழன்றெழுகின்றது.



ஹைதராபாத்தின்
ஆங்கிலம், மற்றும்
அந்நியமொழிகள்
பல்கலைக்கழகத்தில்
இணைப் பேராசிரியராக
விளங்கும் திலிப்,
தாய்மொழியாகிய
ஒடியாவில் இரு
கவிதைத் தொகுதிகளும்
ஆங்கிலத்தில் இரு
தொகுதிகளும்
வெளியிட்டுள்ளார்.

# கனவுகள்

ஏற்றுக் கொள்ள மறுக்கும் ஆயாசத்துக்கும்
குறையாத ஆசைக்கும் இடையே
ஏக்கம் நிறைந்த கண்களோடு
தூக்கம் விளையாடுகிறது
இரவுகள் கழிகின்றன
ஒருகால் மூடியும் ஒருகால் திறந்தும்
இல்லாததையும் நடக்க முடியாததையும்
ஏறிட்டுப் பார்த்த படி
இருக்கின்றன கண்கள்

கனவுகளுக்குக் கண்கள் வேண்டியதில்லை
காரணமும் தேவையில்லை
இந்த ஈர்ப்புக்கு அப்பால்
பிரதிபலிப்பின் எறிகைகள் அவை
நடக்க முடியாத காட்சிகளின்
சாசுவதமான ஒத்திகைகள்
அகக் கண்ணாடியின் ஆழத்தில்
உன் கண்களைக் காண
என் கண்கள் மூடுகின்றன
இங்கே புறத்தே நீ தென்படாத போதும்
அகக்காட்சியை அவாவும்
யாசகனாக நான்

ஆங்கில மூலம் : திலிப்நாயக்
தமிழில் : சோ.ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளை இழந்த விருட்சங்கள்

அன்று காலைப்பொழுது மிக ரம்மியமாக விடிந்தது. ஆகாயப் பட்சிகள் எந்தவித சலனமும் இன்றி தமது அன்றாட உணவுக்காக கூட்டத்தோடு பறந்து சென்றுகொண்டிருந்தன. ஒரு ஜீவன் மட்டும் தனியாக அழுதுகொண்டிருந்தது. தன் வாழ்வின் கடைசிப் பக்கங்கள் கரையான் அரித்துவிட்டதாய் தோன்றியது அவளுக்கு. இந்த உலகம் விசாலமானது. அதில் மனிதர்கள் தமக்குத் தேவையான அனைத்தையும் தேடிப் பெற்றுக்கொள்கிறார்கள். ஆனாலுமென்ன? ஒரு சில கனவுகள், கனவுகளாகவே இருந்து விடும் சூழ்நிலைகளும் வாய்த்துவிடுகின்றன. அன்புக்காக ஏங்கிய சில ஜீவன்கள் அந்த அன்பு கிடைக்காமையினால் பைத்தியமாகவும் ஆகிவிடுகின்றனர். சிலரோ எதையும் தாங்கிக்கொண்டு போலி சிரிப்பை முகமூடி யாக இட்டு உலாவித் திரிகின்றார்கள். அவர்களது மனதுக்குள் ஆயிரமாயிரம் கவலை எனும் புழுக்கள் நெளிந்துகொண்டே இருந்தாலும் காலம் தந்த காயத்தை நெஞ்சில் சுமந்தபடி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆம்!


ராசம்மாவும் அப்படித்தான்!

அவள் மனதளவில் செத்துவிட்டிருந்தாள். தனது கடைசிக்காலம் இப்படி அநாதரவான நிலைமையில் கழியும் என்று அவள் கனவிலும் நினைத்திருக்க மாட்டாள். தாய் தந்தையரிடம் தானொரு இராஜ குமாரியாக இருந்தது போல, அல்லது கணவன் வீட்டில் செல்வச் சீமாட்டியாக வாழ்ந்தது போல இறுதிக் காலத்திலும் இருக்க வேண்டும் என்று எண்ணியிருப்பாள். ஆனால் அவளது மகன் அவள் ஆசையில் இப்படி மண்ணள்ளிப் போட்ட விதமாய் அவளது வாழ்வை திசைமாற்றிவிட்டான்.

000

ராசம்மா செழிப்பாக வளர்ந்தவள். அவளது அப்பா நிறைய தோட்டங்கள் வைத்திருந்தார். அதன் மூலம் கிடைத்த வருமானம் அவர்களது வாழ்க்கைக்கு போதுமானதாக இருந்தது. அவள் எது ஆசைப்பட்டாலும் அவளுக்கு மறுக்கப்பட்டதில்லை.

பருவத்தின் பரவசங்களில் ராசம்மாவும் திளைத் திருந்தாள். அவளது அந்தகார இரவுகளின் நினைவுகளில் சின்னராசா வந்துபோனான். அவன் மீது அவள் பேரன்பு கொண்டிருந்தாள். அவனும் அப்படித் தான். ஆனால் வறுமைப்பட்டவன் என்பதால் தைரிய மாக ராசம்மாவைப்



தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் கேட்குமளவுக்கு அவனுக்கு துணிச்சல் இருக்கவில்லை. வீரமும் மானமும் ஒரு பெண்ணை வாழ வைப்பதற்கான தகுதி இல்லை என்பதையும் பணம் என்ற ஒன்றால்தான் வாழ்வைத் தொடர்ந்து நடத்த முடியும் என்பதையும் அவன் உணர்ந்திருந்தான். இதை உணர்ந்த ராசம்மாதான் தன் தலையீட்டினால் அவனை தனதாக்கிக் கொண்டாள்.

சின்னராசாவை மணமுடித்ததில் இருந்து அவளது சந்தோசம் இரட்டிப்பாகவே காணப்பட்டது. அவன் அவள்மீது அளவு கடந்த அன்பைக் காட்டிய போதெல்லாம் அவள் கடவுளுக்கு மனசார நன்றி சொல்லிக்கொள்வாள். சின்னராசாவுடன் வாழ்கின்ற காலங்கள் பொன்னானவையாக இருந்தது அவளுக்கு.

அவன் வீட்டில் அவன் கைப்பட நட்டு வளர்ந்த பெரிய மாமரம் அவள் சிந்தையைக் கவர்ந்த ஒன்று. சின்னராசாவும் அவளும் அதன் நிழலில் அமர்ந்திருந்து ஆயிரம் கதை பேசுவார்கள். ராசம்மாவை ஒரு குழந்தையாக தன் மடியில் இருத்தி அவளது அன்பைக் கேட்டு தவமிருப்பான் சின்னராசா. மாம்பிஞ்சு கனிந்து கனியாகி அதைக் கண்ணாரக் காண்கையில் அவளது மனம் காதலால் கசிந்துருகும். அவ்வளவு சக்தி இருந்தது அந்த மாமரத்துக்கு. சின்னராசா வேலைவிட்டு வரும் வரை நெல் பொருக்குதல், கீரை துப்பரவு செய்தல், நகம் வெட்டுதல், பத்திரிகை படித்தல் போன்றன மாமரத்தின் நிழலில் தான் அரங்கேறும். சின்னராசா நேசிக்கும் அந்த மாமரம் ராசம்மாவின் வாழ்வோடும் ஒன்றிப்போனது. அப்படி இன்பமாக வாழ்ந்தவள் இன்று?

000

"ராசம்மா! இன்று மகன் வாராப்பில?" என்றாள் அங்கிருந்த பரிமளா.

அவளது கேள்வியில் மகிழ்ச்சியிருந்தது. மகன் வீட்டுக்கு அழைத்துப் போனால் எவ்வளவு சந்தோசம் என்று எண்ணினாள். ஆனால் ராசம்மாவின் மனமோ ஆயிரம் சம்மட்டிகள் கொண்டு அடித்த வலியை அனுபவித்துத் தீர்த்தது.

"ஏன் ராசம்மா! உம்முனு இருக்கே?"

"என்னத்தச் சொல்ல?" என்ற தோரணையில் மறுபக்கம் திரும்பிப் படுத்துக்கொண்டாள் ராசம்மா. அவளது கண்கள் கலங்கின. தொண்டை அடைத்துக் கொண்டது. பரிமளா... வசந்தா... தாயம்மா என்று எத்தனைப் பேர் இந்த முதியோர் இல்லத்தில் இருக்கிறார்கள்? அவர்களிடமெல்லாம் கேட்டுப் பார்த்தால் கடலளவு சோகத்தைச் சொல்லுவார்கள்.

பரிமளா முதியோர் இல்லத்துக்கு வருவதற்கு அவளது மருமகள்தான் காரணம் என்று சொன்னாள். பரிமளா ஒருநாள் உடம்புக்கு முடியாமல் படுத்துக் கிடந்தாளாம். மருமகள் அதைப் பார்த்துவிட்டு "அத்தைக்கு சொகுசு கூடிப் போச்சு" என்றதோடு விடாமல் அவளது கணவனிடமும் அதாவது பரிமளாவின் மகனிடம் போய் ஏதோ உலக மகா தப்பைக் கண்டது போல ஒப்புவித்துவிட்டாள். அவனும் ஏதோ கேட்கக் கூடாததைக் கேட்டவன் போல அரண்டு ஓடி வந்து கன்னாபின்னாவென்று தாயைத் தீட்டித் தீர்த்துவிட்டானாம். அந்த வேதனை தாங்க முடியாமல் புலம்பிக் கொண்டிருந்தவளை "பைத்தியம், அரலூசு" என்றெல்லாம் சொற்களால் வதைத்து இங்கு கொண்டுவந்து விட்டிருக்கிறார்கள்.

வசந்தாவின் கதையோ பரிதாபத்துக்குரியது. அவள் தன் இரு மகள்மாரையும் இழந்து இங்கு வந்திருக்கிறாள். அதாவது ஒரு மகளை மணமுடித்துக் கொடுத்துவிட்டு சற்று நிம்மதியாக இருந்த வேளையில்தான், ஒருநாள் அவளது மருமகன் இளைய மகளிடம் தகாத முறையில் நடக்க முயற்சித்திருக்கிறான். அதை வசந்தா கண்டதும், திகைத்துத் தடுமாறியவன் பின் எதுவுமறியாதவன் போல அப்பால் நகர, "தூ.. நாயே! நீயெல்லாம் மனுசனா?" என்றுவிட்டு பளாரென அவனை அறைந்திருக்கிறாள் வசந்தா. இது பொறுக்காத அவன், இப்போது எல்லோரும் ஒன்றாக வாழ்ந்து வரும் இந்த வீட்டை தனது பெயருக்கு எழுதித் தராவிட்டால் மூத்தமகளை (மனைவியை) விட்டுவிட்டு போய்விடுவதாக வசந்தாவை மிரட்ட, "கர்மம்" என்று கறுவிக் கொண்டு வேறு வழியில்லாமல் அதை நிறைவேற்றி வைத்திருக்கிறாள். அதன் பிறகு அவன்தன் மனைவியிடம் இல்லாதபொல்லாத விடயங்களைக் கூறி அவள் வாயாலேயேயும் வசந்தாவையும், இளையவளையும் வீட்டைவிட்டு துரத்தச் செய்திருக்கிறான். இளையவளை பெண்கள் விடுதியில் சேர்த்துவிட்டு வசந்தா நேராக இங்கு வந்துவிட்டாள். பிறகு சில நாட்களில் இளையவளும் ஒரு வாலிபனோடு சென்றுவிட்டதை அறிந்தவள் மாரடைப்பு வந்து சரிந்தாள். அன்றிலிருந்து அவளும் ஒரு இதய நோயாளியாகிவிட்டிருந்தாள்.

தாயம்மாவின் மகன் தனக்கு வசதியில்லை என்று கூறி அவளை முதியோர் இல்லத்தில் விட்டுவிட்டு மாதா மாதம் பணம் அனுப்பிக் கொண்டிருந்தான். பணம் அனுப்ப முடிந்தவனுக்கு பாசமாய் பார்த்துக்கொள்ள முடியவில்லை. தாயம்மா தாளவியலாத வயிற்றுளைவால் துடித்திருக்கிறாள். அதனைக் கவனித்து சுகப்படுத்த யாருக்கும் தோன்றவில்லை. ஏதேச்சையாக படுக்கையிலே அவளுக்கு மலசலம் கழித்துவிட்டது. அதைப் பார்த்து மருமகள் போட்ட கூச்சலில் ஆயுளுக்கும் அந்த வீட்டில் அடியெடுத்து வைக்க நினைவு வராது. அதனால் தான் "வசதியற்ற தால்" கொண்டு வந்து இங்கு விட்டிருந்தான் மகன்.

தாய்ப்பாலைக் குடித்த மனித மிருகங்கள் எல்லாம் ஒன்றிணைந்து பெற்றவர்களை இப்படி மற்றவர்களாகப் பார்க்கும் நிலைமைக்கு யார் காரணம்? பாடசாலைகள் பெருகுவது நாட்டின் முன்னேற்றத்தை பறை சாற்றும். ஆனால் முதியோர் இல்லங்கள் இதயமில்லாத மனிதர்கள் இருக்கிறார்கள் என்றல்லவா உணர்த்துகிறது.

ராசம்மா எழுந்து உட்கார்ந்தாள். பரிமளா கேட்ட கேள்வி நினைவு வந்தது. "மகன் இன்று வராப்பில?"

000

"மகன் இன்று வராப்பில?" என்று ஆனந்தமாக் கேட்டான் சின்னராசா. ஆனந்தை கொழும்புக்கு அனுப்பி அங்கே பல லட்சங்களை செலவு செய்து படிக்க வைத்தான் சின்னராசா. மகன் ஆனந் எப்போதும் ஆனந்தமாகவே இருக்க வேண்டும் என்பது ராசம்மாவினதும் சின்னராசாவினதும் கனவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்த் விடுமுறையில் வீட்டுக்கு வரும் போதெல்லாம் ராசம்மாவுக்குத்தான் கொண்டாட்டம். மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிப் போவாள். சின்னராசாவும் தாயினதும் மகனினதும் அன்பில் ஒன்றித்துப் போய்விடுவான். ஆனந்த்துக்கும் அந்த மாமரம் மீது அப்படி ஒரு பிரியம். தன் ஓய்வு நேரத்தை தாயுடன் இணைந்து மரத்தடியில்தான் கழிப்பான். மாமர நிழலில் அமர்ந்துதான் பசியாறுவான்.

ஒருநாள் ஆனந்த் ஒரு பெண்ணை அழைத்து வந்து தான் மணமுடிக்க இருக்கும் பெண் என அறிமுகப்படுத்தினான். யாருக்கும் எந்த பிரச்சனையு மில்லை ராசம்மாவுக்கும் தன் மருமகளைப் பார்க்கும் போது சந்தோசமாகத்தான் இருந்தது. எத்தனை அழகானவள், ஆனந்துக்கு பொருத்தமானவள் என்றெல்லாம் கூறி சந்தோசப்படுவாள். திருமணத் தேதி தீர்மானிப்பது வரை விசயம் நடந்து முடிந்த நிலையில் சின்னராசு எந்த அறிகுறியும் இன்றி தூங்கிய வாறே இறந்து போனான். ராசாம்மாவுக்கு உலகமே இருண்டது போலிருந்தது. வாழ்வின் அடுத்த கட்டம் என்ன என்று தெரியாமல் இருந்தது.

காலம் தன் பாட்டில் கழித்து கொண்டிருந்தது. மாமரம் அவளது உறைவிடமாகிப் போனது. ஆனந்த் அவளின் மனநிலை உணர்ந்திருந்தா லும் வேறு வழியின்றி மணமுடித்துக் கொண்டான். ராசம்மாவுக்கு இருந்த ஒரே துணை அவன்தான். ஆனந்த் தனக்கொரு துணையை தேடிவிட்ட பிறகு அவனை எல்லாவற்றுக்கும் எதிர்ப்பார்ப்பதும் முறை யல்ல என்று அவளுக்குத் தெரியும். ஆனாலும் பெற்ற மனம் பித்தல்லவா? மகனின் ஆதரவில் வாழ்நாளை கழித்துவிட விரும்பினாள். எனினும் அவனது செயல்பாடு காலப்போக்கில் மாறி விட்டிருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக தாயைவிட்டு விலகிக் கொண்டிருந்தான் ஆனந்த். காலம் சுமாராகத் தான் கழிந்தது. மாமரமும் கனிந்தது. ஆனால் ராசாத்திக்கு மனம் வெடித்தது. தன் உள்ளக் கிடக்கில் ஊற்றெடுத்த வலிகளை எல்லாம் மாமரத்திடம் சொல்லித் தீர்த்தாள். மரமும் இலையசைத்து அவளை ஆசுவாசப்படுத்தியது.

தயங்கியபடி ஒருநாள் ஆனந்த் ராசம்மாவிடம் வந்தான். அவன் அப்படி வந்தமர்ந்து அவளிடம் பேசி பல நாட்களாகிவிட்டன. தாயுள்ளம் சட்டென களிப்படைந்தாலும் மூளை விழித்துக் கொண்டது.


"என்னப்பா சொல்லு..."

"அம்மா... அது வந்து..."

"எதுக்கப்பா தயங்குற... தைரியமாச் சொல்லு..."

ஏதாவது பேசப்போகிறான் என்ற எண்ணத்தில்தான் அவளே தைரியமாக சொல்லச் சொன்னாள். ஆனால் அவன் கூறிய விடயம் அவளிதயத்தில் தீ அள்ளிப் போட்டது. பூமி பிளந்து தன்னை விழுங்கி விடாதா? என அவள் ஏங்கிப் போனாள். அவன் என்ன சொன்னான் என்று தன்னைத் தானே மீண்டும் கேட்டுக் கொண்டாள்.

"அம்மா காவியாட அக்காவின் குடும்பம் பிரான்சிலிருந்து வாராங்க. இங்க ஆறு மாதம் தங்க போறாங்க... அதனா...ல ஒரு.... ஆறு மாசத்துக்கு உங்கள முதியோர் இல்ல...த்துல விட்டுட்டு



அப்புறமா கூட்டியாந்துருவேன்...மா. விருப்ப மில்லாட்டி போக வேணாம்... கொஞ்சம் யோசிச்சி சொல்லுங்கம்மா..."

"வீட்டைவிட்டு வெளியே போ; என நாகரீக மாக சொல்கிறான் மகன்! ஆனந்த் ஆனந்தத்தைத் தவிர வேறெதையும் காணக்கூடாது என்று சின்னராசா அடிக்கடி சொன்னது அவளுக்கு அப்பொழுதும் ஞாபகம் வந்து தொலைத்தது. கணவனின் ஆசைப்படி ஆனந்தை ஆனந்தமாக இருக்கக் கூறி, அவள் தயாராகி வெளியே வந்தபோது மருமகள் தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்தாள்.

"அக்கா நீங்க வாரத சாட்டா வச்சி அத்தைய அனுப்பப் போறன். ஆமாக்கா அவரு தான் கூட்டிப் போறேன்னாரு. சனியன் கிழவி தொலஞ்சதுக்கா..."

இந்த அதிர்ச்சியை நெஞ்சோடு தாங்கிக் கொண்டாள் ராசம்மா. நடை தளர்ந்தது. உடல் குலுங்கியது. பொத்தி வைத்த கவலைகள் கண்ணீராய் பீறிட்டுப் பாய்ந்தது. அவள் கண்ணீரைத் துடைக்க நினைக்கவில்லை. கண்ணீரினூடே வெளியே பார்த் தாள். ஆனந்த் மாமரத்தின் கிளைகளை தறித்துக் கொண்டிருந்தான். ஓவென கதறியழத் தோன்றியது ராசம்மாவுக்கு. தன் கணவனின் பிரியத்துக்குரிய அந்த மாமரம் இப்போது கிளைகளை இழந்து கொண்டிருந்தது. மாம்பிஞ்சுகள் தரையில் உருண்டு கொண்டிருந்தன. ராசம்மாவை ஆதரித்து ஆறுதல் கூறிய அந்த மரம் இப்போது மொட்டை மரமாக சர்வாங்கமும் ஒடுங்கி கூனிக் குறுகி நிற்பதாய் தோன்றியது ராசம்மாவுக்கு. பார்த்துக்கொண்டிருக்கும் போதே அதன் கிளைகளை மேலும் வெட்டிக்கொண்டி ருந்தான் ஆனந்த். அதைத் தடுக்க வலுவின்றி யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் தள்ளாடியபடி வீட்டை விட்டு வெளியேறினாள் அவள்.

ஆம் ராசம்மா என்ற மாமரம் ஆனந்த் என்ற கிளையை தறித்து விட்டுத்தான் வந்தது.

000

எழுந்து வார்டனிடம் சென்றாள் ராசம்மா. தன் மகனின் நம்பருக்கு கோல் செய்து பேசுமாறு வார்டனி டம் ஏதோ கூறினாள். வார்டன் பெண் கோல் செய்து,

"தம்பி உங்க அம்மா இங்கவே இருந்துரேனு அடம்பிடிக்கிறாங்க. உங்கள இனி வர வேணாமாம். சந்தோசமா இருக்கட்டாம்" என்றுவிட்டு ராசம்மாவை அனுதாபமாகப் பார்த்தாள். ஆனந்தம் தொலைத்த சிரிப்பு ராசம்மாவின் இதழில் இழையோடியது!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரோசை

பனிப் பூக்களில்
தடக்கி விழுகிறது
சூரியக் குழந்தை.

பாலூறிய நிலம் நீராகி
நிலத்தடிக் கால்வாய்
தாகம் தீர்கிறது.

உறைந்து கிடந்த
நீரோடைகளில்
மீண்டும் உயிரோசை.

ஓவியம் கீறிய தூரிகையை
காற்றுக் களவாடியது யரம்
முகில்களின் அலைவில்
முகாரியாகிறது.

ஏகாந்தம் கலைந்த கோபம்
செடிகளில் முளைத்த
பனித்துளியின் ஈரம்
கூதலாய் குற்றுகிறது ஊசி.

(குளிர்காலம் 2017 தை மாதம் 16ம்திகதி.
பனிப்பூக்களை சூரியன் கரைத்த மதியம்)

– சாந்தி நேசக்கரம்


## உனக்கானது

ஆகா....
ஒற்றைப்பூவே !
உனை இன்று கண்டு
உவகை கொண்டேன்.
வானம் அழுத கண்ணீரில் தானே,
நீயும் சிரித்தாய்.

வசந்தம் மலர்ந்து விட்டதோ ?
வசந்தமே அது வந்து விட்டதோ?
வஞ்சியவள் மனதில் இப்போ
உனைச்சுற்றி பரவச மொட்டுக்கள்
உதிர்த்துவிடத் துடிக்கின்றன தம்
அரும் புன்னகை மெட்டுக்கள்.

அவை சிரிக்கும் முன்னே
நீ உதிர்ந்து விடுவாய்.
நீ வாழ்வது ஒருநாளாயினும்
உனது வாழ்க்கை மகிழ்வானதே! அது
உனக்கென்ற வாழ்வு தானே!


- மஞ்சு மோகன்




**நூல்**
சைவபூஷண சந்திரிகை
**ஆசிரியர்**
மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளை
**பதிப்பாசிரியர்**
தி.செல்வமனோகரன்
**வெளியீடு:** பருத்தித்துறை நண்பர்கள்
**விலை:** 500/-



**நூல்**
சிவசேஷத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம்
**ஆசிரியர்**
மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளை
**பதிப்பாசிரியர்**
தி.செல்வமனோகரன்
**வெளியீடு:** பருத்தித்துறை நண்பர்கள்
**விலை:** 350/-



**நூல்**
காஷ்மீர சைவமும் சைவசித்தாந்தமும்
**ஆசிரியர்**
தி.செல்வமனோகரன்
**வெளியீடு:** சேமமடு
**விலை:**600/-




**நூல்**
சொற்களால் அமையும் உலகு
**ஆசிரியர்**
தி.செல்வமனோகரன்
**வெளியீடு:** தூண்டி இலக்கிய வட்டம்
**விலை:** 300/-



**நூல்**
தமிழில் மெய்யியல்
**ஆசிரியர்**
தி.செல்வமனோகரன்
**வெளியீடு:** தூண்டி இலக்கிய வட்டம்
**விலை:** 300/-




**நூல்**
கண்டல் காடுகள்
**ஆசிரியர்**
பா.இரகுவரன்
**வெளியீடு:** தேடல் வெளியீடு
**விலை:** 200/-



**நூல்**
மருந்தில்லா மருத்துவம்
**ஆசிரியர்**
ந.சிவசுப்பிரமணியம்
**வெளியீடு:** செல்லமுத்து வெளியீட்டகம்
**விலை:** 200/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணக்கத்திற்கு வராத இருப்புகள்

இனிதாக முகம் சிரித்து ஒற்றுமை
பேசினாலும்
கனிவை இன்னும்
காண முடியவில்லை.

எங்கோ ஒரு
மூலையுக்குள்
எங்கும் குழி பறிப்போர்
வாழத்தான் செய்கிறார்கள்.

புனிதம் பற்றி பேசுவோர்
அநியாயங்களுக்கு
சோரம் போகின்றார்கள்.

சின்னச்சின்ன
விடயங்களே
ஊதிப்பெருத்து
பெரும்பகையை வளர்க்கிறது.

காவலுக்கு நிற்போர் கூட
சிலவேளை
கற்சிலையாய் மாறுகிறார்.

நாட்டைக்
கொந்தளிப்பாக்க
நாசகாரர்கள்
நாளுக்கு நாள் வளர்கின்றனர்.


வன்மையான
பேச்சுகள்
சிறிய விபத்துகளால்
பெரிதாகின்றன.

அரசியல் மாற்றங்களுக்கும்
அநியாயமாக
வகுப்புவாதம்
வகுப்பெடுக்கிறது.

இந்த இடர்பாடுகளில்
பதவி ஆசைகாரர்
பலதையும் பேசி
தம்மை தயார்படுத்துகிறார்கள்.

இணக்கத்திற்கு வராத
இருப்புகளால்
இத்தேசம் காலத்திற்கு காலம்
கறை படிகிறது!

- வதிரி.சி.ரவீந்திரன்



## புனல் காதலி

தண்ணீர்...
கேட்கும் போதே செவி வழி
உள் நுழைந்து செல் பரவி
தண்மை தருகிறதே
தண் நீர்
இவள் புனல் காதலி
கடலாய் கண்டாலோ
கால் நனைப்பாள்
தனியாய் காதல் பேசுவாள்
மழையாய் கண்டாலோ
வெளியிறங்கி தலை நனைத்து
கொண்டாடுவாள்
ஆறாய் நீர்வீழ்ச்சியாய்
கண்டாலோ
குதித்துக் குளித்து மிதந்து கிடந்து
உடல் முதல் உயிர் வரை
நிறைத்துக் கொள்வாள்
குவளையில் கண்டாலோ
குடித்துத் தீர்ப்பாள்
அழுக்கற்று காணும்
அத்தனை நீரையும் காதலிப்பாள்
இவள் புனல் காதலி

- பாமினி

## வண்ணத்துப் பூச்சி

எனது வீட்டின்
தென்னைகள்
நடனமாடுகின்றன.
பச்சை வயல்களின்
சிரிப்பொலி கேட்கிறது.

திடீரென்று
எங்கேயோ இருந்து
பட்டுச் சிறகுகளை அணிந்து
வண்ணத்துப் பூச்சிகள்
சிறகடித்து வருகின்றன.

வண்ணத்துப்பூச்சிகள்
சிறகடித்துப் பறக்கின்றன.
நானும் அதன் பின்னே
பறக்கின்றேன்.

என்னால்
முடியவில்லை.
என்னை ஏமாற்றிப் பறக்கின்றது.
நானும் பறக்கிறேன்.
வண்ணத்துப் பூச்சியாய்!

- ம.பவதாரணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சங்களில் மறைந்த கலசம்

நிசப்தங்களில்....
புன்னகை மலர்த்திப் பறந்தன
புறாக்கள்.

ஓலங்காவும்
காலமொன்றை
எழுதிப்போனது இரவு.


இரவுகளால் தின்னப்பட்ட
வார்த்தைகளில்...
கலந்திருந்தது
புறாக்களின் இருப்பு.


தூது முடித்து மீளும்
கணமொன்றில்....
காணாமற் போயிருந்தது
புறாக்கள் அமரும் கலசம்.

எச்சங்களால்...
குளிப்பாட்டி மகிழும்
கலசத்தைத் தேடி
வானளந்த,
புறாக்களின் விழிகள்...
எச்சங்களை மட்டுமே,
தரிசித்தன.

எல்லாமே எச்சங்களான
இருப்பின் வாசலிலிருந்து,
புழுக்களைக் கொத்திச்செல்லும்
புறாக்கள்...
நிசப்தமும் புன்னகையுமற்று
மீளவும் எச்சமிடத் தயாராகின்றன.

– சு.க.சிந்துதாசன்





## பெண் வீடு

இது பெண்களின் வீடு
எங்கள் கூடாரத்திற்கு வாருங்கள்
நாம் இரட்சகராகப் பணியாற்றுவோம்

ஆக்கிரமிப்பின்றி அன்பு செலுத்துங்கள்
உங்கள் ஆன்ம சுமைகள் அகன்று விடும்

நாங்கள் பெரும் புதையல் தான்
ஆனால் உங்கள் சொத்து அல்ல
பூமியின் ஊட்டச்சத்து நாம்

உங்களில் ஒரு பக்கம் பழமை வாதம்
மறுபக்கம் நிபந்தனைகளின் கூடம்
பெரும்பகுதி ஒன்றுமில்லா வெற்றிடம்
நீங்கள் பாவம் செய்தவர்கள்
மனித நேயம் மறந்தவர்கள்
அன்பு செய்யத்தெரியாதவர்கள்
நன்றி சொல்லத் தவறியவர்கள்

கட்டியெழுப்ப வேண்டியவர் நாம்
எம்மைக் கந்தலாக்க நினைக்காதீர்

கடந்து செல்ல வேண்டியவர் நாம்
எம்மைத் தொல்லைபடுத்த எண்ணாதீர்

எங்கள் காதலும் காமமும் கவர்ச்சியானது
எம்மை அனுமதியின்றி அணைக்காதீர்

உங்கள் குருட்டுவாய்கள் மௌனமாகட்டும்
வழி நடத்திச் செல்லாத பேச்சால் என்ன பயன்
பேசாத பொருளெல்லாம் நாம் பேசுவோம்

– சௌந்தரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகபூபதி

# அடிநிலை மக்களின் கல்விக்காக அமெரிக்கா கார்லோனியாவிலும் வடமராட்சி கரவெட்டியிலும் தோன்றிய விடிவெள்ளிகள்

அமெரிக்காவின் தென் கார்லோனியாவில் பிறந்த மேரி, அடிநிலை மக்களின் விடிவெள்ளியாக தோன்றியிருப்பதுபோன்று இலங்கையில் வடமராட்சி யில் பெரியார் சூரன் அதே காலப்பகுதியில் பிறந்து, தனது சமூகத்தின் எழுச்சிக்காக குறிப்பாக கல்வி மறுமலர்ச்சிக்காக மேரி மேற்கொண்ட அயராத முயற்சி களுக்கு ஒப்பான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியிருக்கிறார்.

இமைகள் கண்களுக்கு பாதுகாப்பானது. ஆனால், கண்களுக்குத்தெரிவதில்லை. இமைகளைப் பார்க்க கண்ணாடிதான் தேவை.

அது போன்று நாமறியாத பல அரிய பக்கங் களை தெரிந்து கொள்வதற்கு யாராவது எழுதி வைத்துச் சென்ற பதிவுகள் தான் உதவுகின்றன. அதனால் அந்தப் பதிவாளர்கள் காலத்தின் கண்ணாடி யாகத் திகழுகிறார்கள்.

நான் வசிக்கும் மெல்பனில் ஒரு வாசகர் வட்டம் இயங்குகிறது. இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை வாசகர் வட்டத்தின் சந்திப்பு கலை, இலக்கிய சுவைஞர் களின் இல்லத்தில் நடக்கும். இந்தச் சந்திப்பை ஒழுங்கு செய்பவர் திருமதி சாந்தி சிவக்குமார். இவர் தமிழ் நாட்டிலிருந்து அவுஸ்திரேலியா மெல்பன் வந்து, தனது குடும்பத்தினருடன் இருபது வருடங்களுக்கும் மேலாக வசிக்கிறார். கலை, இலக்கிய ஆர்வலர்.

குறிப்பிட்ட மெல்பன் வாசகர் வட்டத்தில் ஒரு நாள், ஜெயகாந்தன் மறுவாசிப்பு அரங்கு நடந்தது. அந்த நிகழ்ச்சி முடியும்வேளையில், சாந்தி, வருகை தந்திருந்தவர்களிடம் "உனக்குப் படிக்கத் தெரியாது" என்ற தமிழகத்தின் வாசல் பதிப்பகம் வெளியிட்ட கமலாலயன் எழுதிய நூலைத்தந்து, "இதனைத்தான் அடுத்த வாசகர் வட்டத்தில் கலந்துரையாட விருக்கிறோம்." என்றார்.

ரயிலில் திரும்பும் போதே படித்துக் கொண்டு வந்தேன். அதன் பக்கங்களும் வழியில் தென்படும் ரயில் நிலையங்களைப் போன்று கடந்து கொண்டிருக்கை யில், எனது நினைவில் வந்து கொண்டிருந்தவர்கள் வட மராட்சி கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரியின் ஸ்தாபகர் (அமரர்) கா. சூரன் அவர்களும் அவரது சுய சரிதையை பதிப்பித்த எனது இனிய நண்பர் (அமரர்) ராஜ ஸ்ரீகாந்தனும்தான்.

கமலாலயன் பதிப்பித்திருக்கும் நூலின் நாயகி மேரி மெக்லியோட் பெத்யூன் அமெரிக்காவில் தென் கார்லோனியாவில் மெய்ஸ்வேலி என்ற கிராமத்தில் 1870 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் திகதி கறுப்பின அடிமைகளின் ஏழ்மையான ஒரு குடும்பத்தில் பிறந்திருக்கிறார்.

இலங்கையில் வடமராட்சியில் கரவெட்டி கிராமத்தில் கா. சூரன் அவர்களும், 1881 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி ஒரு அடிநிலை மக்களின் குடும்பத்தில் பிறந்திருக்கிறார்.

மேரி மெக்லியோட் பெத்யூன் 1955 இலும் கா. சூரன் 1956 இலும் மறைந்திருக்கிறார்கள். கமலாலயன் பதிப்பித்திருக்கும் நூலுக்கும் ராஜஸ்ரீகாந்தன் பதிப்பித் திருக்கும் நூலுக்கும் இடையே நிறைய ஒற்றுமைகளை என்னால் காணமுடிந்தது. அந்த நூல்களில் இடம் பெறும் ஆளுமைகளை ஒப்பீடு செய்வதல்ல எனது நோக்கம்.

மேரி பிறந்த குடில் அங்கு காட்சியகமாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்கிறது. சூரனின் சிலை கரவெட்டியில் அவர் உரு வாக்கிய கல்விச்சாலையின் முன்றலில் காட்சியளிக் கிறது. மேரியின் குடிலையும் அவரது வாழ்வையும் பணி களையும் விக்கிபீடியாவில் விபரமாகத்தெரிந்துகொள்ள முடிந்திருப்பதுபோன்று சூரன் பற்றியும் விக்கிபீடியாவில் எமது தலைமுறையினர் அறியமுடிகிறது.

ஆனால், மேரி மேற்குலகில் கொண்டாடப் பட்டவாறு எங்கள் தேசத்தின் சூரன் எம்மவர் மத்தியில் நாடளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டாரா? என்ற கேள்வி எனக்குள் எழுகிறது...!? மேரி மெக்லியோட் பெத்யூன் அமெரிக்காவுக்கு வெளியே அயல்நாடுகளி லும் கொண்டாடப்படுகிறார்!

படிப்பறிவே இல்லாமல் பருத்தி வயல்களுக்கு வேலைக்குச்சென்றுவந்திருக்கும் சிறுமி மேரி, ஒருநாள் அந்தப்பண்ணை வீட்டின் முன்னால் நின்றாள். அது அவளது தாய் பாட்ஸியை அடிமையாக விலைக்கு வாங்கிய பண்ணையாரின் வீடு. அந்தவீட்டிலிருந்த வெள்ளை இனத்து சிறுமிகள் இவளை விளையாட அழைக்கின்றனர். ஆனால், முன்வாயிலால் கறுப்பின அடிமையான சிறுமி மேரிக்குச்செல்ல முடியாது. பின் வாசல் வழியாக மேரி அழைக்கப்படுகிறாள். அந்த வீட்டின் உட்புறத்தோற்றம் கண்டு மேரி வியக்கிறாள். அவளுக்கு எல்லாமே புதியதாகவும் புதுமையாகவும் இருந்தன. அந்த வீட்டின் மேசையில் இருந்த வண்ண மயமான ஒரு புத்தகத்தை கண்டுவிட்டு, அதனை ஆவலோடு எடுத்துப்பார்க்கிறாள்.

அதனைப் பார்த்து விடும் அந்த வீட்டின் வெள்ளை இனத்துச்சிறுமி, அருகே ஓடிவந்து மேரியின் கையிலிருந்த அந்தப்புத்தகத்தை பறித்து, 'அதனைத் தொடாதே உனக்குப் படிக்கத் தெரியாது" என்கிறாள்.

மேரி விதிர்விதிர்த்துப்போகிறாள். அங்கிருந்து அழுதுகொண்டே தன்வீடு வந்து, தனக்கு நேர்ந்த அவமானத்தை பெற்றோரிடம் சொல்லி தானும் அத்தகைய புத்தகங்கள் படிக்கவேண்டும் என்று கெஞ்சி மன்றாடுகிறாள்.

"நாங்கள் அவர்களின் அடிமைகள். எமக்கு அவர்கள் தான் எஜமானர்கள். அவர்களின் பருத்தி வயல்களில் வேலை செய்தால்தான் எமக்கு உணவு தரு வார்கள். எமக்குப்படிக்க முடியாது மகளே" என்கின் றனர் பெற்றோர்கள்.

இவ்விடத்தில்தான் சூரன் சுயசரிதை நூலின் முன்னுரையில் பேராசிரியர் கா. சிவத்தம்பி, பதினா றரைப்பக்கங்களில் எழுதியிருக்கும் நீண்ட குறிப்புகள் என்னைப்போன்ற வடக்கிற்கு அப்பால் மேற்கிலங்கை யில் பிறந்து வாழ்ந்திருக்கும் வாசகனுக்கு பல அதிர்வூட்டும்செய்திகளைத்தருகின்றன.

யாழ்ப்பாண சமூகத்தின் தேசவழமைச் சட்டத்தின் பிரகாரம் மேல்சாதி என்றழைக்கப்படும் வெள்ளாளருக்கு அடிமை – குடிமை சேவகம் செய்பவர் களின் தொழில் தொடர்பான வேறுபாடுகளை காண்பிக் காமல், அவர்கள் அனைவருமே Slaves (அடிமைகள்) தான் என்று (ஆங்கில வடிவத்தில்) பதிவுசெய்யப் பட்டிருக்கிறது.

18 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவில் கறுப்பின மக்கள் எவ்வாறு நடத்தப்பட்டார்களோ, அவ்வாறே அதே நூற்றாண்டு காலப்பகுதியில் இலங்கை வடபகுதியில் வாழ்ந்த அடிநிலை மக்கள் நடத்தப்பட்டிருக்கிறார்கள்.

அமெரிக்காவின் தென் கார்லோனியாவில் பிறந்த மேரி, அடிநிலை மக்களின் விடிவெள்ளியாக தோன்றியிருப்பதுபோன்று இலங்கையில் வடமராட்சி யில் பெரியார் சூரன் அதே காலப்பகுதியில் பிறந்து, தனது சமூகத்தின் எழுச்சிக்காக குறிப்பாக கல்வி மறுமலர்ச்சிக் காக மேரி மேற்கொண்ட அயராத முயற்சிகளுக்கு ஒப்பான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி யிருக்கிறார்.

ஒரே காலப்பகுதியில் இவர்கள் இருவரும் பிறந்தும் மறைந்துமிருந்தாலும், ஒருவர் பற்றி ஒருவர் அறியாமல் அவர் அமெரிக்கக்கண்டத்திலும் இவர் ஆசி யாக்கண்டத்திலிருந்தும் தத்தம் சமூகத்தினருக்காக, அம்மக்கள் எதிர்நோக்கிய கண்டங்களை கடந்து சென்றிருக்கிறார்கள்.

சூரன் தான் கடந்து வந்த கரடுமுரடான பாதையை தனது சுயசரிதையில் எழுதி வைத்திருந்தமை யால், அவரது பேரன் ஏகாம்பரம் ரவிவர்மாவிடமிருந்து அந்த ஒடிந்து நொருங்கும் நிலையிலிருந்த மூலப் பிரதியை பெற்று பதிப்பித்திருக்கிறார் ராஜஸ்ரீகாந்தன். 2004 இல் இந்த நூல் எமக்கு வரவாகின்றது.

மேரி மெக்லியோட் பெத்யூன் தொடர்பாக ஆங்கிலத்திலும் பிறமொழிகளிலும் கிடைத்திருக்கும் ஆவணங்கள் சான்றாதாரங்கள் மற்றும் ஒளிப்படங்கள் அனைத்தையும் உசாத்துணையாகக்கொண்டு சென்னையில் வசிக்கும் கமலாலயன், வாசல் பதிப்பகம் ஊடாக உனக்குப்படிக்கத்தெரியாது நூலை 2011 இல் வரவாக்கியிருக்கிறார்.

மேரியின் வாழ்வில் அவளது கனவுகளை நனவாக்க பலர் வருவதுபோன்று சூரனின் வாழ்விலும் பலர் வருகின்றனர். இருவருமே சவால்களையும் சந்திக் கின்றனர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்தோனா என்ற பிரதேசத்தில் கறுப்பினக் குழந்தைகளுக்கு ஒரு பாடசாலையை அமைப்பதற்காக மேரிக்கு கிடைத்ததோ அங்கிருந்த கடற்கரையில் பொது மக்கள் குப்பை கொட்டும் இடம்தான். கையில் ஒரு டொலர் **50** சதத்துடன்தான் அந்தப் பணியை தொடங்கியிருக்கிறார்.

சுவாமி ஞானப்பிரகாசருடன் நேரிலும் கடிதம் மூலமும் வாதாடும் சூரனை வழியில் சந்திக்கும் சில மேல் சாதியினர், "எங்கை பார்ப்போம்... சித்த மணி வைத்தியன்ரை சைவப்பள்ளிக் கூடத்துக்குள்ளே போ பார்ப்போம்" என்று சவால் விடுகின்றனர்.

'உனக்குப்படிக்கத்தெரியாது" என்று மேரியிடம் சொன்னவளோ ஒரு ஒரு வெள்ளையினச்சிறுமி. அது அவளது சூழல் அவளிடம் உருவாக்கிய அறியாமை என்று கருதினாலும், வடமராட்சியில் படித்த மேல்தட்டு வர்க்க பெரியமனிதர்கள், "எங்கே உன்னால் எங்கள் பள்ளிக்கு வரமுடியுமா..?" எனக்கேட்டிருப்பதானது அறியாமை அல்ல ஆணவம்தான்.




இத்தனைக்கும் அமெரிக்க மேரியைப்போன்று ஆரம்பக்கல்வி மறுக்கப்பட்டவர் அல்ல சூரன். இவர் தனது ஐந்தாம் வயதில் தமது வீட்டருகேயுள்ள நுகவிலென்றழைக்கப்படும் உவெல்சியன் மிஷன் பாடசாலையில் கற்றவர். அங்கு ஐந்தாம் வகுப்பு சித்தியடைந்திருக்கிறார். அதன்பின்னர், கரவெட்டி மேற்கிலும் கிழக்கிலும் மேல்வகுப்புகள் இருந்தும் அவரது சமூகப்பிள்ளைகள் உள்ளே புகமுடியாது, கல்வியை நிறுத்தியிருக்கிறார்.

பல பால்யகால விளையாட்டுக்களில் ஆர்வம் கொண்டிருந்த சூரன், வகைவகையான பட்டங்கள் பறக்கவிடுவதிலும் தேர்ந்த கலைஞனாக மிளிர்ந்திருக்கிறார். தச்சுத்தொழிலும் தேர்ச்சிபெற்று ஆலயங்களுக்கு சப்பரம் செய்வது முதல், மரத்தில் உருவச் சிலை வடிக்கும் கலையும் கைவறப்பெற்றிருக்கிறார்.

இருபத்திரண்டு வயதில் மாமிசம் உண்பதை தவிர்த்திருக்கிறார். சைவசமயியானதன் பின்னரும், கரவெட்டி தேவமாதா கோயிலுக்கு மாதாவின் சிலை வைப்பதற்கு அழகான சுருவக்கூடு செய்து கொடுத்துள்ளார். ஆனால், சூரன் தான் அதனைச்செய்து தந்திருப்பதாக வெளியில் தெரியவேண்டாம் என்று சொல்லியிருக்கிறார் ஒரு கிறிஸ்தவ வேளாளர்.

எப்படி இருக்கிறது இந்தக்கதை...?

எனக்கு இந்தப்பக்கத்தை படித்தபோது, "மேல் சாதி தாய்க்கு பால் சுரப்பது வற்றியதும், வீட்டு வேலைக்கு வரும் அடிநிலைப்பெண் அவள் குழந்தைக்கு பாலூட்டிய கதையை" மூத்த எழுத்தாளர் கே. டானியல் முன்பே சொல்லியிருப்பது நினைவுக்கு வருகிறது. ஆனால், அந்தப்பெண்தான் பாலூட்டியது என்ற தகவல் வெளியே தெரியக்கூடாது அந்த சீமாட்டிக்கு!

இவ்வாறு அடக்கி ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து சூரன் வந்திருந்தாலும் குறைந்த பட்சம் ஐந்தாம் வகுப்புவரையுமாவது ஒரு பாடசாலைக்குச் செல்லும் சந்தர்ப்பம் அவருக்கு வாய்த்திருந்திருக்கிறது.

ஆனால், அமெரிக்க கறுப்பின அடிமைக்கு பிறந்த குழந்தை மேரிக்கு அந்த வாய்ப்பு தொடக்கத்தில் மறுக்கப்பட்டிருந்தாலும், எதிர்பாராதவகையில், மிஸ் வில்சன் என்ற வெள்ளை இனத்துப் பெண்ணொருத்தி பருத்தி வயலுக்கு செல்லத் தயாராய் நின்ற அந்த அடிமைகளின் முன்னால் வந்து 'இங்குள்ள கறுப்பினக் குழந்தைகளுக்காக பள்ளி ஒன்றை அமைத்து பாடம் சொல்லிக் கொடுக்க வந்துள்ள ஆசிரியர் என்று தன்னை அறிமுகப்படுத்துகிறாள்.

அன்றிலிருந்து மேரியின் கனவு நனவாகத் தொடங்குகிறது. ஆர்வத்தோடு பாடசாலை செல் கிறாள். கிடைத்த வாய்ப்பை நன்கு பயன்படுத்துகிறாள். அவள் வீட்டில் பருத்திக்காட்டில் உழைப்பதற்கு அவர்களுக்கு உதவிய குதிரையும் இறக்கிறது. அதனால் மற்றும் ஒரு குதிரை வாங்குவதற்கு பணம் தேவை. அந்தத்தேவையை பூர்த்தி செய்தால் மேரியின் மேல் படிப்பு தடைப்படும்.

மீண்டும் அவள் வாழ்வில் வசந்தம் வீசுகிறது.

எதிர்பாராத நிகழ்வுகளின் சங்கமம்தானே வாழ்க்கை!

மற்றும் ஒரு வெள்ளை இன மாது அவளது கல்விக்கான செலவுகளை பொறுப்பேற்க முன்வருகிறாள். வடகரோலினாவில் இயங்கும் கறுப்பினக் குழந்தைகளுக்காக இயங்கும் ஒரு கல்லூரிக்கு மேரி வருகிறார்.

அங்கு தனது அயராத முயற்சியால் படித்து முடித்து **1907** ஆம் ஆண்டில் கறுப்பினக் குழந்தைகளுக்காகவே ஒரு பாடசாலையை தொடங்குகிறார். எனினும் அதற்காக அவருக்கு கிடைத்த இடமோ ஒரு குப்பைமேடுதான். குப்பையிலும் குண்டுமணி துளிர்க்கும் என்பார்கள்.

அவ்வாறு மேரியின் பாடசாலையின் வளர்ச்சிக்காக பலரிடம் கையேந்தி அதனை முன்னேற்றுகிறார்.

எங்கள் சூரனும் முதலில் தனது சமூகத்துப் பிள்ளைகளுக்காக ஒரு கொட்டில் பாடசாலையை உருவாக்குகிறார். அதனைக்கட்டுவதற்கு சிலர் பனை மரங்கள் தந்துதவுகிறார்கள். பதினெட்டு முழத்தில் ஓர் கொட்டகை அமைத்து இரண்டடி உயரத்தில் குட்டிச்சி வரும் வைத்து எட்டு வாங்கு ஒரு மேசையுடன் அந்தப் பாடசாலை தொடங்குகிறது. உள்ளூரிலும் வெளியூரிலும் இருக்கும் அன்பர்கள் உதவுகின்றனர்.

தனது பாடசாலைக்கும் தேவைகள் இருப்பதனால் மேரி பெத்யூன் பல பரோபகாரிகளிடம் கையேந்துகிறார். அத்துடன் ரயில் பாதையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு சாப்பாடு சமைத்துக்கொடுத்து அதில் கிடைக்கும் சொற்ப வருமானத்தையும் தனது பாடசாலையின் தேவைக்கு பயன்படுத்துகிறார்.

ஜேம்ஸ் எம். காம்பிள் என்ற பிரமுகரை ஒரு செய்தித்தாளின் ஊடாக அறிந்துகொண்டு அவரிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி கேட்டுச்செல்கிறார் மேரி. அவரோ மேரியின் பாடசாலையை பார்க்கவேண்டும் எனச்சொல்லி ஒரு நாள் வருகிறார். வந்தவர் "எங்கே உமது பாடசாலை?" எனக்கேட்கிறார்.

"அது எனது மனதில் இருக்கிறது" எனச் சொல்லி குப்பைமேட்டின் மீது உருவாக்கப்பட்ட அந்த மோசமான கட்டிடத்தை காண்பிக்கிறார் மேரி. அங்கே ஆசிரியரின் மேசையாக இருப்பது ஒரு மரப்பெட்டிதான். கருணையுள்ளம் கொண்ட மனிதரான காம்பிள், பல வழிகளில் உதவுகிறார். அந்தச் சந்திப்பு முதல் அங்கு "பார்வையாளர் தினம்" அனுசரிக்கவும் மேரி ஏற்பாடு செய்கிறார்.

சிறுதுளி பெருவெள்ளமாக அந்தப்பாடசாலை முன்னேறுகிறது.

இவ்வாறு தானும் வளர்ந்து தனது இனத்துக் குழந்தைகளையும் கல்வியில் வளர்த்து அவர்கள் வாழ்வில் விடிவெள்ளியாகத்தோன்றிய மேரி மெக்லியோட் பெத்யூன், பின்னாளில் பெத்யூன் குக்மேன் கல்லூரியையும் அமைத்து வழிநடத்தி, அதனை பல்கலைக் கழகமாகவும் வளர்த்தெடுத்தார். அவர் ஒரு குப்பை மேட்டில் விதைத்த விதை விருட்சமாய் எழுந்து நிற்கிறது, 1955 மறைந்த அவரது நினைவுகளுடன்.


தேவரையாளி இந்துக்கல்லூரியின் நிறுவுனர் பெரியார் சூரனின் சரிதையிலிருந்து, மேரிபெத்யூனின் வாழ்க்கையை இனம்காண்பதா, அல்லது மேரி பெத்யூனின் வாழ்விலிருந்து பெரியார் சூரனை அடையாளம் காண்பதா என்ற சிந்தனை இரண்டு நூல்களையும் மீண்டும் மீண்டும் வாசித்தபோது வந்தது.

அதற்காகவே குறிப்பிட்ட வாசகர் வட்டத்தின் சந்திப்புக்குச்செல்லும்போது சூரன் சுயசரிதையையும் எடுத்துச்சென்று வந்திருந்தவர்களிடம் அறிமுகப் படுத்தினேன்.

அங்கிருந்தவர்களில் அதிகமானவர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு இலங்கையின் வடமராட்சியில் பிறந்த பிரபாகரனை தெரிந்தளவுக்கு வடமராட்சியும் தெரியாது. அதனால் சூரனையும் தெரிந்திருக்க நியாயமில்லை.

சூரனின் பேரன் ஏகாம்பரம் ரவிவர்மாவும் ராஜஸ்ரீகாந்தனும் இல்லையென்றால் நாமும் அந்தப் பெரியாரின் வாழ்வையும் போராட்டங்களையும் பணிகளையும் சாதனைகளையும் தெரிந்து கொண்டிருந்திருக்க மாட்டோம்.

இந்நூலில் "இரட்டை முட்கிரீடங்களைச் சுமந்த நமது பெரியார் சூரன் எனும் சுந்தர நாயகன்" என்னும் தலைப்பில் ராஜஸ்ரீகாந்தன் எழுதியிருக்கும் முன்னுரையின் வாயிலாக தேவரையாளி இந்துக் கல்லூரியில் வெளியிடப்பட்ட சூரன் நினைவுமலர், கல்கி எழுதியிருக்கும் இலங்கையில் இரண்டு வாரம் தொடர்கட்டுரை, தெணியான் எழுதியிருக்கும் கட்டுரைகள், பேராசிரியர் சிவலிங்கராஜா, காரை செ. சுந்தரம்பிள்ளை ஆகியோரின் ஆய்வு




நூல்கள், பேராசிரியர் கா. சிவத்தம்பியின் கட்டுரைகள், டானியல் தனது தண்ணீர் நாவலிலும் மல்லிகை ஜீவா தனது சுய சரிதையிலும் த.கலாமணி "எம்மவர்கள்" கட்டுரைத் தொகுதியிலும் சூரனைப்பற்றி பதிவு செய்திருக்கும் தகவல்களையும் தெரிந்து கொள்கின்றோம்.

சூரன் ஒரு போராளியாகவும் திகழ்ந்திருக்கும் செய்தியும் தெரியவருகிறது.

வதிரியில் அண்ணமார் கோவிலில் நடந்த ஆடு பலியிடுதலை தடுப்பதற்காக பலிபீடத்தின் மீது தனது தலையை வைத்து, ஆட்டை வெட்டுவதற்கு முன்னர் தனது தலையை வெட்டுங்கள் என்று குரல் எழுப்பி மிருக பலியிடலை தடுத்திருக்கிறார்.

மேரி பெத்யூன் தன்னை ஒரு போராளியாகக் காண்பிக்காமல் அன்றைய சூழலை புரிந்துகொண்டு வெள்ளையினத்தவரில் நிறவேற்றுமை பாராட்டாத கருணை உள்ளங்கொண்டவர்களுடன் இணக்கமாகப் பேசி காரியங்களை சாதித்திருக்கிறார்.

ஆனால், அன்றைய வடமராட்சி சூழலின் பின்னணியில் ஒருபுறம் சாதுரியமாக நடந்த மதமாற்றம் - மறுபுறம் மேட்டுக்குடி வெள்ளாளரின் அடக்கு முறை - இவை இரண்டுக்கும் இடையே இரட்டை முட்கிரீடங்களை சுமந்துகொண்டு களமாடியிருக்கிறார்.

அமெரிக்காவில் மெரிபெத்யூனின் பெயரைச் சொல்லும் பெத்யூன் குக்மேன் பல்கலைக்கழகம் போன்று, இலங்கையில் வடமராட்சியில் தேவரையாளி இந்துக்கல்லூரி பெரியார் சூரனின் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

இந்த இரண்டு நூல்களையும் மீண்டும் படித்து முடித்தபோது எனக்கு மெல்பனில் பல வருடங்களுக்கு முன்னர் நடந்த ஒரு நடன அரங்காற்றுகை நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது.

அதில் கலந்துகொள்வதற்காக வந்திருந்த நடனக்கலைஞர்கள் அனைவரும் பார்வையை பிறவியிலேயே இழந்தவர்கள். அதியற்புதமாக அபிநயம் பிடித்து ஆடி ரசிகர்களை கவர்ந்தார்கள்.

செவிப்புலன் மூலம் ராகம், தாளம் அறிந்து அதற்கேற்றவாறு அபிநயத்தோடு ஆடினார்கள். நாம் வியந்தோம். இறுதியில் அவர்களுக்கு பரிசுகள் வழங்கும் வேளை வந்தபோது அவர்கள் ஒவ்வொருவரையும் கைத் தாங்கலாக அழைத்துவந்து மேடையில் நிறுத்தி பரிசுகளை கொடுத்தார்கள்.

அவர்கள் ஆடும்போது எந்த இடத்தில் நிற்க வேண்டும். எப்போது எத்தகைய வடிவமும் அபிநயமும் காண்பிக்கவேண்டும் முதலான சங்கதிகள் அனைத்தும் பயிற்சியினால் பெற்றவை.

அவர்களில் ஒரு கலைஞர் தனது ஏற்புரையில்: "வாழ்க்கையில் மூன்று விடயங்கள் முக்கியம். அவை, கனவு (Dream) - போராட்டம் (Struggle) - வெற்றி (Success). எனச்சொன்னார். இவை மூன்றையும் நாம் மேரிபெத்யூனிலும் பெரியார் சூரனிலும் காண்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்பகல்

இன்னும் ஒரு அரைமணித்தியாலத்தில் எனது பேரன் சிவச்செல்வன் மல்ரில்டாவை எமது கிராமத்தில் உள்ள கிறிஸ்தவ தேவாலத்தில் கை பிடிக்க இருக்கின்றான்.

சிவச்செல்வன் என் மூத்தமகள் வழிப் பேரன்.

இது புரட்டஸ்தாந்து தேவாலயம். டென்மார்க்கில் எங்கு சரி புதுக்குடியிருப்பாக குறைந்தது 500 குடும்பங்கள் வாழுவதற்கு வீடுகள் கட்டப்படும் பொழுது அங்கு ஒரு தேவாலயம் சிறியளவில் ஆவது நிர்ணயிக்கப்படவேண்டும் என்பது சட்டம்.

அதேவேளை தேவாலயத்திற்கு தங்கள் விருப்பத்தின் பெயரில் பணம் செலுத்துபவர்களின் தொகை குறைந்து கொண்டிருப்பது பற்றி தேவாலய அமைச்சு மிகக் கவலை கொண்டிருக்கிறது.

மக்கள் தொகை குறைந்தாலும் சட்டப்படி ஒவ்வோர் ஞாயிறும் நடாத்தப்படும் பூஜை நடாத்தப் படும். ஒவ்வோர் ஞாயிறும் இங்கு பூஜைக்கு வரும் மல்ரிட்டாவின் அம்மம்மாவின் பெருவிருப்பம் இந்த தேவாலயத்தில் தன் பேத்திக்கு திருமணம் நடக்க வேண்டும் என்பதே.

தனது கணவன் தான் இந்த தேவாலத்திற்கு பூஜைக்கு அடிக்கும் பெரியமணியை தானாகவே தனது பட்டறையில் செய்து கொடுத்தார் என்பதை ஞாயிறு தோறும் வரும் அனைவருக்கும் சொல்வதில் அவருக்குப் பெருமை.

டென்மார்க்கில் இன்று சாதியம் வெளியளவில் தெரியாவிட்டாலும் இப்போதும் சாதியின் பெயரால் தெருக்கள் இருந்து கொண்டிருக்கின்றது.


என்ன வித்தியாசம்? கொல்லன் தெருவில் நடனமாடும் இரவு விடுதிகளும், தட்டாரத் தெருவில் பாண் பேக்கரிகளும் இறைச்சிக் கடைகளும் நிறைந்திருக்கின்றன.

என் மனைவி இருந்திருந்தால் இந்த திருமணத்திற்கு பெரிய எதிர்ப்புக் கிளப்பிருப்பாள். ஆனாலும் அவளையும் மீறி இந்த திருமணம் நடந்துதான் இருக்கும். பாவம் அவள் தோற்றிருப்பாள். என்னையும் இழுத்து வைத்துக் கொண்டு இந்த திருமணத்தை பகிஸ்கரித்திருப்பாள். அல்லது மகள் - மருமகன் - பேரன் வந்து கெஞ்சிக் கேட்டதிற்கிணங்க கடைசி நேரத்தில் திருமணத்திற்கு வந்திருப்பாள்.

இப்போது எந்த அசுமாத்தமும் இல்லாது கைபிடிப்பு நடைபெற இருக்கின்றது.

நாடு மாறி... மொழி மாறி... கலாசாரம் மாறி... சாதி மாறி...

தண்ணீரால் கழுவி சுத்தம் செய்தவற்றை ரிசு பேப்பரால் துடைத்து போடத்தொடங்கிய பொழுதே என் மனைவிக்குச் சொன்னனான், "மாற்றங்கள் இப்படித் தான் சின்ன சின்னதாக தொடங்கும். கடைசியில் எல்லா வற்றிலும்



| வி.ஜீவகுமாரன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் மூழ்கி போய்விடுவோம்" என்று.

அப்போது மூத்தவளுக்கு 11 வயது. நாங்கள் டென்மார்க்கிற்கு வந்த காலம்.

மனைவி ஒத்துக் கொள்ளவேயில்லை.

"காட்டுமிராண்டி வாழ்க்கை வாழுற நிலை வந்தால் இலங்கைக்குப் போக முடியாட்டிலும் இந்தியா விலை போய் உயிர் வாழ்வேன்" என்று சவால் விட்டாள்.

ஆனால் மூத்தவள் வயதுக்கு வந்து மூன்றாம் நாள் ஐயரிடம் தண்ணி வார்க்க நல்லநாள் பார்த்து விட்டு படுத்தவள்தான். அடுத்த நாள் எழுந்திருக்கவேயில்லை.

மரணம் மாரடைப்பு ரூபத்தில் வந்திருந்தது.

காலையில் எழுப்பிய பொழுது உடம்பு குளிர்ந்திருந்தது.

மூத்தவளுக்கு சாமத்தியச் சடங்கு என்பதற்குப் பதிலாக மனைவியின் மரணச் சடங்குடன் வாழ்க்கை அடுத்தபடிக்கு நகர்ந்து சென்றது.

மனைவியின் தண்ணீர்ப்படம் போல் வளர்ந்த மூத்தவளுக்கு நல்ல திருமணம் பேசி வந்து... அது நடந்து... பின் இவன் பிறந்த பொழுது எத்தனையோ டெனிஸ் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்ட பொழுதும் சிவச்செல்வன் என தாய் போல பிடிவாதமாக நின்று பெயரிட்டாள்.

தமிழ்ப் பிள்ளையாகவேதான் வளர்த்தாள்.

ஆனால் வாலிப வயதும் மல்ரிட்டாவினுடனான காதலும் வந்த பொழுது எவரும் எது சொல்லியும் அவன் கேட்கவில்லை.

இளையவள் அமெரிக்கா என்றும் அவுஸ்தி ரேலியா என்றும் தொழில் தொழில் என்று பறந்து கொண்டிருந்தாள். கல்யாண வயது தாண்டி விட்டது.

மனைவி போன பிறகு ஏதோ ஒரு வகையில் நடைப்பிணமாய்ப் போன என்னால் அவளை வலிந் திழுத்து ஒரு திருமணம் செய்து வைக்க முடியவில்லை.

இப்போது கூட நேற்று இலண்டனில் இருந்து வந்து தமக்கைக்கு உதவியாக நின்று கொண்டிருக் கின்றாள். என்னதான் டை அடித்திருந்தாலும் கன்னவோரமாக வெள்ளிக் கம்பிகள் தெரிகிறது. அதுவும் என் மகளுக்கு அழகாகவே இருக்கின்றது.

ஓடி ஓடி எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருக்கின்றாள்.

இடைக்கிடை சிவச்செல்வனின் கோர்ட்டில் உள்ள ரோஜா சரியாக இருக்கிறதா என்றும் அவன் தலை கலைந்து போய் இருக்கிறதா என்றும் பார்த்துக் கொள்கின்றாள்.

திருமணத்திற்கான ஆயத்த மணி அடிகிறது.

கோரஸ் பாடல் ஒலிக்கிறது.

பேரன் மாப்பிள்ளையாக மருகனின் முழங்கையுடன் முழங்கை கோர்த்து வருகிறான்.

பின்னால் இளையவளும் மருமகனின் சகோதரங்களும்.

என்னையும் வரும்படி இளையவள் சைகை காட்டுகின்றாள்.

நானும் எனது கோர்ட்டையும் ரையையும் சரி செய்து கொண்டு இளையமகளுடன் சேர்ந்து கொள்கின்றேன்.

மனம் மனைவியை நினைத்துக் கொள்கின்றது.

பாதிரியாரை நாங்கள் அண்மித்த பொழுது கோரஸ் பாடல் முடிவு பெறுகின்றது.

பேரன் மட்டும் பாதிரியார் முன்னே நிற்க மற்ற அனைவரும் எங்களுக்கான முன்னிரு வரிசைகளுக்கும் திரும்புகின்றோம்.

இப்பொழுது மீண்டும் கோரஸ் பாடல் ஒலிக்கின்றது.

மல்ரிட்டா நீண்ட வெள்ளை அங்கியில் தகப்பனுடன் முழங்கை கோர்த்து வருகின்றாள். பக்கத்தே ஒரு ஆபிரிக்க பெண்.

தாயாக இருக்க வேண்டும். அல்லது தந்தை யாரின் இரண்டாவது மனைவியாக இருக்க வேண்டும்.

அவளுக்கு பின்னால் நான்கு சிறுமிகள் அவளது நீண்ட அங்கி நிலத்தில் அரையாதபடி அதனைத் ஒரு கையால் தூக்கிப் பிடித்தபடி மறுகையால் தங்களின் சிறிய பூக்கொத்தை கவனமாக ஏந்தியபடி வந்து கொண்டிருந்தார்கள்.

அவர்கள் என்னைத் தாண்டிய பொழுது எனக்குத் "திக்"கென்றது.

மல்ரிட்டாவின் வயிறு ஊதியிருந்தது.

"சரசு"

என்னையும் அறியாமல் என் வாய் முணுமுணுத்திருக்க வேண்டும்.

பக்கத்தில் இருந்த சம்பந்தி திரும்பிப் பார்க்க மௌனமானேன்.

***

மரியாதையாகச் சொன்னால் கதிராமனும் விசாலமும் எங்கள் வீட்டுக் "குடி"கள் போல.

இன்னும் ஆழமாகவும் அகலமாகவும் சொன்னால் கொத்தடிமைகள் போல.

கதிராமன் எங்கள் தோட்டக் காணிகளையும் வயல்களையும் பராத்திற்கு செய்து கொண்டிருந்தான்.

விளைச்சலில் மூன்றில் ஒன்று.

நிலமும் பணமும் எங்களுடையது.

உழைப்பு அவனுடையது.

விசாலம் காலை வந்தால் மாலைவரை அம்மாவுக்கு எல்லாத்திலும் ஒத்துழைப்பு.

சனி, ஞாயிறுகளில் சரசையும் கூட்டி வருவாள்.

நான் ஐந்தாம் வகுப்பு படித்த போது சரசு இரண்டாம் வகுப்பு.

சனி ஞாயிறுகளில் என் விளையாட்டுத் தோழியும் கூட.

ஆனாலும் மத்தியானத்தில் நான் அப்பா வுடனும் அம்மாவுடனும் வீட்டுக்குள் உட்கார்ந்து சாப்பிட்டு முடிந்த பின்பு கதிராமனும் விசாலமும் சரசுவும் வீட்டுத் தாழ்வாரத்தில் இருந்து உண்பார்கள்.

சரசை உள்ளே அழைத்து எங்களுடன் வைத்து உண்போம் என்று கேட்ட பொழுது "அவள் தன் அப்பா அம்மாவுடன் தான் உண்பாள்" என்று அம்மா சொன்ன காரணத்தின் நதிமூலம் ரிஷிமூலத்தை அறிய அடுத்த சில ஆண்டுகள் ஆகியது.

மற்றும்படி சனி-ஞாயிறு என்பது எனதும் சரசின் தினங்களாகவே இருக்கும்.

சிலவேளை காலையில் தாத்தாவுடன் அவரின் தோட்டங்களுக்குப் போய் அவர் காட்டும் வாழைக் கன்றுகளுக்கு அடியில் மதாழித்து வளர்ந்திருக்கும் புல்லைப் பிடுங்கி நானும் சரசுவும் வீட்டுக்கு கொண்டு வருவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிளகாய்ச் செடிகளுக்கும் வெங்காயத்திற்கும் இடையில் உள்ள புல்லைப் பிடுங்க எங்களுக்கு அனுமதியில்லை. அவற்றைக் கவனமாக பிடுங்க கூலிக்கு ஆட்களை வைத்துச் செய்வார் தாத்தா.

மாலையில் எட்டுக் கோடு... கிட்டி... கள்ளன் பொலிஸ் என்று பொழுது போகும்.

நான் பத்தாம் வகுப்புக்கு வந்த பொழுது சரசு குந்தி விட்டாள் என்று விசாலம் வந்து அம்மாவிடம் சொல்லிக் கொண்டு இருந்தாள்.

அதன் பின்பு ஒரு மாதமாக அவளைப் பள்ளிக்கூடத்திலும் காணவில்லை. எங்கள் வீட்டிலும் சனி ஞாயிறுகளில் காணவில்லை.

தலைக்கு தண்ணீர் வார்த்து முடிய பாடசாலைக்கு வருவாள் என்று நினைத்திருந்தேன்.

அவளின் தலைக்கு தண்ணீர் வார்ப்பு மிகச் சிறப்பாக நடந்தது என தோட்டத்தில் பெண்டுகள் பேசிக் கொண்டார்கள்.

அப்பா அம்மா காசு ! பட்டுச் சேலை ! ஒன்றரைப் பவுணில் ஒரு சின்ன சங்கிலியை எங்கள் வீட்டு அன்பளிப்பாக கதிராமனிடம் விசாலத்திடம் கொடுத்து விட்டிருந்தார்கள்.

பனையில் கட்டியிருந்த லவுட் ஸ்பீக்கரின் சத்தம் மூன்று நாட்களாக கேட்டுக் கொண்டே இருந்தது.

"இனி இவள் படிச்சு என்ன செய்கிறது என்று பள்ளிக்கூடத்தாலை நிற்பாட்டிப் போட்டம்" என அடுத்த நாள் வீட்டு வாசலில் இருந்து கதிராமனும் விசாலமும் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

எனக்குள் ஒரு சின்ன ஒரு வெறுமை.

பத்தாம் வகுப்பு சோதனை நெருங்க நெருங்க நானும் சனி, ஞாயிறுகளில் ரியூசன் அது இது என சுறுசுறுப்பாகி விட்டேன்.

சோதனை நன்றாக முடிந்திருந்தது.

பரீட்சை பெறுபேறுகள் வர இரண்டரை மூன்றுமாதங்கள் காத்திருக்க வேண்டும்.

ஊர் சுற்றிக் கொண்டிருந்தேன்.

காலையில் மரக்கறி வாங்கி வருவது... பத்து மணி போல் மீன் சந்தைக்குப் போவது... மாலையில் வாசிகசாலைக்குப் போவது... வெள்ளிக் கிழமை மாலையில் அம்மன் கோயிலுக்குப் போவது... இறைப்பு நாட்களில் தோட்டத்து தொட்டியில் இருந்து மணிக் கணக்காக குளிப்பது என நாட்கள் ஓடிக்கொண்டிருந்தது.

ஒரு நாள் குளித்து விட்டு சைக்கிளில் ஏறப் போகும் பொழுது புல்லுப் பிடுங்கும் பெண்களுக்கும் பெட்டைகளுக்கும் நடுவில். சரசு.

என்னால் நம்பவே முடியவேயில்லை.

அவ்வளவு அழகாக மாறியிருந்தாள்.

கிட்டவாகவே போய்க் கதைத்தேன்.

தாய் தகப்பன் தன்னைப் பள்ளிக்கூடத்தால் நிற்பாட்டியதைப் பற்றி இயல்பாகவே சொன்னாள்.

தன் மற்ற தோழிகள் பற்றியும் எனது பரீட்சை பற்றியும் விசாரித்தாள்.

வீட்டை வந்தாலும் அவளின் நினைவுகள் என்னை நிறைத்திருந்தது.

முதலில் இறைப்பு நாட்களில் மட்டும் தோட்டப் பக்கம் போன நான் புல்லுப் பிடுங்க ஆட்கள் வரும் நாட்களிலும் போகத் தொடங்கினேன்.

காதல் அது இது என்ற எந்தப் பெரிய வார்த்தையும் தெரியாத வயது அது.

ஆனால் உலகத்தின் மிகப்பெரிய ஈர்ப்பு சரசுவிடம் இருந்தது.

அதே ஈர்ப்புத்தான் தோட்டக் கொட்டிலில் அந்தத் தவறும் ஒருநாள் நடைபெறக் காரணமாகி விட்டிருந்தது.

வழமையான மூன்று மாதத்தில் வரும் பரீட்சை முடிவுகள் அந்த வருடம் நான்கு மாதங்களுக்குப் பின்பே வந்தது.

காலையில் பரீட்சை முடிவுகள் பார்க்கப் போய் விட்டேன்.

போக முன்பு அம்மா அனைத்து ஊர்க்கோயில் களுக்கும் ஒரு சுற்று சுற்றி எனது பெயருக்கு அபிசேகங் கள் செய்த விபூதியை நெற்றியில் இட்டுக் அனுப்பினா.

எட்டுப் பாடங்களிலும் மிகத் திறமைச் சித்தி.

வானத்தில் பறந்தபடி வீட்டுக்கு வந்தேன்.

வீடு பிரளயமாக மாறி இருந்தது.

கதிராமனும் விசாலமும் தலை தலையாய் அடித்துக் கொண்டு நின்றார்கள்.

அம்மாவும் அப்பாவும் தாத்தாவும் தலை குனிந்து கொண்டு நின்றார்கள்.

சரசுக்கு மூன்று மாதமாம்.

இனி அழிக்க முடியாது என நாட்டு வைத்தியர் கைவிரித்து விட்டாராம்.

நான் சைக்கிளால் இறங்க முதல் அம்மா காளி யாக உருவெடுத்து என்னை அறையத் தொடங்கினா.

தாத்தா வந்து தடுத்துப் பார்த்தார்.

ஆனாலும் அம்மாவின் வெறி அடங்கவில்லை.

"தம்பியை அடிச்சு என்ன செய்யிறது. எங்களுக்கு என்ன வழி?" கதிராமன் கேட்டான்.

"ஊர் உலகத்தைக் கூட்டி வயித்தை தள்ளிக் கொண்டு மணவறைக்கு கொண்டு போய் இவனுக்கு கட்டச் சொல்லிறியோ"

***

எத்தனையோ வருடங்களுக்குப் பின்பு அம்மாவின் வார்த்தைகள் என் காதுகளில் கேட்டுக் கொண்டு இருக்கிறது.

சிவச்செல்வன் - மல்ரிட்டா வயிற்றில் குழந்தையைச் சுமந்தபடி, "இன்பத்திலும் துன்பத்திலும் நாம் இருவரும் ஒருவருக்கொருவர் துணையாக இருப்போம் என இந்த திருச்சபை முன்னிலையில் உறுதி அளிக்கின்றோம்"- பாதிரியால் சொன்னவற்றை அவர்கள் உறுதிப்படுத்துகின்றார்கள்.

எனக்கு பேரனின் திருமணத்தில் மிகுதி நடந்த எதிலும் முற்றாக பங்கு பெறமுடியாது சரசுவின் நினைப்பு வந்து குழப்பிக் கொண்டு இருந்தது.

பின்பு என்ன நடந்தது என்று ஊருக்கே தெரியும்.

எங்கள் வீட்டுப் பணமும் சமரசமும் மிரட்டலும் சரசுவை கொடிகாமத்தில் யாரோ ஒரு தோட்டக்காரக்கு சோறு கொடுத்து சேர்த்து விடக் காரணமாயிருந்தது.

கதிராமனும் விசாலமும் கொடிகாமத்துடன் போய் விட்டார்கள்.

எனக்கு ஒரு மகனோ... மகளோ... என் மூத்தவளை விட **14** அல்லது **15** வயது வித்தியாசத்தில் எப்படி இருக்கின்றானோ? அல்லது எப்படி இருக்கின்றாளோ??



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல்

ஈழத்துப் போராட்ட காலங்களில் ஈழப்போராட்ட உணர்வு மிக்க பல படைப்புகளை தந்தவர் சந்திரா தனபாலசிங்கம். இதுவரையில் சில மனிதர்கள், உருப்பெறும் உணர்வுகள், சத்திய தரிசனம், வைரப்பனைமரம், பிறந்து விட்ட புதுயுகத்தில் ஆகிய 5 நூல்களை வெளியிட்டுள்ளார்.

## சந்திரா தனபாலசிங்கம்



சந்திப்பு : பரணீ

**பரணீ:**
**பாடசாலைக்காலத்திலேயே சிறுகதை எழுதத் தொடங்கிய உங்களை எழுதத் தூண்டிய பின்னணி பற்றி குறிப்பிடு வீர்களா?**

**சந்திரா தனபாலசிங்கம்:**
பாடசாலைக் காலத்திலேயே சிறுகதை எழுதத் தொடங்கிய எனது பின்னணி பற்றிக் கேட்டிருக்கிறீர்கள். பாலர் பருவத்திலேயே சிறுகதை எழுதத் தொடங்கிய எனது பின்னணி என்ன என்பது எனக்கோ தெரியாத தொரு விடயமாகும். இயல்பாகவே எனக்குள் இருந்த ஒரு உந்துசக்திதான் அதற்கான காரணம் என நம்பு கின்றேன். வளர்ந்து வரும் சமயத்தில் வல்லவர்கள் தாமே எனப்படுவோரால் நல்லவர்கள் துன்புறுத்தப் பட்ட நிகழ்வுகளும், சமூக ஏற்றத்தாழ்வு நிலைகளும் என்னை எழுதத் தூண்டியது எனலாம். மாவோயிசம், லெனினிசம் என்று எந்தத் கம்யூனிசத்தையும் கற்றுத்தேறாத நிலையில் நான் அன்று எழுதிய "பிறந்து விட்ட யுகத்தில்" என்னும் சிறுகதை ஓர் சிறந்த சமத்துவக் கொள்கையுடைய கதையாக அமைந் திருந்தது. ஒரு பதின்ம வயதுகளேயான சிறுமியால் இப்படி ஒரு கதையை எழுத முடியுமா என்று இப்போது நானே என்னை வியந்து பார்க்கிறேன். இக்கதை அப்போது வீரகேசரி வார வெளியீட்டில் நான் எழுதி நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் கழித்தே வெளி வந்தது.

**பரணீ:**
**உங்கள் எழுத்துப் பணியின் இலக்குப் பற்றிக் கூறுங்கள்...**

**சந்திரா தனபாலசிங்கம்:**
ஆரம்ப காலத்தில் எந்த விதமான இலக்கோ அல்லது நோக்கோ என்னிடம் இருக்கவில்லை. வெறும் மன உணர்வுகளின் வெளிப்பாடுகளாகவே எனது எழுத்துக் கள் வெளிவந்து கொண்டிருந்தன. நன்றாகப் படிக்க வேண்டும், ஒரு மருத்துவத்தாதியாக பயிற்சி பெற வேண்டும், நல்லதொரு வைத்தியசாலையில் பணிபுரிய வேண்டும், நோயாளர்களை அன்புடன் பராமரிக்க வேண்டும் என்ற எனது கனவுகள் கலைக்கப்பட்டபோது, நான் எழுதிய சிறுகதைகள் "காலங்கள் மாறும்போது" தனியொரு பாத்திரம் பேசுவதாக அமைந்த அக்கதை தினகரன் வார மஞ்சரியில் வெளிவந்த சமயம் மிகப் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

ஆனால் 1987 ம் ஆண்டில் நான் முதல் யுத்தத்தைச் சந்தித்த போது தான் அதற்கு எதிரான ஆயுதமாக என் எழுது கோலைக் கையில் எடுத்தேன். 2007ம் ஆண்டுவரை எனது எழுதும் போராட்டம் மிகத் தீவிரமாக இருந்தது. எனது போர்க்கால எழுத்துக் கள் அவை. எனது சொந்த நலன் சார்ந்த விடயங்களைக் கைவிட்டு தேசநலன் சார்ந்த விடயத்துக்காகவே எழுதிக் கொண்டிருந்தேன். அதில் வெற்றியும் பெற்றேன்.

**பரணீ:**
**உங்கள் எழுத்துத் துறை ஈடுபாட்டுக்கு ஊக்கமளித்தவர்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்...**

**சந்திரா தனபாலசிங்கம்:**
"எதற்கும் அஞ்ச வேண்டாம். மனதில் தோன்றுவதை பயமின்றி எழுதலாம். நான் இருக்கிறேன் கூடவே..." என்று எனக்கும் என் பேனாவுக்கும் சர்வ சுதந்திரம் தந்தவர் என் கணவர். தமக்குக் கட்டுப்பட மாட்டேன் எனத்தெரிந்தும் எனது எழுத்துக்களால் கவரப்பட்டு எனக்கு முழு ஆதரவு தந்தவர்கள் அன்றைய போராட்ட நாயகர்களான தமிழீழ விடுதலைப்புலிகள். எமது "புலிகளின் குரல்" வானொலியில் எனக்கும் ஓர் இடம் தந்தார்கள். தொண்ணூறுகளில் எந்தத் தமிழ்ப் பத்திரிகையிலும் அவர்களின் அநுமதியின்றி எந்தவித மான எழுத்துக்களும் வெளிவரமுடியாது. நான் நிறைய எழுதி வெளி வந்த காலங்கள் அவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரணீ:**
**ஓர் எழுத்தாளருக்கு அரசியல்தளம் அவசியம் என்று கருதுகிறீர்களா?**

**சந்திரா தனபாலசிங்கம்:**
ஒரு எழுத்தாளருக்கு பொதுநலம் தான் அவசியம் என்று நான் கருதுகிறேன். ஆயினும் அரசியலை விட்டு விலகி நின்று எழுதும் எந்த எழுத்தாளராலும் எதையும் பெரிதாக சாதிக்க முடியாது. சமகால நாட்டு நிலவரங்களை விடுத்து வெறும் கற்பனை கலந்த பொய்களை மட்டும் எழுதுவதால் என்ன பயன் கிட்டும் எனச் சொல்லுங்கள் பார்ப்போம்.

**பரணீ:**
**நீங்கள் எழுத ஆரம்பித்த காலத்தில் உங்கள் மனதை நெருடிய நிகழ்வு இருப்பின் அது பற்றிக் கூறுங்கள்?**

**சந்திரா தனபாலசிங்கம்:**
ஏற்கனவே "காலங்கள் மாறும் போது" என்னும் எனது ஆரம்ப கால சிறுகதையைப் பற்றி சொல்லியிருக்கிறேன். அக்கதை பற்றியதான ஒரு நிகழ்வு இப்போதும் என் மனதைத் தொட்டுத் தொடர்கிறது. அது எப்படியென்றால், அக்கதை வெளிவந்த சமயத்தில் என் அண்ணன் வி.என். மதியழகன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அப்போது மிகச் சிறந்த விமர்சகரான கே.எஸ். சிவகுமாரன் என்னும் கல்விப் பெருந்தகையாளரும் அங்கிருந்தார். ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நூலகத்தில் அவர் இருந்து கொண்டு தினகரனில் வெளி வந்திருந்த எனது கதையை வாசித்துக் கொண்டிருக் கிறார். என் அண்ணன் அங்கு போயிருக்கிறார். "மதி இங்கே வாரும். ஒரு புதிய பெண் எழுத்தாளர் கதை ஒன்று எழுதியுள்ளார். இதை ஒரு தடவை படித்துப் பாரும்" என்று சொல்லி பத்திரிகையை அண்ணனிடம் கொடுத்திருக்கிறார். அண்ணனோ சத்தமில்லாமல் அக்கதையைப் படித்துவிட்டு, "எதற்காக என்னைப் படிக்கச் சொன்னீர்கள்?" எனக் கேட்டிருக்கிறார். "ஒரு புதிய எழுத்தாளர். எப்படி இப்படி எழுதினார்?" என்று சொல்லிவிட்டு, அக்கதையை அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்து அலசி ஆராய்ந்து, விதந்து விமர்சனம் செய்திருக்கிறார். அண்ணனுக்கோ ஒரே பெருமிதம். "சந்திராலட்சுமி நாகநாதன். இவள் என் தங்கச்சியே தான்!" என்று சொல்லியுள்ளார். சிவகுமாரனோ திகைத்துப் போய் நின்றிருக்கிறார். இவற்றையெல்லாம் ஒரு விபரமான கடிதமாக எழுதி அப்போதே என் அண்ணன் எனக்கு அனுப்பியிருந்தார்.

**பரணீ:**
**நீங்கள் எழுதி வெளியீடு செய்த நூல்களை அவற்றின் வெளியீட்டுப் பின்னணியோடு குறிப்பிடுங்கள்...**

**சந்திரா தனபாலசிங்கம்:**
நான் முதன் முதலாக வெளியிட்ட நூல் "சில மனிதர்கள்" 1994 ல் இச்சிறுகதைத் தொகுதி கொக்குவில் இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் வைத்து வெளியீடு செய்யப்பட்டது. தமிழீழ விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் அநுசரணையுடன் இந்நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. எழுத்தாளர் அ.யேசுராசா அவர்களால் இப்புத்தகம் வடிவமைக்கப்பட்டு, யாழ்ப்பாணம் மாறன் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டிருந்தது. கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கினார். அனைத்துலக மகளிர் தின வெளியீடாக வெளிவந்த இந்நூலுக்கான வாழ்த்துரையை அப்போதைய மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திய லிங்கம் அவர்கள் யாழ். இலக்கிய வட்டம் சார்பில் தந்திருந்தார். விழாவின் முடிவில் எனது ஏற்புரை இடம் பெற்றது. கம்பன் கழக ஜெயராஜ் அவர்களின் பட்டி மன்றங்கள் ஒரு கேள்விக்குறியாக இருந்த காலம் அது. அதனால் எனது ஏற்புரையின் முடிவில் நான் பெண்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தேன். "இராமரால் தீக்குளிக்கச் செய்த பின்னாலும் அவருடன் சேர்ந்து வாழச்சென்ற சீதையாக வேண்டாம், ஒரு கோவலனுக்காக மதுரை மாநகரையே தீ மூட்டி எரித்த கண்ணகியாக வேண்டாம், ஐவருக்கு மனைவியாக வாழ்ந்த பாஞ்சாலியாகவும் வேண்டாம். நாம் பிரபாகரன் காலத்துப் பெண்களாவோம்!" என்பதுதான் அந்த வேண்டுகோளாகும். அந்த உரையை தவறாகப் புரிந்து கொண்ட சிலர் "நீங்கள் பெண் போராளியாகப் போகிறீர்களா?" எனக் கேட்டார்கள். அதற்கு நான் "ஏற்கனவே நான் ஒரு பெண் போராளிதான் ஆனால் பிற உயிர்களுக்கு தீங்கு செய்யும் எந்தவொரு கருவியையும் கண்ணால் பார்க்கவும் விரும்பாத பெண்போராளி" என்று சொன்னேன். இப்படியே நான் எழுதி வெளியிட்ட ஐந்து நூல்களுக்கும் பல பெரிய வெளியீட்டுப் பின்னணிகள் உண்டு. அவற்றை பிறிதொரு சந்தர்ப்பத்தில் விரிவாகப் பார்ப்போம்.

**பரணீ:**
**யதார்த்தப் படைப்புகளில் கற்பனையையும் கலத்தல் எவ்வளவு தூரம் இடம்பெறலாம்?**

**சந்திரா தனபாலசிங்கம்:**
யதார்த்தப் படைப்பில் கற்பனையும் கலத்தல் பற்றிக் கேட்டிருக்கிறீர்கள். கலக்கலாம். எனது துறை சிறுகதை என்பதால் அதுபற்றியே தான் நான் பேச முடியும். ஒரு கதையை சரியான பாதையில் வழி நடத்திச் செல்லவும், அக்கதையை சரியான முறையில் முடித்து வைப்பதற்கும், அதற்கான வேண்டுமான அளவு கற்பனையை கலத்தல் செய்ய முடியும். தரமான வாசகர் ஒருவருக்கு யதார்த்தம் எது? கற்பனை எது? என்பதனை தரம் பிரித்துப் பார்க்கும் திறன் நிச்சயம் இருக்கும்.

**பரணீ:**
**இன்றைய இளம் பெண் எழுத்தாளரின் படைப்புகளின் போக்கிலுள்ள குறிப்பான அம்சங்கள் யாவை?**

**சந்திரா தனபாலசிங்கம்:**
இன்றைய இளம் எழுத்தாளர்களைப் பற்றியோ, அவர்களின் படைப்புகள் பற்றியோ நான் அதிகம் அறிந்தவளல்ல. புதினப் பத்திரிகைகளின் முக்கிய செய்திகளை தொலைக்காட்சியின் பத்திரிகைச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகள் நிகழ்ச்சியில் பார்த்து விடுகிறேன். இணையத்தின் தொடர்புகளும் என்னிடம் இல்லை. ஒரு கைபேசியில் குறுஞ்செய்தி அனுப்புவது பற்றிக்கூட அறிந்திருக்கும் ஆர்வம் என்னிடம் இல்லை. ஓய்வுக்கால அமைதியையே நான் விரும்பி நிற்கிறேன். ரஜினியின் அன்மீக அரசியல் போலல்லாது உண்மையாகவே ஆன்மீகக் குடும்ப வாழ்வினை வாழ்ந்திருக்க எண்ணுகிறேன். தனிமை எனக்கு இனிமையைத் தருகின்றது. இதுவரை நான் அநுபவித்த இறையற்புதங்கள் என்னை மெய் சிலிர்க்க வைக்கின்றது. நான் பயணித்து முடித்த எழுத்துக்களமானது எந்தவொரு பெண் எழுத்தாளருக்கும் இதுவரை கிடைத்திருக்கவில்லை; இனிமேல் கிடைக்கப் போவதுமில்லை என்பது தான் எனது தாழ்மையான அபிப்பிராயமாகும்.

**பரணீ:**

**"பெண்களின் வலிகளை எங்கள் கவிதைகளில் வெளிப் படுத்துகிறோம்" என்று கூறிக் கொண்டு "உடலை எழுதும்" பெண்ணிய எழுத்தாளர்களுக்கு என்ன கூற விரும்பு கிறீர்கள்?**

**சந்திரா தனபாலசிங்கம்:**

எதையாவது எழுதிப் பெயர் பெற வேண்டும் என்பதற்காக எதையும் எழுதி விடலாம் எனப் பெண்கள் எண்ணலாகாது. பெண்ணிய ஓலங்கள் என்பது பெண் இனத்தையே அதாவது தன் இனத்தையே தான் அவமதிக்கும் செயல் என்பது தான் எனது எண்ணக் கருத்தாகும். அடக்கியாள நினைக்கும் ஆண்வர்க்கத் தினரை அல்லது ஆணாதிக்க வாதிகளை எதிர்த்து தலை நிமிர்ந்து நிற்பதற்கு இவ்வுலகில் எத்தனையோ வழிகள் பெண்களுக்குண்டு. அதற்காக உடலை எழுத வேண்டிய தேவை எதுவும் பெண்ணுக்கில்லை. அப்படி எழுதுவது என்பது பெண் என்பவள் ஒரு போகப் பொருள் அல்லது மோகப்பொருள் என்பதை தாமாகவே ஒப்புக்கொண்டு விடுவதற்கொப்பானது. பெண்களின் வலிகளை எழுதுவதை விட பெண்களை வானுயரச் செய்யும் வழிகளை எழுதுவதே கவிதைக்கு பெருமை.

**பரணீ:**

**சிறுகதை தவிர்ந்த துறைகளில் நீங்கள் அதிக ஆர்வம் கொள்ளாமைக்குக் க ாரணம் யாது?**

**சந்திரா தனபாலசிங்கம்:**

எனது கருத்துக்களை மிகத்துல்லியமாக எடுத்தியம்ப முடிவது சிறுகதையின் மூலமாகத்தான். அதனால் தான் வேறு துறைகளில் நான் அதிகமாக ஆர்வம் கொள்ளவில்லை. ஆயினும் நாடகம், சித்திரம், இசைச்சித்திரம், கவிதை, கட்டுரை போன்ற பல்வேறு துறைகளிலும் எனது பங்களிப்பைச் செய்துள்ளேன். குறிப்பாக வானொலிகளில் தான் இவை ஒலிபரப்பாகி யுள்ளன. மௌன மொழி என்று ஒரு பகுதி குறிப்பிட்ட காலம் சஞ்சீவி பத்திரிகையில் வெளிவந்து கொண்டிருந்தது. இப்பகுதியின் தொடக்கத்திலிருந்து முடிவு காலம் வரை நான் சிறுகவிதைகள் மூலமாக என் கருத்துக்களை வெளியிட்டு வந்திருக்கிறேன்.

**ஒரு வெண்புறாவின் வருகைக்காக**
**விழி திறந்து காத்திருந்தோம்**
**விலங்குகளின் பிடியில் இன்று**
**வெண்புறாவும் பெண்புறாவும்**

இது எனது முதலாவது மௌன மொழி.

**அடுத்தவர் மனம் நோகுமென்று**
**அன்பு மலர்களால் வருடும் - என்**
**இதயமதைச் சிலுவையேற்றி**
**ஆணி கொண்டு அறைந்தனரே**
**சில மனிதர்கள்!**

இது எனது நிறைவான மௌனமொழி.. நான் பாலர் ஆசிரியையாகப் பயிற்சி பெற்ற காரணத்தால் பாலர் நலன் சார்ந்த எனது கட்டுரைகளும் சஞ்சீவியில் தொடராக வெளிவந்திருக்கின்றன.

**பரணீ:**

**ஈழத்துப் படைப்பாளிகளின் சிறுகதை எழுத்து நடையைப் பொறுத்தவரை உங்களைக் கவர்ந்த எழுத்துநடை எவருடையது?**

**சந்திரா தனபாலசிங்கம்:**

ஈழத்துப் படைப்பாளிகளின் சிறுகதை எழுத்து நடையைப் பொறுத்தவரை சந்திரா தனபாலசிங்கத்தை அதாவது என்னை எனக்கு நிரம்பவும் பிடிக்கும். "நடந்தாய் வாழி வழுக்கியாறு" எழுதிய செங்கை ஆழியானைப் பிடிக்கும். அதுபோலவே தான் "திறந்தாய் வாழி" என்ற தலைப்பில் நான் ஒரு கதை எழுதி யிருந்தேன். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்பு சமாதானமாகவே ஏ/9 பாதை திறக்கப்பட்ட போது என்னால் எழுதப்பட்ட சிறுகதை அது. அக்கதை 2002 ல் வலம்புரியின் சங்கு நாதம் பத்திரிகையில் வெளி வந்திருந்தது. அக்கதை கூறும் உண்மைச்செய்தி என்ன என்பதை எங்கள் தலைவர் உணர்ந்திருப்பாரேயானால் இலங்கையில் இறுதி யுத்தம் என்ற ஒன்று நடந்திருக் காதே என்ற ஆதங்கம் இப்போதும் எனக்குண்டு.


**பரணீ :**

**தொண்ணூறுகளில் எழுதிய போதுள்ள ஆர்வமும் வேகமும் இலட்சியமும் இன்றும் தொடர்கின்றதா?**

**சந்திரா தனபாலசிங்கம்:**

தொண்ணூறுகளில் எழுதிய போதுள்ள ஆர்வமும், இலட்சியமும் இன்றும் இருக்கிறது. அண்மையில் கூட தினக்குரல் வாரமஞ்சரியில் "அம்மா உன் அம்மி" என்னும் எனது சிறுகதை வெளிவந்திருக்கிறது. ஆனால் வேகம் மட்டுப்பட்டிருக்கிறது. இதுவரையிலும் நான் எழுதிய எழுத்துக்களால் நான் சிறந்த பலனையும், மிகுந்த மன நிறைவையும் பெற்றிருக்கிறேன். 1953 ல் பிறந்த எனக்கு வரும் மே பதினாறில் வயது அறுபத்து நான்கு முடியப்போகிறது. இனிவரும் பெண் எழுத்தாளர்களிடம் என் பணி ஒப்படைக்கப்படுகிறது. என் எழுத்துக்கான கௌரவிப்பாக தமிழினத்துக்கான ஒரு நல்ல தீர்வை தந்து அருள் செய்ய வேண்டும் என இறைவனிடம் வேண்டி நிற்கிறேன். நான் உயிர் வாழ்ந்திருக்கும் காலத்திலேயே அந்த நல்ல காரியம் நடந்து விட வேண்டும். அவனின்றி ஓர் அணுவும் அசையாது. என் பிரார்த்தனையை நிச்சயம் இறைவன் நிறைவேற்றி வைப்பார் என்ற நம்பிக்கை எனக்குண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எந்திரசாலிகளை (Robots)

# காதலித்த ஐசாக் அசிமோவ்

■ இ.சு.முரளிதரன்


மனிதக்குழுமம் கதைகளால் நிரம்பியது. ஒவ்வொரு அனுபவத்தையும் கதைகளினூடாகத் தொடரும் சந்ததிக்குக் கடத்தியது. கதைகள் சிந்தனைத்தளத்தினை அகலிக்கும் வல்லமைமிகுந்தன. தஸ்தயேவஸ்கி எழுதிய கதைகளின் ஆழ்புலத்தில் புதைந்திருந்த வினாக்களுக்கு ஐயன்ரீன் தேடிய விடைகளே அவரின் விஞ்ஞானக் கோட்பாடுகளாக அவதரித்தன என்பர். இந்தவகையில் புனைவுகளில் பதுங்கியிருக்கும் அறிவியல் தனித்த பெறுமானத்தை கொண்டமைகின்றது. எனவே தான் அறிவியற் புனைகதையாளிகள் வியந்து நோக்கப்படுகின்றனர். றொபேர்ட் ஹெயின்லீன் (Robert Heinlein) ஐசாக் அசிமோவ் (isac Asimov) ஆதர் சி.கிளார்க்(Arthur C Clark) என்ற மூவருமே அறிவியற் புனைகதை உலகின் மேதாவளி எனக் கொண்டாடப்படுகின்றனர். எனினும் தமிழிலக்கியப் பரப்பிரே இத்தகைய புனைவுகள் அருகியே காணப்படுகின்றன. சுஜாதாவின் கதைகளில் சிலவும், எம்.ஜி.சுரேஷ் எழுதிய 37 மற்றும் ஜெயமோகனின் விசும்பு என்பனவும் தமிழிலே கவனக் குவிப்பினைப் பெற்ற படைப்புக் களாகும்.

எந்திரசாலிகளுக்கும் மனிதர்களுக்கும் இடையேயான உறவின் அற்புத தருணங்களைப் புனைவுத் தளத்திலே நயாதீதமாக வெளிப்படுத்தியவர் ஐசாக் அசிமோவ்! இவர் சோவியத் ரஷ்யாவிலே பிறந்தாலும் (1920) நான்கு வயதிலேயே வயதிலேயே அமெரிக்காவிலே குடியேறி விட்டதால், அமெரிக்க எழுத்தாளராகவே இனங்காணப்படுகின்றார். கொலம்பியா பல்கலைக் கழகத்தில் இரசாயனவியலிலே கலாநிதிப் பட்டம் பெற்றவர். எந்திரசாலிகளை நடுவனாகக் கொண்ட பெருவாரியான பிரதிகளை உருவாக்கியுள்ளார். இவரது 19 வதுவயதில் Night fall என்ற தனது முதல் அறிவியற் கதையை எழுதியுள்ளார்.

அசிமோவின் கதைகளில் எந்திரசாலிகளின் இயங்கியல் உருவாக்குநர்களுக்கு முரணாக அமையக் கூடாது என்னும் அணுகுமுறை அடிநாதமா இழையோடுவதைக் காணலாம். இவரது புனைவுகளில் புலமையின் நீட்சியாகத் தென்படும் எந்திரசாலிகள் மனிதர்கள் மீது வன்மத்தைப் பிரயோகிக்காது, ஆணைகளுக்கு அடிபணிந்து, தமது சுயபாதுகாப்பிலும் அக்கறை கொண்டு காணப்படுவர். விதிமீறும் தருணங்களை அச்சத்தோடு அணுகி நேர்த்தியான நிகழ்ச்சி நிரலுக்குள் உள் வாங்கும் தன்மையையும் அவதானிக்கலாம். மனிதர்களுக்கும் எந்திரசாலிகளுக்கும் இடையேயான உறவுகளில் முகிழ்க்கும் நுண் முரண்களை விடுப்பார்வ முடிச்சுக் களாக்கி, சுவாரஸ்யத்தோடு அவிழ்க்கும் கதை சொல்லல் முறையினை முன்னெடுத்துள்ளார். "robotics" என்ற வார்த்தையே இவரால் தான் அறிமுகப் படுத்தப்படுள்ளது.

ஒவ்வொரு முரண்களையும் நெருங்கி உரிய தீர்வு காணும் பொறிமுறையில் கற்பனைக்கும் தவிர்க்க முடியாத இடமுண்டு. கற்பனையானது நடப்பியற் செயற்றிட்டங்களுக்குப் பின்புலமாகவும் அமைகின்றது. எனவே தான் அசிமோவ் போன்ற படைப்பாளிகளின் கதைகள் அறிவியல் உலகிலே மிகச்சிறந்த அர்த்தத்தளத்தினைப் பெறுகின்றன.

"First law" என்ற சிறுகதையானது சனிக்கிரகத்தின் துணைக்கோள் ஒன்றிலே நிகழ்கின்றது. சுரங்கவேலைக்காக அனுப்பப்படும் மூன்று எந்திரசாலிகளில் பெண் எந்திரசாலி ஒன்று காணாமற் போய் விடுகின்றது. தேடிச்செல்லும் விஞ்ஞானி பனிப்புயலில் சிக்குகின்றார். அந் நேரம் குட்டி எந்திரசாலியொன்றைக் கண்டு, அதனால் ஆபத்துநேரலாம் என அதைக் கொல்வதற்காகச் சுடுகணலை எடுக்கின்றார். காணாமற் போன பெண் எந்திரசாலி திடீரெனத் தோன்றித் தடுக்கின்றது. குட்டி எந்திரசாலியை அழித்து விட்டுத் தன்னைக் காப்பாற்றுமாறு கட்டளையிடுகின்றார். ஆனால் பெண் எந்திர சாலியோ குட்டி எந்திரசாலியைக் காப்பாற்றி விட்டு அவரை புயலிலே தவிக்க விட்டு மறைந்து விடுகின்றது. கதையின் முடிவிலே முடிச்சு அவிழ்க்கப்படும் போது, எந்திரசாலி களின் உருவாக்கம் மனித இனத்திற்கு நிச்சயமற்ற வெளியை உண்டாக்கி விடலாம் என்ற நூதனமான செய்தி புலப்படுகின்றது. பெண் எந்திரசாலி கர்ப்பமான காரணத்தினாலேயே மறைந்து வாழ்ந்தது. குட்டி எந்திர சாலியைப்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றெடுத்தது. தாயன்பின் காரணமாக மனிதனின் கட்டளையை மீறியதாக கதை நிறைவுறுகிறது.

எந்திரநீட்சியின் ஏக பிரதிநிதியான எந்திரசாலிகள் மனித அறிவினை இரண்டாம் நிலைக்குத் தள்ளி விடக்கூடிய ஆபத்தினை பிறிதொரு கதையிலே அழகாகப் பதிவு செய்துள்ளார். விஞ்ஞானி ஒருவர் அனைத்து வகையான அறிவும் உள்ளடக்கிய எந்திரசாலியொன்றை வடிவமைக்கிறார் அதன் உதவியோடு தனக்குப் பொருத்தமான பெண்ணொருத்தியினை தேர்ந்தெடுக்க முயல்கிறார். உலகிலுள்ள அனைத்துப் பெண்களிலும் பேரழகிகள் தேர்வாகி விஞ்ஞானியின் நிறுவனத்திலேயே பணிக்கு அமர்த்தப்படுகின்றனர். எனினும் அவரது உணர்வுகளின் அலை வரிசையோடு அவர்கள் எவருமே பொருந்திப்போகவில்லை. இறுதியில் தனதுஎண்ணம் ஆசைகள் உணர்வுகள் அனைத்தையும் நிகழ்ச்சித் திட்டமாக்கி எந்திரசாலியிடம் மடைமாற்றுகிறார். எந்திரசாலி விஞ்ஞானிக்குப் பொருத்தமானவளைத் தேர்வு செய்து விடுகிறது. எனினும் விஞ்ஞானி நிர்வாக துஷ்பிரயோகத்திற்காகக் கைதாகி சிறையிலடைக்கப்படுகின்றார். "நாளை பெப்ரவரி 14 காதலர் தினம்! அவள் வருவாள் எங்கள் இருவரது அலை வரிசையும் அற்புதமாகப் பொருந்தி விட்டது. நான் அவளிடம் சொல்வேன் நீயே எனக்குப பொருத்தமானவள்" என எந்திர சாலி தனக்குத் தானே கூறும் சொல்லாடலோடு மாறுபட்ட முடிச்சவிழ்ப்பினை நிகழ்த்தியவாறு கதை நிறைவு பெறுகின்றது.

அறிவியல் அபத்தமொன்றின் நிகழ்தகவினை அசிமோவ் அலாதியாக வெளிப்படுத்தியுள்ளார். சாத்தியமற்ற மீப்புனைவென எதனையும் நிராகரித்துவிட முடியாது. மனித வாழ்வின் நிகழ்ச்சி நிரல் எந்திரசாலிகளிடம் கையளிக்கப்படும் காலத்தில் அனைத்தும் சாத்தியமாகலாம். கற்பனையின் கதவுகளை அகலத் திறக்கும் இக்கதையானது உள்ளீட்டில் மட்டுமல்லாது கதை நகர்வின் அடுக்கமைவிலும் அற்புதமான கட்டுமானத்தினைக் கொண்டமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எந்திரசாலியான நாய் ஒன்றின் மீது, நிலாவிலே வாழ்ந்து வரும் சிறுவன் கொள்ளும் அதீத அன்பின் வெளிப்பாட்டினை பிறிதொரு கதை பதிவு செய்துள்ளது. ("என் இனிய இந்திரா" எழுத சுஜாதாவிற்கு இத்தகைய கதைகளே அருட்டுணர்வினை வழங்கியிருக்கலாம்!) எந்திரசாலி நாயோடு சிறுவன் விளையாடுவதால் பெற்றோர் பூமியிலிருந்து நிஜ நாய் ஒன்றினை இறக்குமதி செய்கின்றனர். உயிரி ஒன்றின் விசுவாசத்தை, அன்பின் மேன்மையை உன்னத அனுபவத்தை மகனுக்கு உணர்த்த முயல்கின்றனர். சிறுவனோ எந்திரசாலி நாயோடு தான் கொண்ட தூய பிணைப்பினைத் தெளிவுபடுத்தி பெற்றோரின் மதியுரைகளை மறுதலிப்பதாகக் கதை நிறைவு பெறுகின்றது குழந்தையின் உள இயங்கியலுக்கு அமைவாக கதையை வடிவமைத்துள்ளார். தோற்றங்களை விலக்கி அன்பினை அவாவுகின்ற சிறுவனின் சொல்லாடல்கள் நயாதீதம் மிகுந்தவை. சிறுவன் எந்திரசாலி நாயை அணைத்துக் கொள்வதும் ஸ்பரிசத்தின் பரவகத்தினை நாய் உணர்வதும் அற்புதமான அனுபவத்தினைத் தொற்றச் செய்கின்றது.

ஐசாக் அசிமோவ் எழுதிய நாவலான Bicentennial man திரை வடிவம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. வீட்டுவேலைகளைச் செய்வதற்காக விலைக்கு வாங்கப்படும் எந்திரசாலி திடீரென பன்முக ஆற்றல் பெற்று விடுகிறது. உரிமையாளர் அதற்குமனித உணர்வுகளைக் கற்றுக்கொடுக்கிறார். உரிமையாளரின் இளைய மகளோடு அன்போடு பழகுகிறது. விடுதலை உணர்வால் வீட்டை விட்டு வெளியேறுகிறது. மனிதனாகவே தன்னை மாற்றிக் கொள்கிறது காலம் உருண்டோடுகிறது. உரிமையாளரின் இளையமகள் முதுமையடைந்து மரணப்படுக்கையிலே இருக்கிறாள். எந்திரசாலி அவளைச் சந்திக்க வருகிறது. அச்சுஅசலாக அவள் போலவே இருக்கும் பேர்த்தியை கண்டு வியக்கிறது. இருவருக்கும் காதல் மலர்கிறது. அவளோடு வாழ்வைத் தொடங்குகிறது. பிரபஞ்ச விஞ்ஞான மன்றத்திடம் மனித அங்கீகாரத்திற்காக மனுச்செய்து, முதுமையை யாசித்து இறுதியில் மரணமடைகின்றது. பிரபல நடிகரான Robin Williams நடிப்பிலே வெளிவந்த Bicentennial man பெருமளவில் வர வேற்பினைப் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அசிமோவின் கதையை



மையமாகக் கொண்டு வெளிவந்த மற்றொரு திரைப்படம் I robot ஆகும். பிரபல நடிகரான Will Smith நடிப்பிலே வெளியானது. எந்திரசாலி வாரியத்தின் உட்கட்டுமானங்களை அகலப் பார்வையோடு பதிவு செய்துள்ளது. சதித்திட்டமொன்றின் மூடுமர்மத்தினைப் பின்புலமாகக் கொண்டு கதை வடிவமைக்கப்பட்டுள்ளது. எந்திரசாலிகளின் இயங்கியலை அதிர்வுகளோடு பதிவாக்கியுள்ளது. அசிமோவிற்கு முன்னரும் பின்னரும் அறிவியற் புனைகதையாளிகள் பலர் தோன்றினர். ஆனாலும் உன்னத இடமொன்றினை இவரே எய்தினார் எனப் பல விமர்சகர்கள் கருத்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அறிவியற் புனைகதைகள், துப்பறியும் கதைகள், இலக்கிய விமர்சனங்கள், நகைச்சுவைகள், பைபிளை மையமாகக் கொண்ட குறிப்புக்கள் என 460 நூல்களை எழுதிப் பெருவாரிப் பிரதியாளியாக மிளிர்கின்றார். நுண்ணறிவுத்திறன் மிகுந்த எந்திர சாலிகளின் மனிதனை ஆளுகின்ற ஆபத்தான காலமொன்றைப் பற்றிய எச்சரிக்கையாக இவரது கதைகளைக் கருதலாம். மீவேக நடையும், சிந்தனையடுக்குகளில் அதிர்வினை ஏற்படுத்தும் கதைக்கருவும், மெய் சிலிர்க்க வைக்கும் பாங்கும் அசிமோவை புனைகதையுலகிலே தனித்துத் தெரியச் செய்கின்றன. "If like many readers, you become an Asimov fan, you'll have an seemingly endless variety of material to feed your interest" என்று புகழ் பெற்ற விமர்சகர் Eric கூறுவது சாசுவத மாக உண்மை என்பதை அவரது கதைகளை கொண்டாட்ட உணர்வோடு படிப்பவர்கள் நன்கு புரிந்துகொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## O.Henry (1862.09.11-1910.06.05)




வில்லியம் சிட்னி போர்டர் என்ற இயற்பெயர் கொண்ட ஓலிவர் ஹென்றி (ஓ. ஹென்றி) அமெரிக்காவின் வட கரோலினாவில் செப்டெம்பர் 11, 1862 இல் பிறந்து நியுயோர்க்கில் ஜுன் 05, 1910 இல் தன் நாற்பத்தேழாம் வயதில் இறந்த அமெரிக்க எழுத்தாளராவார். ஆச்சர்யம் தருகின்ற, அதிர்வூட்டும் முடிவுகளை மறைத்து வைத்திருக்கிற அற்புதமான சிறுகதைகளுக்குப் பெயர்போனவர். "Cabbages and Kings", "The Four Million" என்பன அவரது சிறுகதைத் தொகுப்புகளாகும். தந்தை அல்கெர்னோன் சிட்னி போர்டர் ஒரு வைத்தியராவார். மூன்று வயதில் கசநோய் காரணமாக தாய் இறக்க,பாட்டியின் வீட்டுக்கு தந்தையும் மகனும் நகர்ந்தனர். பாட்டி வீடு "ஆயிரத்தொரு இரவுகள்" போன்ற கதைகளை வாசிக்கின்ற வாய்ப்பை அவருக்கு வழங்கிற்று. அத்தை பதினைந்தாம் வயது வரை அவரது கல்வியில் ஊக்கத்தை நல்கியதில், 1879இல் ஒரு மருந்தகசாலையில் பணியாற்ற முடிந்தது. சுவாச நோய்கள் வாட்டின அவரை, சுவாசிக்கும் காற்றில் மாற்றம் கருதி 1882இல் டெக்ஸாஸ் நோக்கி நகர்ந்து, அங்கே ஸ்பானிய மொழி, ஜேர்மன் மொழி போன்றவற்றைக் கற்றுத் தேர்ந்தார். உடல்நிலை சற்றுத் தேறிவரவே, 1884இல் ஒஸ்டின் நகருக்கு நகர்ந்தார். பெற்றாரின் எதிர்ப்புக்கு மத்தியில் அத்தோல் எனும் பெண்ணை மணமுடித்த ஹென்றி, திருமணத்தின் பின்னர் இசையில் ஆர்வம் காட்டத் தொடங்கினார். மனைவியுடன் இசைப்பயணங்கள் மேற்கொண்டார். நில அளவையாளராகவும் சிறிது காலம் பணியாற்றினார். ஒரு மகன் பிறந்து இறப்பெய்தியதைத் தொடர்ந்து, ஒரு மகள் பிறக்க மகளுக்கு மாக்ரட் எனப் பெயர்சூட்டினார். தேசிய வங்கி ஒன்றில் எழுதுவினைஞராகப் பணியாற்றினார். பணக்கையாடல் குற்றச்சாட்டின் பின் அவர் கைதானபோது, மனைவி அத்தோல் மகள் மாக்ரட்டுடன் தாயின் வீட்டுக்கு நகர்ந்தார். சிறைச்சாலை வைத்தியசாலையில் மருந்தகராகப் பணியாற்றி வந்தார். தந்தை சிறை சென்றதை மகளுக்குச் சொல்லாமலேயே வளர்த்தார் தாய். சிறைக்காலம் முடிவுறுமுன்னர் மனைவி இறக்க, சிறையிலிருந்து வெளிவந்து சிறுவயதுத் தோழி சாராவை 1908 இல் மணந்தார் ஹென்றி. அவரது எழுத்து தொடர்ந்தது. 381 சிறுகதைகள் எழுதினார். நியுயோர்க் நோக்கிச் சென்றார். குடிகாரராக உலாவந்த அவரை சாரா கைவிட்டார். உடல் பிணி கண்டு 1910 இல் இறந்தார். மகள் மாக்ரட்டை அளவு கடந்து நேஸித்தார். தந்தையை அடியொற்றி மகளும் எழுத்தில் ஆர்வம் காட்டினார். 1927 இல் கசநோயால் மகள் இறக்க, தந்தை ஹென்றியின் புதைகுழியருகே அடக்கம் செய்யப்பட்டார் அவர்.

# After Twenty Years...

# இருபது வருஷங்களின் பிறகு...

ஆங்கிலத்தில் :- O.Henry

தமிழில்:- கெகிறாவ ஸுலைஹா



அந்தப் பொலிஸ் உத்தியோகத்தன் பாதைவழியே நடந்து கொண்டிருந்தான். அவன் ஆஜாபாகுவானவனாகவும், கம்பீரமானவனாயும் தெரிந்தான். இப்படித்தான் அவன் எப்போதும் நடப்பது வழமை. அவன் எப்படித் தெரிகிறான் என்பது பற்றி அவன் சிந்திப்பதெல்லாம் கிடையாது. அவனைப் பார்ப்பதற்காக பாதையில் சில மனிதர்கள் நின்றிருந்தார்கள். இரவு பத்து மணிதான் ஆகியிருந்தது. எனினும் கடும் குளிராக இருந்தது. மெல்லிய மழைத்தூறலுடன் கலந்த கடும் காற்றும் வீசியபடி இருந்தது.

அவன் நடந்து கொண்டிருந்த பாதையில் வீட்டுக் கதவுகளருகே அவை பாதுகாப்பாய் மூடப்பட்டிருக்கின்றனவா என்பதை நிச்சயப் படுத்திக் கொள்வதற்காய் அவன் அடிக்கொரு தரம் நின்றான். அவ்வப் போது பாதையின் இரு மருங்கிலும் அவன் பார்வையைச் செலுத்திக் கொண்டான். ஆமாம் அவன் ஒரு கவனம் மிக்க, கெட்டித்தனம் வாய்ந்த, அமைதி நிலைநாட்டத் திடம் கொண்ட ஒரு பொலிஸ் உத்தியோகத்தன் ஆவான்.

அந்நகரப் பகுதியில் வாழும் குடியிருப்பாளர்கள் நேர காலத்துடன் தத்தமது இல்லங்களுக்குத் திரும்பியிருந்தார்கள். ஹோட்டல்களிலும், கடைகளிலும் மாத்திரம் ஆங்காங்கே மின்விளக்குகள் வெளிச்சம் காட்டிக் கொண்டிருந்தன. ஆயினும், பெரும்பாலான வியாபாரத்தளங்கள் ஏறக்குறைய ஒரு மணித்தியாலத்திற்கு முன்பே மூடப்பட்டிருந்தன.

திடீரென்று அப்பொலிஸ் உத்தியோகத்தன் இருள் கவிந்திருந்த ஒரு கடை வாசலண்டையில் ஒரு மனிதன் நின்றிருந்ததைக் கண்டு,தன் நடைவேகத்தைக் குறைத்தான். பொலிஸ் உத்தியோகத்தன் அவனை நோக்கிச் செல்லவே, அம்மனிதன் அவசரமாகப் பேசத் தொடங்கினான்.

"பிரச்சினையில்லை எல்லாம் சரி அலுவலரே, நான் ஒரு நண்பனுக்காய்க் காத்துக் கொண்டிருக்கிறேன்..." சொல்லி அவன் மேலும் தொடர்ந்தான்,"இருபது வருஷங்களுக்கு முன்னம் இதே இடத்தில் இன்றிரவு சந்தித்துக் கொள்வதாய் நாமிருவரும் ஒரு உடன்பாடு செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தோம். உங்களுக்கு இச்சேதி வியப்பாய் இருக்கக்கூடும். இன்னும் நீங்கள் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டுமாயின், நான் இது பற்றி உங்களுக்கு மேலும் விளக்கம் அளிக்கலாம். இருபது வருஷங்களுக்கு முன்னம் இங்கே இவ்விடத்தில் ஒரு உணவுச்சாலைதான் இருந்தது. இப்போது பாருங்கள் அது "ஜோ ப்ராடி" என்ற பெயரில் பெரிய உணவகமாகி இருப்பதை..."

"ஆமாம்... இந்தக் கடை ஐந்து வருஷமாய் இருக்கிறது இங்கே.." அந்தப் பொலிஸ் உத்தியோகத்தன் சொன்னான்.

கடையருகே நின்றிருந்த மனிதன் அகல முகம் கொண்டவன். பிரகாசமான கண்களையுடையவன். வலது கண்ணருகே சின்னதாய் ஒரு வெண்புள்ளி அடையாளம் இருந்தது அவனுக்கு. தன் கழுத்துப்பட்டியில் ஒரு பெரிய ஆபரணம் தரித்திருந்தான் அவன்.

"இருபது வருஷங்களுக்கு முன்னம், இதே இரவில் ஜிம்மி வெல்ஸ் என்ற பெயருடைய என் நண்பனுடன் இங்கே இரவுணவு உண்டேன். அகிலத்திலேயே அவன் போலுமொரு நல்ல நண்பன் கிடையாது எனக்கு... இங்கே நியுயோர்க்கில்தான் நாம் இருவரும் ஒன்றாக வளர்ந்தோம்... கிட்டத்தட்ட நாம் இருவரும் சகோதரர்கள் போல.. அப்போது எனக்குப் பதினெட்டு வயது.. ஜிம்மி வெல்ஸ்ஸுக்கு இருபது... அடுத்தநாள் நான் மேற்குப்பகுதிக்குப் பயணமானேன் பெரிய பணக்காரனாகும் கனவோடு தொழில் தேடி. பாருங்கள்.. ஜிம்மியை யாருமே நியுயோர்க்கை விட்டு அப்பால் நகர்த்த முடியாது. பூமியிலேயே வாழச் சிறந்த இடம் இது மட்டும்தான் என்பது அவன் நினைப்பு." அவன் சொன்னான்.

அவன் மேலும் தொடர்ந்தான்,"இருபது வருஷங்களில் நாம் மறுபடி சந்தித்துக் கொள்வதாய் அன்றிரவு பேசிக் கொண்டிருந்தோம். இருபது வருஷங்களின் பின் நாம் எவ்வகை மனிதர்களாய் இருப்போம் என்பதையும், நமக்கென எவ்வகை எதிர்காலம் காத்திருக்கிறது என்பதையும் அறிய ஆவல் கொண்டோம்."

"ரொம்ப சுவாரஸ்யமாய் இருக்கிறதே..." பொலிஸ் உத்தியோகத்தன் சொன்னான். "பெரியதொரு கால இடைவெளியல்லவா அது..? இடையே நீங்கள் மேற்கு நோக்கிப் போன பின்னர் உங்கள் நண்பரோடு ஒரு தொடர்பும் இருக்கவில்லையா உங்களுக்கு...? அவன் விசாரித்தான்.

"கொஞ்ச காலங்கள் இருவரும் மாறி மாறி மடல்கள் இட்டுக்கொண்டோம். பிறகு நிறுத்திக் கொண்டு விட்டோம். மேற்குலகம் ரொம்ப விசாலமானது பாருங்கள்.. நான் சுற்றித் திரிந்தேன். விரைந்து விரைந்து நான் நகர்ந்தேன். ஆனால் ஜிம்மி இங்குதான் இருப்பான். என்னை அவன் சந்திக்க முடியலாம். அவன் ஒரு நேர்மையான மனிதன். அவன் எதையும் மறந்திருக்க மாட்டான். இன்றிரவு இங்கே நிற்க நான் ஆயிரம் மைல்கள் தாண்டி வந்தேன். என் பழைய நண்பன் இங்கே சொன்னபடி வந்தால் மிக்க மகிழ்ச்சி கொள்வேன்."

ஒரு ஆபரணப்பெட்டியில் மூடியிருந்த கடிகாரத்தை வெளியே எடுத்து, நேரத்தைப் பார்த்துக் கொண்டான் நண்பனுக்காய்க் காத்திருந்த அம்மனிதன். "பத்து மணிக்கு இன்னும் மூன்று நிமிஷங்கள் உள்ளன.. அன்று இந்தக் கடைவாசலைத் தாண்டி நாம் இருவரும் பிரிந்து போகையில் சரியாகப் பத்து மணி..." அவன் சொன்னான்.

"நீங்கள் மேற்குலகில் வெற்றிவாகை சூடியவராக இருந்திருக்கலாம். இல்லையா..?" பொலிஸ் உத்தியோகத்தன் கேட்டான்.

"ஆம் நிச்சயமாக.. நான் செய்ததில் பாதிதான் ஜிம்மி செய்திருப்பான்.. எல்லாம் கொஞ்சம் மெல்லவே செய்பவன் அவன். என் வெற்றிகளுக்காக நான் நிறையப் போராடியிருக்கிறேன். நியுயோர்க், மனிதனுக்கு பெரிய மாற்றங்களை அறிமுகப்படுத்தும் இடமில்லை.. ஆனால் மேற்கிலே அப்படியில்லை எதைப் பெறவேண்டுமோ அதற்காக ஒருவன் கடும் போராட்டம் செய்ய வேண்டும்."

பொலிஸ் உத்தியோகத்தன் ஓரிரு அடிகள் நகர்ந்தான்.

"நான் போகிறேன்.." சொல்லி அவன் "உங்கள் நண்பர் வந்து விடுவார் என்று நான் நம்புகிறேன்...அதுசரி, அவர் பத்து மணிக்கு வரவில்லையென்றால்... நீங்கள் இங்கிருந்து போய்விடுவீர்களா..?" என்று கேட்டான்.

"இல்லையில்லை.. ஆகக்குறைந்தது அரை மணித்தியாலமாவது நான் ஜிம்மிக்காகக் காத்திருக்க வேண்டும். ஜிம்மி இப்பூமியில் உயிருடன் வாழ்ந்தால், அவன் அந் நேரத்துக்குள் வந்து விடுவான். நல்ல இரவாகட்டும் அலுவலரே... சென்றுவாருங்கள்.."

"உங்களுக்கும் நல்லபொழுதாய் இது அமையட்டும்..." பொலிஸ் உத்தியோகத்தன் மூடியிருக்கும் கதவுகளை அவதானித்தபடியே அவ்விடத்தை விட்டு நகர்ந்தான்.

மழை கொட்டி குளிர் அதிகரித்திருந்தது. பலத்த காற்றும் வீசத் தொடங்கியிருந்தது. மக்கள் சிலர் குளிரிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளும் பிரயத்தனத்தையும் செய்து கொண்டே வீதியில் அங்குமிங்கும் அவசரமாய் நகர்ந்து கொண்டிருந்தார்கள். ஆயிரம் மைல்கள் அளவில் தாண்டிப் பயணித்து வந்த அம்மனிதன் இருபது வருஷங்களுக்கு முன்னம் வருவதாய் சொல்லிப்போன நண்பனுக்காய் இன்னும் கடையருகே காத்திருந்தான். அப்படி ஒரு சந்திப்பு சர்வ நிச்சயமாய் நிகழும் என்பது இல்லை. ஆனாலும் அவன் காத்திருந்தான்.

கிட்டத்தட்ட இருபது நிமிடங்கள் அவன் காத்திருந்திருப்பான். நீண்ட மழையாடை அணிந்த ஒரு உயரமான மனிதன் பாதை வழியே விரைந்து வந்து கொண்டிருந்தான். காத்திருந்த மனிதனின் அருகே அவன் நேரடியாகவே போனான்.

"நீங்கள் பொப் தானே...?" ஐயம் கொண்ட தொனியில் அவன் கேட்டான்.

"நீ ஜிம்மி வெல்ஸ்தானே..." கதவருகே காத்திருந்தவன் மகிழ்ச்சியில் கூவியபடி கேட்டான்.

அங்கு வந்தவன் காத்திருந்தவனின் கைகளோடு தன் கரங்களைக் கோர்த்துக் கொண்டான். "நீ பொப் தான்... எனக்கு நிச்சயமாய் சொல்ல முடியும்.. உயிரோடு இருந்தால் நீ இங்கே வருவாய் என்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும்.. இருபது வருஷங்கள் நீண்ட காலம் தான்.. பழைய உணவுச்சாலை இப்போது இங்கே இல்லை பொப்.. அது இங்கே இருந்திருக்க வேண்டும்.. அதிலேயே இன்றிரவும் இரவுணவு சாப்பிட்டிருக்கலாம் நாம்.. மேற்குலகு உனக்கு எப்படி...? நலமாயிருந்தாயா...?"

"நான் கேட்ட எல்லாவற்றையும் எனக்கு அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கியது. நீ மாறி இருக்கின்றாய் ஜிம்மி. நீ இவ்வளவு உயரமாகி இருப்பாய் என்று நான் நினைக்கவே இல்லை.."

"ஹோ! இருபது வயதிற்கு பின் கொஞ்சம் நான் வளர்ந்திருக்கிறேன்..."

"நியுயோர்க் உனக்கு எல்லாவற்றையும் நன்றாக வழங்கிற்றா ஜிம்மி?"

"நல்லது. நான் நகர் காவல் அரச தொழிலில் இருந்தேன். வா, பொப் பழைய நினைவுகளை நீளமாய்ப் பேசிக் கொண்டே போகலாம். எனக்குத் தெரிந்த ஒரு இடத்திற்கு உன்னைக் கூட்டிச் செல்கிறேன்.."

பாதையில் அவர்கள் இருவரும் கைகோர்த்த படியே நடக்க ஆரம்பித்தார்கள். மேற்குலகு சென்றிருந்த வன் தன் வாழ்வின் கதைகளைச் சொல்லிக் கொண்டே வர, நீண்ட மழையாடை அணிந்திருந்தவன் சுவாரஷ்ய மிக்க அவன் கதைகளைச் செவிமடுத்தபடியே நகர்ந்தான்.

நகரின் ஒரு மூலையில் பிரகாசமாய் மின் விளக்குகள் எரிந்த ஒரு கடைதெரிந்தது. அவர்கள் அக்கடையை மிக நெருங்கியதும், அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

மேற்குலகிலிருந்து வந்தவன் சட்டென நின்றான் தன் கைகளைப் பிடுங்கிக் கொண்டு.

"நீ ஜிம்மி வெல்ஸ் இல்லை... இருபது வருஷங்கள் நீண்ட காலம்தான் ஆனாலும், மனிதனின் முகவடிவம் எல்லாம் மாற முடியாதே.. நீளமான மூக்கு.."

"அது சில சமயங்களில் நல்லவனைக் கெட்டவனாய் மாற்றும்.." உயரமானவன் சொன்னான். இன்னும் பத்து நிமிடங்களில் நீ கைது செய்யப் படுவாய்.. பொப்.. சிக்காகோவின் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நீ நியுயோர்க் வருவதை எதிர்பார்த்திருந்தார்கள். அவர்கள் உன்னைக் கண்காணிக்கச் சொல்லி நம்மை அனுப்பினார் கள். நீ அமைதியாய் என்னோடு வருகிறாயா? அப்படி வருவது புத்திசாலித்தனம்.. ஆனாலும் முதலில் இதை நீ படிக்க வேண்டும். உன்னிடம் தரச் சொல்லி நான் பணிக்கப் பட்டிருக்கிறேன். அந்த யன்னலருகே சென்று இதை வாசி.. அது வெல்ஸ் எனும் பொலிஸ் உத்தியோகத்தர் தந்தது..."


மேற்குலகு மனிதன் அந்தச் சின்னக் காகிதத் தாளைப் பிரித்தான். அதை வாசிக்கையில் அவன் கைகள் நடுநடுங்கத் தொடங்கின.

"பொப்...குறித்த இடத்தில் சொல்லப்பட்ட சரியான நேரத்தில் நான் வந்திருந்தேன். சிக்காகோ பொலிஸாரினால் தேடப் பட்ட முகத்தை நான் உன்னிடம் கண்டேன். நானே எங்ஙனம் என்கைகளால் உன்னைக் கைது செய்ய முடியும்..? ஆதலால், நான் திரும்பி வந்து இன்னொரு பொலிஸ் உத்தியோகத்தரை உன்னைக் கைது செய்யச் சொல்லி அனுப்பி வைத்தேன்.

இங்ஙனம், ஜிம்மி"

●

# நிலாந்தி சசிக்குமார் 3 கவிதைகள்



## தவளைச் சத்தம்

அந்தக் குளம்
அதிகாலையில் மட்டுமன்றி
அந்தி மாலையிலும்
அழகு ததும்பவே காட்சியளிக்கும்.
காலையில் தாமரையும்
மாலையில் அல்லியுமாக
அக்குளத்தின் அழகை
காவல் காத்துக் கொண்டிருந்தன.

மீன்களும் ஆமைகளும்
நண்டுகளும் தவளைகளும்
ஜீவனம் செய்யும் அழகிய வீடு.

எப்போதாவது
அக்குளத்திற்கு விஜயம் செய்யும்
கொக்குகளும் நாரைகளும்
தமது பசிக்கு சிலவற்றை
இரையாக்கும்
தவளைகளின் சத்தம் மட்டும்
இந்த அராஜகத்திற்கு எதிராக
குரல் எழுப்பிக் கொண்டே
இருக்கும் ஓயாமல்

## பெண்

1.
எங்கள் வீட்டில் மாமரம்
முதல் முதலாய் பூத்திருக்கு
ஊருக்கு விருந்திட
வேண்டும்
வியாபாரிகள்
தெரிந்து கொள்ள.

2.
பெண் என்பவள் எதையும்
கட்டுக்குள் வைப்பாள்
எதையும்
அவள் தளரும் போதும்
தளர்த்தும் போதும்
மட்டுமே.
தவறுகள் தலைதூக்குகின்றன.
தளருவதும் தளர்த்துவதும்
நிச்சயம் ஒரு ஆணுக்காகவே.

## விடியல்

இரவின் மரணத்திற்கு
மாரடித்துக் கூவிக்
கதறுகிறது சேவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 2. ஏர்விழா

பேராசிரியர் சோமரத்னபாலசூரிய 1986 ஆம் ஆண்டு எழுதிய **வப் மகுல** நாவலின் மொழியாக்கம், **ஏர்விழா** என்னும் பெயரில் 2006 இல் வெளிவந்துள்ளது. **மடுளுகிரியே விஜேரத்ன**வின் இம்மொழியாக்கத்தை 'எஸ். கொடகே சகோதரர்கள் பதிப்பகம்' வெளியிட்டுள்ளது.

சோமரத்ன பாலசூரிய களனி பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்தவர். பிறகு, பிரான்சிலுள்ள 'கான்' பல்கலைக்கழகத்தில் கற்றவர். தொடர்ந்து, அங்குள்ள 'சோர்போன்' பல்கலைக் கழகத்தில் பயின்று, கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். "1986 ஆம் ஆண்டு இவரால் எழுதப்பட்ட 'வப் மகுல' என்ற இந்த நாவல் சிங்கள நாவல் இலக்கியத் துறையில் புதிய சகாப்தத்தை உருவாக்கியது" என்கிறார், மொழியாக்க ஆசிரியரான மடுளுகிரியே விஜேரத்ன. தன்னார்வ ரீதியில் தமிழைக் கற்ற சிங்களவரான இவர், வங்கித் துறை அலுவலராவர். இதுவரை சில நூல்களைச் சிங்களத்திலிருந்து தமிழுக்கும், பல தமிழ் நூல்களைச் சிங்களத்துக்கும் இவர் மொழியாக்கம் செய்துள்ளார்!

ஒலுபெலியாவை என்னும் விவசாயக் கிராமத்தை மையமாகக் கொண்டு கதை நிகழ்கிறது. அதன் அண்மையிலுள்ள நகரத்திலும் சில சம்பவங்கள் சித்திரிக்கப்படுகின்றன. ஒலுபெலியாவைப் பெயர்க் காரணம் சொல்லப்படுகிறது. ராஜசிங்க அரசன் ஒரு முறை மாறுவேடத்தில் அங்கு வந்தபோது, முன்னரே தான் கேள்விப்பட்ட - வாள், வில், அம்பு போன்றவற்றில் சிறந்த ஓர் இளைஞனிடம் வாளொன்றைக் கொடுத்து, அவனது திறமையைக் காட்டச் சொல்கிறான். அவ்விளைஞன் ஏழு ஒலு பூக்காய்களை மேலே வீசி விட்டு, அந்த ஏழு காய்களையும் வாளினால் ஒரே வெட்டில் வெட்டினான்; அரசன் மகிழ்ச்சியில் அந்த ஊரை அவனுக்குப் பரிசளித்தான். அதன் பிறகே அவ்வூருக்கு இந்தப் பெயர் வந்தது!

மழை இன்மையால் குளம் நீரின்றி வரண்டு கிடக்கிறது; விவசாய வேலைகளைச் செய்ய இயலாது மக்கள் கஷ்டப்படுகின்றனர். குளத்தின் ஒருபகுதியை ஆழமாக்கும் வேலையில் சிலர் ஈடுபடுகின்றனர். அக்காலத்தில், அரசாங்கத்தின் 'ஏர் விழா' இம்முறை அவ்வூரில் நடைபெறுமென அரசாங்க அறிவிப்பு வருகின்றது; பிரதமர் (முதல் அமைச்சர் என்றே நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது) அந்நிகழ்ச்சியில் பங்கேற்பார் எனவும் தெரிகிறது. நீர்ப்பாசனப் பிரச்சினைக்கு விடிவு வந்து ஊரில் அபிவிருத்தி ஏற்படுமென, மக்கள் மகிழ்ச்சி அடைகின்றனர். குறிப்பாக, சமூக அக்கறையுடன் செயற்படும் புஞ்சிறால மாமாவும், அவருடன் இணைந்துள்ள கதைசொல்லியும், நண்பர்களும் உற்சாகமடைகின்றனர். புதிய புதிய வாகனங்களில் அரசாங்க அலுவலர் வருகின்றனர். தற்காலிக இருப்பிடங்கள் அமைக்கின்றனர். பகட்டாரவாரத்துடன் சில வேலைகளில் ஈடுபடுகின்றனர். குளத்தை ஆழமாக்கல், குளக்கட்டை மண்ணினால் மேவி உயர்த்துதல், குளக்கட்டில் மின்சாரக் கம்பங்களை நாட்டி மின்சார விளக்குகளை ஒளிரச் செய்தல் போன்றவை நடக்கின்றன. குளத்து வேலைகளில் ஊரவர்கள் - ஆண்களும் பெண்களும் - ஈடுபடுத்தப்படுகின்றனர்; அவர்களுக்கு ஊதியமும் கிடைக்கின்றது. குளத்தினருகில் தேநீர்க் கடையும் தோன்றுகிறது; நாளடைவில் அங்கு சாராயமும் விற்கப்படுகிறது! ஆலமரத்தருகில் இருந்த பல்பொருள் கடை, மேலும் பெரிய கடையாக மாறுகிறது. வாய்க்காலூடாக நீரோடை குளத்துக்குக் கொண்டு வரப்படுகிறது; குளம் நீரால் நிரம்புகிறது. மக்கள் மகிழ்ச்சியுடன் குளிக்கவும், உடைகள் கழுவவும் செய்கின்றனர். அயலூர்வாசிகளும் ஆர்வத்துடன் வந்து பார்க்கின்றனர். ஆயினும் மக்கள் குளத்தைப் பயன்படுத்த அதிகாரிகள் தடை விதிக்கின்றனர். கொழும்பிலிருந்து வரும் - தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த - நாகரிகமான பெண்கள் குழுவொன்று, சுகாதாரம் மற்றும் உணவுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போஷாக்குப் பற்றியும், பெண்களின் உரிமைகள் மற்றும் மாற்றங்கள் பற்றியும் கருத்தரங்குகளை நடத்துகின்றது. கிராமப் பெண்கள் அவர்களின் பேச்சு, உடை மற்றும் நடைமுறைகளில் அந்நியத்தன்மையை உணர் கின்றனர். அண்மைய நகரமான நிக்கவெரட்டியாவில் வசிக்கும் ஆசிரியரான குணரத்ன ஐயா, ஒலுபெலி யாவை பற்றி பத்திரிகையில் கட்டுரை எழுதுகிறார் தமது ஊர் பிரபலம் அடைவதில் மகிழும் கதை சொல்லியும் நண்பர் சிலரும் அவரைச் சந்தித்து, மேலும் விபரங் களைக் கொடுப்பதோடு, அவரிடமிருந்தும் பலவற்றை அறிந்து கொள்கின்றனர்.

ஏர் விழா நாளன்று ஊர் பரபரப்படைகிறது. பிரதம மந்திரியும் நாடாளுமன்ற உறுப்பினரும் மற்றும் அதிகாரிகள் கூட்டமும் காவல்துறையினரும் வேறு இடங்களிலிருந்து வாகனங்களில் கொண்டுவரப்பட்ட மனிதர்களுமாக, ஊர் நிறைந்துள்ளது. காவல்துறைக் கெடுபிடிகளால் தாம் ஒதுக்கப்படுவது ஊர்வாசிகளுக்கு ஏமாற்றம் அளிக்கிறது. புஞ்சிறால மாமாவும் இளைஞர் களும், ஊரின் நீர்ப்பிரச்சினை நிரந்தரமாகத் தீர்க்கப் படும் வழிமுறைகள் ஏற்படுத்தப்படவேண்டுமென, மனு வொன்றைப் பிரதமரிடம் கொடுக்க முயலகின்றனர்; அதில் பல இடையூறுகள். பிரதமரை அவர்கள் அணுகுவது சாத்தியமில்லாது போகிறது. விழா முடிந்ததும் ஓய்வெடுப்பதற்காக அயலிலுள்ள நகரின் வாடி வீட்டுக்குப் பிரதமர் செல்கிறார். நீண்டதூரம் சைக்கிள்களில் அங்கு செல்லும் ஊர்க்குழுவினர், ஓர் அலுவலரிடம்தான் மனுவைக் கையளிக்க முடிகிறது; வேண்டுகோளுடன் ஊர்மக்கள் பிரதமருக்கு மனு அளிக்கும் விடயம், நாடாளுமன்ற உறுப்பினருக்கு உவப்பானதாக இல்லை. பிரதமரைச் சந்திக்கலா மென்ற எண்ணத்துடன், வாடிவீட்டருகில் குழுவினர் நிற்கின்றனர். சந்தேகம் எனக்கூறி காவல்துறையினர் அவர்களைக் கைதுசெய்து காவல் நிலையம் கொண்டு சென்று, தாக்குகின்றனர்; "பார்த்துக்கொள்ளுங்கடா நீங்க எல்லோரும் கள்ளச் சாராயம் வடிக்கிறவங்க ளென்று மறியலுக்கு அனுப்பலாம்." என்றும் வெருட்டு கின்றனர். இவர்களின் விளக்கங்கள் வேண்டுமென்றே புறக்கணிக்கப்படுகின்றன. ஓர் அரசியல்வாதியின் தலையீடு பின்னணியில் இருப்பது தெரிகிறது. துன்புறுத்தல்களின் பின் மறுநாள் விடுவிக்கப்படும் அவர்கள், பேருந்தில் ஏறி, காயங்களின் வலியுடனும் ஏமாற்றத்துடனும் தமது ஊருக்கு வருகின்றனர். முதலில் குளத்தடிக்குச் செல்கின்றனர். ஏர் விழா நடந்த இடத்தில் பலவித வர்ணத் தாள்கள், கயிற்றுத் துண்டு கள், பொலித்தீன் துண்டுகள் பரவியபடி கிடந்தன. விருந்தினருக்காக அமைக்கப்பட்ட மண்டபத்தின் தகரங்களைக் கூலியாள்கள் கழற்றிக் கொண்டிருந் தனர். சோர்வுடன் ஆலமரத்தடியில் சற்றுநேரம் இவர்கள் அமர்ந்திருந்தனர். பிறகு, புஞ்சிறால மாமா, "வீடு வாசலுக்குப் போவோம்... போவோம்." எனக் கூறினார் என்பதனுடன் நாவல் முற்றுப்பெறுகிறது.

**

ஆர்ப்பாட்டத்துடன் செய்யப்படும் அரசாங்க விழாக்களில் நடைபெறும் குளறுபடிகள், அதிகார சக்தி களால் சாதாரண மக்கள் ஒதுக்கப்படுதல், மேல்நிலை யினரை அவர்கள் அணுகமுடியாத நிலைமைகள், மக்கள் நலனுக்காகச் செயற்படுவோர் அரசியல் வாதிகளின் தலையீட்டால் துன்பத்துக்குள்ளாக் கப்படுதல் போன்றன வெளிப்படுத்தப்படுகின்றன. கொழும்பிலுள்ள அரசு சாரா தொண்டர் நிறுவனத்தின் மகளிர் குழு, கிராமத்திலுள்ளவருக்கு ஆங்கிலத்தில் கடிதம் அனுப்புகின்றது.சாதாரண மக்களுக்கு விளங்கும் சிங்களத்தில் கடிதம் அனுப்ப எண்ணாதவர்கள், எந்தளவுக்கு தங்கள் நலனில் உண்மையான அக்கறை கொண்டிருப்பர் என்ற புஞ்சிறால மாமாவின் கேள்வி நியாயமானதே! அதுபோல், தாய்ப்பாலின் அவசியம் பற்றிய மகளிர் குழுவின் விளக்கம், ஏற்கெனவே அந்நிலைமைதான் கிராமத்தில் இருப்பதால் கிராமத்துப் பெண்ணால் ஏளனத்துடன் நோக்கப்படுகின்றது.

ஊரிலுள்ளவர்கள் சிங்கள பௌத்த மக்களாக இருந்தபோதிலும் அவர்களிடமுள்ள வழக்கங்கள் சில, வேறு பாரம்பரியச் செல்வாக்கை வெளிக்காட்டுகின்றன. வீடுதோறும் பிடியரிசி சேகரித்து, குளத்தின் அருகிலுள்ள ஆலமரத்தடியில் பொங்கல் பொங்கிப் படைக்கின்றனர். "அந்த ஆலமரத்தடியில் புராண காலத்தில் கோயி லொன்று இருந்ததாக நம்பிக்கை இருந்தது. அதில் குடிகொண்டிருந்த தெய்வத்தின் கால் சலங்கைகள் உட்பட பல பொருட்களையும் அம்மரத்துக்குள் வைத்து நாகம் ஒன்று காத்து வருகின்றது என்பதும், பலரது நம்பிக்கை." -(பக். 26).

"இந்த ஆலமரத்துக்குள் வாசம் செய்யும் தெய்வத்திற்கும், இந்த ஊரின் காவல் கடவுளுக்கும், ஐயனாருக்கும், பிள்ளையாருக்கும் நாங்கள் வணங்கி வேண்டிக்கொள்வது என்னவென்றால், இந்த ஊரில் இருக்கின்ற பெரியவர்கள், வறியவர்கள், அவர்களின் உறவினர் எல்லோருக்கும் விவசாயிகளுக்கும், அவர் களுக்கு உதவிசெய்கின்ற கால்நடைகளுக்கும் நோய் நொடி வராமல் காப்பாற்ற வேண்டும். அதுமட்டுமல்ல அடுத்த வருடம் பொங்கலுக்கு முன்னாடி நல்லா மழை பெய்து நாங்களெல்லாம் நல்லா இருக்க அருள் புரியணும்." -(பக். 29)

**

நாவல் சாதாரண மொழியில் நேரே சொல்லப் படுகிறது; ஆழ்ந்த உணர்வுகளைக் கிளர்த்தும் கூர்மையான படைப்பு மொழியைக் காண இயலவில்லை. புஞ்சிறால மாமா, பிரம்பி முதலாளி, கள்ள ஜெமா, அங்கோ மாமி, குணரத்ன ஐயா, ஜயரத்ன முதலிய பாத்திரங்கள் வருகின்றன. ஆயினும், புஞ்சிறால மாமா, கதைசொல்லியான "நான்" ஆகிய பாத்திரங்களே ஓரளவுக்கு மனதில் பதியுமாறு வார்க்கப்பட்டுள்ளன. பெரும்பாலான பாத்திரங்கள் கோட்டுருவங்களாகவே தெரிகின்றன! "இந்த நாவல் சிங்கள நாவல் இலக்கியத் துறையில் புதிய சகாப்தத்தை உருவாக்கியது." என்ற வரி, ஆசிரியர் பற்றிய குறிப்பில் காணப்படுகிறது. நாவலைப் படித்து முடிக்கையில் இவ்வரி எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது! மொழியாக்கத்தின் பலவீனங்களும் இவ்வாச்சரிய உணர்வுக்குத் துணை நிற்பதைக் குறிப்பிடத்தான் வேண்டும்!

**

நாவலின் மொழியாக்க நடை சிறப்பானதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையவில்லை; முற்பகுதியில் கொஞ்சம் பரவாயில்லை. இலக்கு மொழியான தமிழில் மொழிபெயர்ப்பாளரின் வெளிப்பாட்டுத் திறன் பலவீனமாயுள்ளது. தமிழிலிருந்து தாய்மொழியான சிங்களத்துக்கு மொழியாக்கம் செய்வதில், அவரின் வெளிப்பாட்டுத் திறன் வலுவானதாக இருக்கக்கூடும்!

1. ஆசிரியர் கூற்றாக வருமிடங்களில் எழுத்து நடை பின்பற்றப்படவேண்டும்.

ஆனால், **பத்தவைத்துக்கொண்டு** (பக். 17), **இருந்திட்டு** ஒருதரம் (பக். 39), வெத்திலை பாக்குகள் (பக். 85), வரிசையாக **நிக்கவைத்து** (86), **தொக்கையாக** இருந்தவர்கள் (பக். 88), **சிகரட் பத்திக்கொண்டு** (பக். 99) முதலிய பேச்சுவழக்குச் சொற்களைக் காண இயல்கிறது!

2. ஒருமை பன்மை பிழையாகக் கையாளப்படும் இடங்கள் அநேகம். உ + ம் 23,38, 57, 54, 59, 75, 138, 139 முதலிய பக்கங்களில் அவற்றைக் காணலாம்.

3. தமிழ் மொழி மரபுக்கு இசைவில்லாத பிரயோகங்களும் உள்ளன.

அ) பனை **இலையும்** (பக். 82)

ஆ) படித்த படிப்பிற்கு ஒரு உத்தியோகத்திற்கு சென்றால் நல்லது. அது ஒருவிதத்தில் **ஒதுங்கிப் போய் விட்ட** வெற்றியாகும். (பக். 18)

இ) சாம்பல் கூடிய தூணைப் போன்ற புத்த கோபுரம் வெடித்து அதற்குள்ளே கறுவல் காக்கையின் எச்சத்தால் அரசமரக் கன்றுகள் **முளைத்துள்ளது.** (பக். 38)

ஈ) "எனக்கு உத்தியோகம் இல்லை. அவருக்கு உத்தியோகம் உள்ளது. நாம் இருவருடைய மனதில் **உள்வாய்ந்துள்ள** இன்ப துன்பங்கள் பெரும் வித்தியாசத்தைக் காணவில்லை."

உ) நாம் எல்லோரும் வேகமாக வாடி வீட்டை நோக்கி நடந்தோம். சாரத்தை பின்புறமாகத் தூக்கிக்கொண்டு இடது கையால் இடுப்பில் செருகிக்கொண்டு நிலத்தைப் பார்த்த வண்ணம் மாமா எல்லோருக்கும் முன்னால் சென்றார். எங்களிடையில் எந்தப் பேச்சுவார்த்தையும் இடம்பெற வில்லை. (பக். 145)

4. வாசிக்கும்போது நெருடலை ஏற்படுத்தி எரிச்சல்பட வைக்கும் மொழிநடை, ஏராளமான இடங்களில் உள்ளது; வகைமாதிரிக்குச் சில:

அ) ஞாயிறு வாரமஞ்சரியில் இரு ஒற்றைகள் நிறைய ஏர்விழாவைப் பற்றிய "மலர்" ஒன்று **பிரசுரித்திருந்தது.** பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட மந்திரிகள் **அமைச்சர்களுடைய** புகைப்படங்களும், கிராமியப் படங்களும் வாழ்த்துக்களும் அறிவித்தல்களும் கட்டுரைகளும் அந்த மலரில் நிரம்பியிருந்தன. கிராமம் சார்பாக **வெளியூர் ஒருவர்** நன்றி உரை அறிக்கை விட்டிருந்தார். வயல், குளம், ஆலயம் என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட்ட கட்டுரையில் வேறொரு கிராமத்து பெரிய ஆலயமொன்றில் புகைப்படமொன்று பிரசுரிக்கப் பட்டிருந்தது. அதற்கு மென்மையான தாளில் பல வர்ணங்கள் நிரம்ப பிரசுரிக்கப்பட்டிருந்த முதலமைச்சருடைய **புகைப்படமொன்றுக்கும்** உள்ளடக்கப்பட்ட சுவரொட்டிகள் மரங்களிலும், மதில் கற்பாறைகளிலும் வாய்க்கால் மதில்களும் ஒட்டியிருந்தது. (பக். 110 – 111)

ஆ) அந்த உத்தியோகத்தர்களில் எமக்கு தெரிந்தவராக இருந்தவர்கள் பாராளுமன்ற **உறுப்பாளரும்** உறுப்பினரின் **செயலாளர்** மட்டுமே. (பக். 41)

இ) சில சாரதிகள் லையிட் சிக்னல் **எவ்வாறாக** போடுவதைப் பற்றி பொடியங்களுக்கு அறிவுரை கூறுவதற்கு **இரக்கப்பட்டார்கள்.** (பக். 45)

ஈ) மாமா கூறிய அத்தனையும் **அடுக்குமுறையாக** அமைத்து **சாராம்சம்** செய்து கடிதம் எழுதினேன்.

.... "**உனக்கு** எழுத்து ஞானத்தினாலையும் என்ர தைரியத்தாலையும் காட்டு ஜீவன்களுக்கு வசிப்பதற்கு காடு மிஞ்சிப்போச்சு...." (பக். 47)

உ) பலர் இதைப் பற்றி முன்பின் தெரியாமல் **மல்லாக்கு பார்த்தவாறே பார்த்துக் கொண்டு** இருந்தார்கள். (பக். 48)

ஊ) அவள் வந்த வேகத்தை விட மிகுந்த வேகத்துடன் வீட்டின் பின்புறத்திற்குச் சென்றாள். வேறு எஜமான்கள் **சயனிக்கிறார்கள். உறங்குகிறார்.** இந்த எஜமான் படுக்கை செய்தார். போவோம் போவோம் வேற ஆளைப் பார்க்க. (பக். 52)

எ) பிற்பகலும் எல்லோருமாக வருகை தந்திருந்தார்கள். அதனால் வயதைக்கேட்டு பிள்ளைகளையும் முதியோர் களையும் மண்டபத்திலிருந்து **வெளியேற்றப்பட்டனர்.** (பக். 86)

ஏ) மந்திரியைச் சந்தித்து ஏதாவதொரு **அனுதாபத்தைப்** பெற ஜெயரத்னாவுடன் புஞ்சிசிஞ்ஞோவை அனுப்பப் பட்டார். (பக். 103)

ஒ) அத்துடன் ஏர்விழாவுக்கு கலந்துகொள்ளத் தகுதியான ஒரு விவசாயியும் வந்திருந்தார். கொண்டை முடி கட்டி நீண்ட தாடியுடன் இருந்த அவர் எல்லா ஏர்விழாவுக்கும் **அரசர்களுடனும்** மந்திரிகளுடனும் கலந்துகொள்வார் எனச் சொன்னார். (பக். 113)

ஓ) அதுவரை **ஒலியின் சத்தமும்** மற்றும் வெளிச்சமும் தவிர வானத்தில் ஒன்றுமே காணக்கிடைக்கவில்லை. (பக். 144)

**

மொழியாக்கம் திருத்தமானதாக இல்லாதவிடத்து, மூலப்படைப்பைப் பற்றியும் மூல ஆசிரியன் பற்றியும், சிதைவுற்ற கருத்துப் பதிவுகளே இலக்கு மொழி வாசகரிடம் ஏற்படும். அந்நிலைமையானது, மொழியாக்கம் செய்பவரால் மூல ஆசிரியருக்கு இழைக்கப் படும் அநீதியாகும்! மொழியாக்கப் பலவீனங்கள் நிறைந்த இந்த நாவல், மொழியாக்கப் படைப்புகள் செவ்விதாக்கம் செய்யப்படுவதன் அவசியத்தை வலியுறுத்துவதாக உள்ளது. மொழியாக்க நூல்களை வெளியிடுவோர் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்; தகுதிவாய்ந்தோரின் பரிசீலனையின் பின்னரே நூல்களைப் பதிப்பிக்க வேண்டும். அரசாங்கத் திணைக்களங்களின் அறிவித்தல்களில் தமிழ் படும்பாடு, "பெரும்பாடாக" உள்ளமை தொடர்கிறது! அதைப் போல், கலை இலக்கிய மொழியாக்கத்துறையிலும் அவலநிலை தொடருமோ - என்னும் அச்சமும் தோன்றுகிறது! சிங்கள இலக்கிய உலகும் தமிழ் இலக்கிய உலகும், வளர்ச்சி நிலைகள் பற்றிச் சரியான புரிதல்களுடன் பயன்பெற வேண்டுமானால், விழிப்புணர்வுடன்கூடிய தெளிந்த செயற்பாடுகள் தவிர்க்கப்பட இயலாதவை!

– 30. 03. 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இங்கேயும் இப்போதும்

சுகந்தி அந்த தகவலை என்னிடம் கூறிய போது என்னாலும் நம்ப முடியவில்லை. உடனடியாக மனதில் ஒரு குழப்பம் தோன்றினாலும் சிறிது நேரத்தில் அது பெரிய தடை அல்ல என்று தோன்றி யது. சுதாகரைப் பார்க்கும் எவரும் அவர் அந்த சமூகத்திலிருந்து வந்தவர் என்று கூறமாட்டார்கள். அவ்வளவு அழகும் கம்பீரமும் அது மட்டுமன்றி பழக இனியவர், பண்பானவர், கெட்டிக்காரர். இதனால் தான் பலரும் அவரை தமது காதலராக்கிக் கொள்ள விரும்பினார்கள். கடைசியலில் என்னவோ அந்த அதிஸ்டம் எனக்குத் தான் கிடைத்தது. எனினும் இப்போது இந்த தகவல் குழப்பமாகி மனதை அரித்துக் கொண்டிருந்தது.

என்னைப் பொறுத்தவரையில் சாதிப் பாகு பாடு பார்ப்பவளல்ல எனினும் எனது பெற்றோரும், சமூகத்தவரும் இதற்கு எதிராக இருப்பார்களே என்ற எண்ணமே எனது குழப்பத்திற்குக் காரணம். சுகந்தி இதே அலுவலகத்தில் என்னோடு பணிபுரிபவள். எமது சக ஊழியரான குமாரை விரும்புகிறாள். குமார் மூலம் தான் சுதாகரின் அப்பா கள்ளிறக்கும் தொழிலாளி என்பது தெரிய வந்தது. காலையில் இந்த தகவலை அறிந்த பின்னர் சுதாகருடன் இன்னமும் கதைக்கவில்லை. இன்னும் சிறிது நேரத்தில் தேநீர் வேளையில் தான் சந்திக்க வேண்டும். சுதாகரை சந்திப்பதில் வழமையான குதூகலம் குறைந்திருப பது போல தோன்றியது. சீ... அப்படி நினைக்கக் கூடாது. மனதை ஒருவரிடம் பறிகொடுத்து பழகிய பின்னர் அவரது சாதியை அறிந்ததும் நிராகரிக்க நினைப்பதா? இருகொள்ளி எறும்பாக தவித்தேன்.

தேநீர் இடைவேளையின் போது சுதாகருடன் இயல்பாக கதைத்த போதும் மனதில் ஒரு வித நெருடல் இருந்து கொண்டிருந்தது. சுதாகர் வழமை போல் கலகலப்பாக கதைத்தான். இடையிடையே என்னைச் சீண்டினான்.

'பாமா, என்ன ஒரு மாதிரி இருக்கிறீர்? முகம் வாடியிருக்கு, சுகமில்லையா?" என்று கேட்டபோது "சீ" என்று பதிலளித்தேன். "பின்னேரம் கடற்கரைக்கு போகலாமா?" என அவன் கேட்டபோது ஏனோ மறுத்தேன். 'இல்லை சுதாகர்... வருத்தமொன்று மில்லை... வழமையான சுகயீனம் தான். ஆனால்



ச.முருகானந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பெல்லாம் போட்டு அடிச்சமாதிரி கிடக்கு...' என்று பொய் கூறியபோது மனச்சாட்சி இடித்துரைத்தது.

மதிய போசன வேளையில் ஒன்றாக அமர்ந்திருந்து சாப்பிட்ட போதும் வழமையான கலகலப்பு மனதில் இருக்கவில்லை. எனது உணவிலிருந்து முட்டைப் பொரியலை அவன் உரிமையுடன் எடுத்த போதும் நான் மௌனமாகவே இருந்தேன்.

இரவு தங்கியிருக்கும் அறைக்குச் சென்று குளித்த பின்னரும் உடல் சோர்வாக இருப்பதாக உணர்ந்தேன். நான் யோசித்தும் கொண்டிருக்கும் போதே சுகந்தி சிரித்தபடி மகிழ்வோடு வந்தாள். காதலனுடன் சுற்றி விட்டு வந்து குதூகலம் என்று புரிந்தது.

தேநீரை அருந்தியபடி சுகந்தியும் நானும் உரையாடினோம். நான் எதிர்பார்த்தது போலவே அவளும் சுதாகரின் கதையையே தொடங்கினாள். பாமா நானும் எதிர்பார்க்கவில்லை. குமார் சொன்னதும் உன்னை நினைக்கத் தான் பயமாக இருக்கு....நீ என்ன முடிவு எடுத்திருக்கிறாய்?

சுகந்தியின் கேள்விக்கு என்னால் பதிலளிக்க முடியவில்லை. நானே ஒருவித குழப்பத்தில் இருக்கும்போது என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை. என்னையும் மீறி கண்கள் பனித்தன.

"பாமா ... உன்னுடைய நிலை எனக்குப் புரியுது. உன்னுடைய பெற்றோர் இதற்கு உடன்படுவினமோ? அது மட்டுமல்ல சமூகமும் உன்னை ஏற்றுக் கொள்ளாது..." சுகந்தி எடுத்துரைக்கும் போது அவள் கூறுவதிலுள்ள நியாயம் புரிந்தது.

"என்ன யோசிக்கிறாய் பாமா?.... உன்னுடைய காதலை முடிவுக்கு கொண்டு வாறது உனது எதிர்காலத்திற்கு நல்லது.இப்போது இளமை வேகத்தில காதல் கண்ணை மறைக்கும். நடைமுறை வாழ்க்கையில் போகப் போகத் தான் எல்லாம் புரியும்.

இல்லை சுகந்தி ஒருத்தரை காதலிச்சிட்டு இன்னொருவருடன் எப்படி வாழமுடியும்? அதுமட்டுமல்ல சுதாகரிடம் வேறு எந்தக் குறையையும் காணவில்லை. சொல்லப் போனால் அவரும் என்னைப் போல லிகிதர் தான்... பெற்றோர் என்னவாக இருந்தாலும் நாங்கள் தானே வாழப் போகிறவர்கள்... எனது உறுதியான பதிலை சுகந்தி எதிர்பார்க்கவில்லை.

"யதார்த்தமாக சிந்தி பாமா . முதல்ல உன்னுடைய பெற்றோர் உன்னுடைய காதலை ஏற்கப் போறதில்லை.பெற்றோரை விரோதித்து நீங்க இருவரும் திருமணம் செய்ய உன்னால் முடியுமா? அவர்களது வீட்டில் போய் உன்னால் வாழ முடியுமா?"

குழப்பத்திற்கு எதுவித தீர்வும் காணாமலே படுக்கைக்கு சென்றோம்.சுகந்தி சொல்லிய ஒவ்வொரு வார்த்தைகளும் மனதைக் குடைந்து கொண்டிருந்ததால் தூங்க முடியவில்லை. சுதாகரை பிரிவதா? சேர்வதா? விடைகாண முடியாது தவித்தேன். சுதாகரின் காதலும் அளவிட முடியாத அன்புப் பிணைப்பும் எதையும் புறம் தள்ள முடியாதளவுக்கு இதயத்தில் சிம்மாசனமிட்டிருந்தது. பெற்றோரிடம் கேட்டுப் பார்க்கலாமா? அப்பாவை நெருங்க முடியாது. அம்மாவிடம் தான் கதைக்க வேண்டும். சாதி பார்ப்பதில் அப்பாவை விட அம்மா ஒரு படி அதிகம். இந்த நிலையில் என்ன செய்வது? தூக்கம் வராத இரவு அமைதியின்றி கழிகிறது.

காலையில் அலுவலகத்திற்கு புறப்பட்டு செல்லும் போது,"பாமா உனக்கு சுதாகரது சாதி தெரியும் என்று அவரிடம் கூறிவிட்டாயா?" என்று சுகந்தி கேட்டாள்.

"இல்லை" என்று தலையை ஆட்டினேன். "சொல்லிவிட்டு பிரிந்து விடு..."சுகந்தி அறிவுரை கூறினாள்.தொடர்ந்து, உன்னளவிலேயே முடிவு செய்து விட்டால் பெற்றோருடன் கதைக்க வேண்டியதில்லை" என்றாள்.

"தொலைபேசியிலை இன்றைக்கு அம்மாவுடன் கதைக்கலாம் என்றிருக்கிறன்."

"அவர்கள் ஒருபோதும் சம்மதிக்கப் போவதில்லை. வீணான முயற்சி பாமா..." அவள் எடுத்துரைத்தும் கூட அம்மாவுடன் உரையாடினேன். அம்மா பொங்கி வெடித்தாள். "பாமா, எங்கட குடும்ப கௌரவம் என்னாகிறது? அப்பாவோ எங்கட சொந்த பந்தமோ இதற்கு உடன்படப் போவதில்லை. உந்த எண்ணத்தை அடியோடு கைவிடு... மாட்டன் என்று சொல்லு..."

"முட்டாள் தனமாக கதையாத. நீ உவனைச் செய்திட்டால் எங்கட சனம் எங்களை ஒதுக்கியிடும். பிறகு மற்ற பிள்ளைகளை நான் எங்க கட்டிக் கொடுக்கிறது?"அம்மாவின் கேள்வி எனது நெஞ்சில் உறைத்தாலும் காதலின் வேகம் அதைப் புறம் தள்ளியது."இல்லை அம்மா...அவரைப் பிரிஞ்சு என்னால வாழ முடியாது."

"இருபத்தியைந்து வருடம் வளர்த்து ஆளாக்கிய எங்களை விட அவன் உனக்குப் பெரிசாகிப் போச்சோடி?

பொடிச்சி,உனக்கு உந்த எண்ணம் இருந்தால் நாங்கள் உனக்கு பெற்றோருமல்ல,நீ எங்களுக்குப் பிள்ளையுமல்ல.கொப்பர் இரத்தக் கொதிப்பு வருத்தக்காரன்.உன்ரை கோதாரியை கேட்டால் அந்தாளுக்கு நெஞ்சுவலி வந்திடும். அம்மா கட்டாயமாக கூறியபோதும் மனது சுதாகரை நிராகரிக்க மறுத்தது.

இதற்கிடையில் அலுவலகத்திலும் தினமும் எனக்குப் புத்தி சொல்வோர் அதிகரித்தனர். சுதாகர் மீதுள்ள காழ்புணர்ச்சியை வெளிப்படுத்துவதாகவே அவர்களது கூற்று இருந்தது.சுதாகர் வேலையில் கெட்டிக்காரன். எந்த வேலையானாலும் விரைந்து செய்வான்.தவறு விடுவதும் இல்லை. இதனால் இவனது மூத்த உத்தியோகத்தர்களுக்குக் கூட கோபம். பெண்கள் என்று ஒருபோதும் அலையமாட்டான். கண்டிக்க வேண்டிய போது கண்டிக்காமலும் விடமாட்டான்.

என்னுடைய இன்னொரு அலுவலக தோழி சரிதா,நான் சுதாகரை காதலிக்க முன்னர் அவளும் சுதாகருக்கு வலை வீசியவள் தான். இப்போது சொல்கிறாள் "நல்லவேளை நான் தப்பியிட்டன். உன்ரை தலையெழுத்து..." என்று கூறினாள். தொடர்ந்து,"நீ சுதாகருடன் இனியும் பழகினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் உன்னோட பழக மாட்டம்..."என்றாள். சீ...என்ன மனிதர்கள்! மனது சலித்தது.

இவர்களை எல்லாம் நினைக்கும் போது எனக்கு சிரிப்பதா அழுவதா என்று புரியவில்லை. இதற்கிடையில் சுதாகரின் சாதிபற்றிய கிசுகிசுப்பும் எனக்கு இந்த விசயம் தெரிந்து விட்டதாகவும் சுதாகரின் காதிலும் விழுந்தது. இதற்கு ஒருபடி மேலாக ரங்கன் என்ற சக லிகிதர்,"சுதாகர் தன்ர சாதியை உங்களுக்கு மறைச்சுப் போட்டான்..." என்று என்னிடம் கூறினான். என்னிடம் தனது காதல் விண்ணப்பத்தை சம்மதித்தபோது நான் அதை நிராகரித்த அதே ரங்கன் தான் இப்பொழுது காழ்ப்புணர்ச்சியுடன் கூறுகிறான்.

எனக்குள் பல குழப்பங்கள் தோன்றினாலும் சுதாகரை விட்டுப் பிரிய மனது இடம்தர வில்லை. முப்பது வருடங்களுக்கு மேலாக தொடர்ந்த இனவிடுதலைப் போரை அடுத்து தமிழர்களிடம் சாதிப்பாகுபாடு தணிந்து விட்டதாக பல சந்தர்ப்பங்களில் பெருமிதம் கொண்டவள் என்ற வகையில் இப்போது இந்த சாதிப் பூச்சாண்டி என் வாழ்விலேயே குழப்பத்தை ஏற்படுத்திய போது ஏமாற்ற மடைந்தேன். போர்க்காலத்தில் சாதி நீறு பூத்த நெருப் பாகவே இருந்தது அன்றி சாதித்து அணைந்து விட வில்லை என்பது தெரிந்தது. புலம் பெயர்ந்து சென்றவர் களிடம் சாதி பாகுபாடு குறையவில்லை என கேள்விப் பட்டிருக்கிறேன். எத்தனை பாரதிகள் பிறந்து "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று பாடினாலும் தமிழினத்த வர் மத்தியில் சாதிப்பாகுபாடு அழியாது என்றேன்.

சாதியற்ற பிரச்சினையை சுதாகரிடம் பேசுவதா விடுவதா என நான் குழம்பிக் கொண்டிருந்த போது சுதாகரே அந்த விடயத்தை என்னிடம் கேட்டான். என்னுடைய சாதியை மறைக்க உம்மை ஏமாற்றிவிட்டதாக கதைக்கினம்.நான் ஒருபோதும் மறைக்கவில்லை. ஆனால் இது தான் என்னுடைய சாதி என பிரகடனப்படுத்தவில்லை.உம்மைப் பிடிச்சிருந்தது. கேட்கத் தயங்கிக் கொண்டிருந்த போது நீராகவே கேட்டீர்.கரும்பு தின்ன கைக் கூலியா சம்மதிச்சிட்டன். நீர் என்ன சாதி என்று கூட நான் கேட்கவில்லை...சுதாகர் சற்று காட்டமாக கூறினான்.

நான் அவனது கைகளைப் பற்றியபடி "ஏன் இப்ப படபடக்கிறியள்? யார் என்ன சொன்னாலும் நீங்கள் எனது காதலர் மட்டுமல்ல,வருங்கால கணவரும் கூட..."என்று தெளிவாக கூறியபோது சுதாகரும் நெகிழ்ந்தார். அப்பசரி எந்த எதிர்ப்பு வந்தாலும் நீர் என்கூட வரவேணும், என்றான். 'நிச்சயமாக' என்றேன். சுதாகர் இப்போது எனது கைகளை இறுகப் பற்றிக் கொண்டான்.

அடுத்த வாரம் அலுவலகத்தில் ஒரே கதை! ஆம் எனது சுதாகர் நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்த செய்தி தான் அது. சித்தியடைந்த ஐம்பது பேரில் இரண்டு தமிழரும் ஒரு முஸ்லீமும் தவிர ஏனையோர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களாம் அலுலவகத்தில் அனைவருக்கும் விருந்து கொடுத்து அசத்தினேன்.சுதாகருக்கு மகிழ்ச்சி ஒருபுறம் ,எனது செயலால் நெகிழ்ச்சி மறுபுறமென உற்சாகமாக இருந்தான்.

பாமா நான் இன்றைக்கு இரவு ஊருக்குப் போகிறேன்.பெற்றோரிடம் சொல்லி எங்களுடைய விடயத்திற்கும் சம்மதம் பெற்று வருவேன். உன்னுடைய பக்கத்தில் எப்படி என நீ தான்முடிவெடுக்க வேண்டும்... என்று கூறினான். எனது மனதில் தென்றலடித்த அதே வேளை புயலுக்காக அறிகுறிகளும் இருந்தன.

சுதாகர் மீண்டும் அலுவலகம் திரும்பினான். அவன் என்னை பார்ப்பதை தவிர்த்தான். ஏன் என்று புரியவில்லை. தேனீர் இடைவேளையின் போது உணவகத்தின் எதிரெதிரே அமர்ந்திருந்தாலும் அவன் உற்சாகமாக இல்லை என்பதை புரிந்து கொண்டு "என்ன சுதாகர் ஒரு மாதிரி இருக்கிறியள்?" என்றேன் சிறிது நேர மௌனத்தின் பின்னர் "பாமா என்னை மறந்து விடு. நாங்கள் திருமணம் செய்தால் இரண்டு பேருக்குமே பிரச்சினை தான்" என்று கூறினான்.

"வீட்டில என்ன சொன்னார்கள் சுதாகர்?.... என்ர படத்தை காட்டினீங்களே?

"பாமா குழப்பாதையும் உங்கட வீட்டாரைப் போலவே எங்கட வீட்டாருக்கும் இந்த சம்மதத்தில் விருப்பமில்லை. வீண் சண்டை பிரச்சினை வருமெண்டு நினைக்கினம்... மற்றது..."

அவன் இடை நிறுத்தினான்.நான் அதிர்ச்சியுடன் அவனை நோக்கினேன். எந்த எதிர்ப்பு வந்தாலும் முறியடிச்சு இணையவேணுமென்று எனக்குச் சொல்லியிட்டு இப்ப குழம்புறியள். காதலிக்கிறபோது இதை நீங்கள் சொல்லயில்லையே!

"இல்லை பாமா.. பெற்று வளர்த்தவங்கள் சொல்லுறதில நியாயமிருந்தால் நாங்கள் அதைக் கேட்க வேணும் தானே?"

காதலிச்சவனை கைவிடுறது தான் நியாயமா? என்று காட்டமாக கேட்டேன்.அவன் சிறிது மௌனத் தின் பின்னர் கூறினான்.பாமா,எங்கட சமூகத்தவர்கள் உங்கட ஆக்களைப் போல படிச்சது குறைவு.இப்ப தான் படிச்சு முன்னேறலாம்.இதற்கு முந்தி எங்கட பகுதியிலை ஒருதரும் ஏஜீஏ ஆக வரயில்லை.இப்படி உயர்வான ஒரு நிலைக்கு வந்தபின் நாங்கள் உயர் சாதியிலை திருமணம் செய்தால் எங்கட சமூகம் எப்படி முன்னேறுகிறது? எங்கட மத்தியிலும் இப்ப படிச்ச பெட்டையள் இருக்கினம் தானே? அவர் களில் உனக்கு பிடிச்ச ஒருத்தியை கட்டு என்று அப்பா ஒற்றைக்காலில் நிற்கிறார். நான் எவ்வளவோ வாதாடிப் பார்த்தன்.அவர் பிடிவாதமாகவே நிற்கிறார்.யோசித்துப் பார்த்தா அவர் சொல்லுறதில யுள்ள நியாயம் எனக்குப் புரியுது.

சுதாகரனின் கூற்று எனக்கு பெருத்த அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் கொடுத்தது. "கடைசியாக இப்ப என்ன சொல்லுறியள்?" ஆவெசமாகக் கேட்டேன்.அவன் "என் முடிவில் மாற்றமில்லை... குட் பை என்றான். நான் ஆவேசமாக எழுந்தேன். நாளைக்கு என்ர பிரேதத்தில தான் முழிப்பியள்." என்று கத்திவிட்டு ஆவேசமாக புறப்பட்டேன்.


அவன் எதுவித சலனமுமின்றி உட்கார்ந் திருந்தான்.நீர் சொல்லுறமாதிரி செய்யமாட்டீர். என்பது போல அவன் பார்வை இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "காலம் தந்த வலி" நிலாந்தி சசிகுமாரின் முற்றுப் பெறாத கவிதைகளை முன்வைத்து

சி.ரமேஷ்




**நூல்**
முற்றுப் பெறாத கவிதைகள்
**ஆசிரியர்**
நிலாந்தி சசிக்குமார்
**வெளியீடு**
மகுடம்
விலை :300/-

அனுபவச் செறிவு வாய்ந்த மனதுக்கும் உணர்வுக்குமான பெண்மொழி நல்ல கவிதையை உருவாக்குகிறது. ஆணாதிக்க சிந்தனைக்கு எதிரானகலகக் குரலாகவெளிப்படும் பெண்மொழிதன் சொல் முறையால் ஒருபடைப்பாளிசொல்லவந்ததைத் தாண்டிப் பயணிக்கிறது. செழுமையான உயிரோட்டமுள்ள வாழ்வின் நுண்ணிய அனுபவ அடுக்குகளுக்கூடாகப் பிறக்கும் சொற்கொழுவில் மையம் கொள்ளும் பெண்ணின் கவிதைப் புலப்பாடுகள் மனித வாழ்வின் உறவு நிலைச் சிக்கல்களை உயிர்ப்பும் உணர்வும் கொண்டு வெளிப்படுத்தி நிற்கின்றன. பெண்ணுக்கும் சமூகத்துக்குமிடையிலான ஊடாட்டத்தையும் ஆண்மைய வாத சூழலில் அடிமைப்பட்டு வாழும் பெண்ணின் மனோ நிலைகளை விளக்கி நிற்கும் நிலாந்தி சசிகுமாரின் கவிதைகள் சுயவாழ்வின் துயரங்களையும் வலிகளையும் காவித் திரிகின்றன. சமூக அவலங்களையும் பெண்களுக்குஎதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகளையும் எடுத்துரைக்கும் இவரின் "முற்றுப் பெறாத கவிதைகள்" தொகுப்பு தனக்கென விதிக்கப்பட்ட தடைகளைத் தாண்டிதன் முனைப்புடன் எழுகிறது. 94 கவிதைகளைக் கொண்ட இந்த தொகுப்பில் பெரும்பாலான கவிதைகள் மிகச்சிறிய கவிதைகளாகவே காணப்படுகின்றன. நீண்ட கவிதைகள் மூன்று பக்கத்துக்குள் தன்னை முடிவுறுத்திக்கொள்கின்றன.

அதிகார மையவாதத்துக்குள் கட்டுண்டு இருக்கும் பெண்ணின் உட்கிடக்கைகளை வெளிப்படுத்தி நிற்கும் இவரின் பெரும்பாலான கவிதைகள் பெண்ணானவள் அடக்கம், கற்பு, பெண்மை, இரக்கம் என்ற அளவு கோலால் அளக்கப்பட்டு சமூக வேலிக்குள் செட்டைமுறிக்கப்பட்டு முடக்கப்படுவதை எடுத்துரைக்கிறது.

**முற்றுப்பெறாத கவிதைகள்**
**வற்றி விடாத கற்பனைகள்**
**நிறைந்த கனவுகள்**
**நிறைவேறாத ஆசைகள்**
**பாட வேண்டிய பாடல்கள்**
**ஓட்டத்துடன் கூடிய தேடல்கள்**
**இத்தனை இருந்தும் அடங்கி**
**விட்டது வாழ்க்கை**
**நான்கு சுவர்க்குள்**

வாழ்வனுபவங்களுக்கும் துயரனுபவங்களுக்கும் அதிகபட்சமான அழுத்தத்தைக் கொடுத்து நம்மைத் தொட்டுச் செல்லும் கவிதையாய் இக்கவிதை அமைகிறது.

ஈழத்து நவீனகவிதைகளில் ஆர்பரிக்கும் கடல் துயரின் ஊற்றுக் கண்ணாக மனித ஆட்கொல்லியாக உணர்வு பூர்வமாகச் சித்திரிக்கப் பட்டுள்ளது. றஷ்மியின் ஆயிரம் கிராம்களைத் தின்ற ஆடு என்னும் தொகுப்பில் உருத் தெரியாத பேரலையாக விரியும் ஆழிப்பேரலை நாவண்ணனின் "சுனாமிச் சுவடுகள்" கவிதை தொகுப்பிலும் தன்னை நிலைப்படுத்திக் கொண்டதைப் போல நிலாந்தியின் "சுனாமி" கவிதையிலும் உணர்வு பூர்வமாகப் பதிவு செய்யப்படுகிறது.

நிலாந்தியின் கவிதை ஊற்று சுயாதீன இச்சையில் இருந்து பிறக்கிறது. செய்தியை சொல்லும் முறையும் சொல்லும் மொழியும் முதன்மையானது. மொழிப்படுத்தலின் நுட்பத்தைக் கொண்டு இயங்கும் இக்கவிதைகள் மன உளைச்சலின் தருணத்தில் கட்டுண்டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடி அனுபவத்தின் ஊடாகத் தன்னை வெளிப்படுத்தும் இக் கவிதைகள் இருண்மைத் தன்மை யற்றவை.

**அந்தியில் பூக்கும்**
**இந்த நிலாவில் கறைகளைப்**
**பூசியவர்கள்**
**அவர்களின் கறைபடிந்த**
**கைகளையும்**
**சுமந்து கொண்டே**
**திரிகிறார்கள்**

மற்றவர்களை நோக்கி விரல் சுட்டும் பெரும்பாலானவர்கள் தம் பிழையைப் பொருட்படுத்தாதவர்கள். பிறர் செய்யும் தவறுகளை பிழையென்று வாதிட்டுக் கொண்டு தன்னைத் திருத்தாத மனிதர்களை பெண்ணிலை நோக்கில் இக் கவிதை சாடி நிற்கிறது.

ஈழத்துத் தமிழ்ச் சூழலில் சமூகப் பண்பாட்டு வேர்களால் பெண் தன்னைப் பிணித்துக் கொள்கிறாள். சமூகம், பொருளாதாரம், குடும்பம் என அனைத்து கட்டுமானங்களிலும் ஆணை விடக் குறைந்த இரண்டாம் பாலினமாகவே பெண் கருதப்படுகிறாள். இறுக்கமான தளைகளுக்குள் கட்டுண்ட பெண் அதிகாரத்தின் பெயரால் தினமும் சிதைக்கப்படுகிறாள். பெண் மீதுவிதிக்கும் கட்டுப்பாடுகளை, வன்முறைகளை வெளிச்சம் போட்டுக் காட்டும் நிலாந்தியின் "இருக்கிறேன்" கவிதை அதிகார வன்முறைக்குள் அகப்பட்டு தன்னை உருச்சிதைத்து வாழும் பெண்ணின் மனோவியல்பை எடுத்துரைக்கிறது.

இங்கு பெண்மொழி உணர்வினோட்டத்தில் தன்னைக் கையகப்படுத்திக் கொண்டிருக்கிறது. தன்னிலிருந்தும் தனது சுயத்திலிருந்தும் பேசும் பெண் மொழி காலத்தை உண்டுசெரிக்கும் காயத்தின் வலிகளில் இருந்து உருப்பெறுகிறது.

**தாம் சுமந்து செல்லும்**
**சிலுவைகளில் தான்**
**தாம் அறையப்படப்**
**போகிறோம் என்று**
**அறியாமல் பாடசாலை**
**செல்லும் தேவதைகள்**

பாடசாலை சிறுவர்கள் கல்வியின் பெயரால் வதைக்கப் படுவதை இக்கவிதை உணர்வு பூர்வமாகப் பதிவு செய்கிறது. "காமத்திற்கு பலியான சிறார்கள் கவிதையும் சிறுவர் துஷ் பிரயோகத்தை பிறிதொரு தளத்தில் ஆராய்கிறது.

பெண்ணுக்குப் பெருவாழ்வு, பேரனுபவத்தை தருகின்ற தாய்மை, பெண்மையின் தனிச் சிறப்பு. பிரபஞ்சத்தில் ஒருபெண், தாயாக உருமாறிதன் உடலாலும் மனதாலும் செய்யும் தியாகங்களுக்கு இணையாக எதனையும் கூற முடியாது. தாய்மையாவது அன்பின் நிறைவு! அன்பின் விளைவு! அன்பின் வண்ணம்! என்பார் தமிழ்த் தென்றல் திரு.வி.க. தாய்மையின் உன்னதமான நிலையையும் தாய், சேய்க்கான உறவு நிலையையும் உள்வாங்கி எழுதப்பட்ட பெரும் பாலான கவிதைகள் உணர்வுத் தளத்திலேயே கட்டுண்டவை. "தாய்மை", "குழந்தை" முதலான கவிதைகள் பெண் அனுபவிக்கும் தாய்மையின் பூரிப்பை அப்பட்டமாக வெளிப்படுத்தி நிற்கிறது.

வார்த்தை பந்தல்களை உள்வாங்கி படைக்கும் கவிதைகளில் உயிர்ப்பைக் காணமுடியாது. உணர்வு நிலையில் இருந்து விலகி அழகியல் சார்ந்து இயங்கும் இக் கவிதைகளில் யதார்த்தப் பண்புகள் இருப்பதில்லை. அலங்காரங்களுக் கிடையேயும் சொல்லடுக்குகளுக்கு இடையேயும் தன்னைத் தொலைத்து உரத்த கோஷங்கள் வாயிலாகத் தன்னைமுன்மொழியும் இக்கவிதைகள் வெற்று வார்த்தை களுக்கூடாகவே தன்னை வெளிப் படுத்துபவை. வானம்பாடிக் கவிதை களின் தாக்கமும் மு.மேத்தா, வைரமுத்து, பா.விஜய் முதலான கவிஞர் களின் கவிதைகளைப் படித்த அருட்டுணர்வுமே ஈழத்துக் கவிதை களில் இவ்வுணர்வு மேலோங்கு வதற்கு காரணம் எனலாம். இதனை நிலாந்தியின் ஒரு சில கவிதைகளில் காணலாம். "குருதித்தாய்", "வீரத் தாய்" முதலான கவிதைகளில் இதனைக் காணலாம்.

புறநானூற்றில் பெண்கள் தங்களின் பிள்ளைகளுக்கு வீரத் திற்கே சிறப்பிடம் கொடுத்து வளர்த் தார்கள். போரில் விழுப்புண் பட்டு இறக்கும் மகனை பெற்றதையே பெரும் பேறாகக் கருதினார்கள். காக்கைப்பாடினியார் நச்சொள்ளை யாரின் புறம் 278ஆம் பாடலில் முதுமை அடைந்த தாயானவள் தன் மகன் போர்க்களத்தில் புறங் கொடுத்து ஓடினான் என்றுபிறர் சொல்வதைக் கேட்டுபோர்க்களம் செல்வதற்கு முன்பே அவ்வாறு அவன் உண்மையாகவே புறங் கொடுத்து ஓடினான் என்றால் பாலுண்டு வளர்வதற்குக் காரண மாகிய என் முலைகளை அறுத்திடு வேன் என்று கோபமாக வாளைக் கையில் எடுத்துக் கொண்டு போர்க் களத்திற்குச் சென்றாள். அவ்வாறு சென்றவுடன் அங்கு வீழ்ந்து கிடக்கும் பிணங் களில் தன் மகனின் உடலைத் தேடிப் பார்த்தாள். போர்க் களத்தில் இரு துண்டுகளாகிக் கிடக்கும் மகனின் உடலைப் பார்த்த வுடன் அத்தாயானவள் அவனைப் பெற்ற போது அடைந்த மகிழ்ச்சியை விட அதிக மகிழ்ச்சி அடைந்ததைப் புறப்பாடல் விளக்கி நிற்கிறது. அக் காலச் சூழல் பின்னணியை வைத்துக் கொண்டு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்துக்கு போராடப் போன மைந்தனின் விழுப் புண்ணைத் தாய் பார்க்க முடியாது. பரிசீலிக்க முடியாது. எறிகணை வீச்சுக்கு பலியாகிப் போன போராளி களின் வித்துடலை சோதித்தறிந்து தன் மகன் வீரன், வீரனல்லன் எனதாய் முத்திரை குத்துவது யதார்த்தமன்று. மகனைப் இழந்து துன்புற்றுவருந்தும் தாய் எப்போதும் இப்பரிசோதனையில் ஈடுபட மாட் டாள். தாயின் துயரம் அளப்பரியது. அதனைச்சொல்லால் வடிக்க முடி யாது. அனுபவமின்மை யினதும் முதிர்ச்சியின்மையின்மை யினதும் வெளிப்பாடே வீரத்தாய்.

ஒட்டு மொத்தாக நோக்கும் போது இறுக்கமற்ற மொழி நயன மின்றி, எளிமையான சொற்களின் வாயிலாக தன்னை முன்மொழியும் இக்கவிதைகள் சமூக, குடும்ப, நிறுவனவெளிகளில் தன்னை நிலைப் படுத்திக் கொள்ளவிளையும் பெண் இருப்பைப் பேசுகிறது. இக்கவிதை யில் கையாளப்பட்ட மொழி வலிந்து தேடப்பட்டவை அல்ல. அதில் பாவனை என்பது அறவேயில்லை. ஆண்மைய அறிவை, சிந்தனையை அருட்டக் கூடிய வகையில் படைக்கப்பட்ட இக்கவிதைகள் சமூகத்தில் பெண் எதிர் நோக்கிய வலிகளையும் வேதனைகளையும் தாங்கிமுற்றுப் பெறாதகவிதையாய் தொடர்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலக நிறுவனம்

NOOLAHAM
FOUNDATION

## ஓலைச்சுவடிகளை ஆவணப்படுத்துவோம்

ஆவணங்களில் மிகவும் முக்கியமானவை ஓலைச்சுவடிகள்.
எமதுபாரம்பரியஅறிவுத்தொகுதிகளைப்பதிவுசெய்துவைத்திருக்கும்
மரபுரிமைச்சொத்துக்களாகஓலைச்சுவடிகள்விளங்குகின்றன.
சுவடிகளேஎமதுஅறிவுப்பாரம்பரியத்தினையும்பண்பாட்டினையும்
பறைசாற்றும்பதிவுகளாகஅமைகின்றன.ஆனால்அவற்றில்பெரும்பாலானவை
ஏற்கனவேஅழிவடைந்துள்ளதோடுஎஞ்சியவையும்மிகுந்தஅழிவாபத்தில்உள்ளன.

ஈழத்தின்சுமார் 55,000க்கும்அதிகமானஆவணங்களையும்
15,000க்கும்அதிகமானபதிவுகளையும்செய்துள்ளதன்னார்வ
அமைப்பானநூலகநிறுவனம்இப்பொழுதுஓலைச்சுவடிகளையும்ஆவணப்படுத்திவருகிறது
உங்களிடம் காணப்படும் ஓலைச்சுவடிகளை எண்ணிம முறையில் பதிவுசெய்ய
நூலக நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.
உங்கள்இருப்பிடத்துக்கேவந்துபாதுகாப்பாகநவீனதொழிநுட்பத்தினைப்பயன்படுத்தி
எண்ணிமமுறையில்பதிவுசெய்து DVDகளாகத்தருவதோடு
காப்புப்படிகளையும்உருவாக்குகிறோம்.

### "வாருங்கள் ஊர் கூடி ஆவணப்படுத்துவோம்"

நூலக நிறுவனம்
185, ஆடியபாதம் வீதி,
கொக்குவில், யாழ்ப்பாணம்
தொ.பே: 0094212231292
noolahamfoundation@gmail.com

**ஈழத்து தமிழ் பேசும் சமூகங்களின் பல்லாயிரம் ஆவணங்களைக் கொண்ட எங்கிருந்தும் எவரும் எந்நேரமும் இலவசமாகப் பயன்படுத்தக்கூடிய மாபெரும் அறிவுக்களஞ்சியம்**

**aavanaham.org | noolaham.org | noolahamfoundation.org**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org